# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 16 சனிக்கிழமை (30 – 05 – 1998) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 52


# மாங்குளத்தைப் பிடிக்க ஒலுமடுவிலிருந்து நகர்வு!

## தடுத்து நிறுத்துவதில் புலிகள் தீவிரம்

வவுனியா, மே 30

மாங்குளத்துக்குக் கிழக்கே ஒலுமடு, அம்பகாமம் பகுதியில் இருந்து மாங்குளத்தை நோக்கி பெரும் படை நகர்வு ஒன்றை ஸ்ரீலங்காத் துருப்புகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

இந்த நகர்வைத் தடுத்து நிறுத்தி முறியடிப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளும் தீவிரமாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனால் இப்பிரதேசத்தில் கடும் சண்டை மூண்டிருக்கின்றது.

குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர், டாங்கிகள் ஆகியவற்றின் தாக்குதல்களுடன் —

நேற்று முன்தினம் காலை சூரியோதயத்துக்கு முன்னர் — சுபநேரத்தில் —

படையினரின் நகர்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் பல தடவைகள் படையினர் முயற்சித்த போது அம்முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்த புலிகள், இப்போதும் படை நகர்வை முறியடிப்பதற்காக முழு மூச்சில் யுத்தத்தில் குதித்திருப்பதாகவும் —

அதனால் அப்பிரதேசத்தில் உக்கிரச் சண்டை மூண்டிருப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் இருந்து நகர முயலும் படையினருக்கு உதவுவதற்காக வவுனியா விமானப் படைத் தளத்திலிருந்து நேற்று முழு நாளும் கிபிர் ஜெட்களும், ஹெலிக்கொப்டர்களும் யுத்தமுனை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு நாள் சமரில் பத்துப் படையினர் பலி!

கொழும்பு, மே 30

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற சண்டையில் 10 படையினர் உயிரிழந்தனர். 60 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. எனினும் ஐந்து படையினர் மட்டுமே உயிரிழந்ததாகவும், 40 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு நாள் சண்டையில் காயமடைந்த 60 படையினர் அநுராதபுரம் இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

அம்பகாமத்தில் இருந்து பழைய கண்டி வீதி ஊடாக படையினர் நகர்வதாகவும் —

அவர்களின் நோக்கம் கிளிநொச்சி நோக்கி நகர்வதா? அல்லது மாங்குளம் நோக்கி நகர்வதா? என்பது தெரியவில்லை எனவும் —

— வவுனியாவில் சில செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மாங்குளத்துக்குத் தெற்கே படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 30 முதல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். உதவி மேயருக்கு பாதுகாப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாநகரசபை உதவி மேயர் த. திருநாவுக்கரசின் இருப்பிடத்துக்கும், அலுவலகத்துக்கும் பொலீஸாரும் இராணுவத்தினரும் பலத்த பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

யாழ். மாநகர மேயர் திருமதி சறோஜினி தேவி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே உதவி மேயருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய மாநகரசபை உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

சறோஜினி யோகேஸ்வரன் சுடப்பட்ட சமயத்தில் அவருடன் கூடவிருந்து காயமடைந்து பின்னர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த மாநகரசபை உறுப்பினர் எஸ். பரமசிவத்துக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (உ-5)

## கிழக்கில் 6 மோ. சைக்கிள்கள் கடத்தப்பட்டன

கொழும்பு, மே 30

மட்டக்களப்பில் கடந்த ஒரு வாரத்தில் பொதுமக்களின் ஆறு மோட்டார்சைக்கிள்கள் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படைகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் மேற்கொள்ளும் செயலே இது என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## இரு புலிகள் உயிரிழப்பு

வவுனியா, மே 30

வவுனியா செட்டிகுளம் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் மேஜர் ஜெரி (கார்த்திகேசு விஜயபாலன் — யாழ்ப்பாணம்) என்பவரும் —

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதலில் நங்கைமணி (சோழராசா காந்திமதி — யாழ்ப்பாணம்) என்பவரும் — தமது தரப்பில் களப்பலியானதாக புலிகளின் குரல் தெரிவித்தது.

(உ-3)

## யாழ். நகரில் நேற்று திடீர் சோதனை!

யாழ். நகர்ப் பகுதி நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு வாகனங்களில் வந்திறங்கிய படையினரால் திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டது.

அங்கு நின்ற ஆண்களும், பெண்களும் அடையாள அட்டை மற்றும் உடற் சோதனைக்குட்படுத்தப் பட்டார்கள்.

அவர்களின் உடைமைகளும் தீவிர பரிசோதனை செய்யப்பட்டன.

இத்திடீர் சோதனைகாரணமாக நகரில் நிலவிய பதற்றம் மாலை 5 மணிக்குத் தணிந்தது.

(உ-3-9-100-139)

## தட்டாதெருச்சந்தியில் சோதனைகள் தீவிரம்

கே. கே.எஸ். வீதி வழியாக யாழ். நகருக்குள் பிரவேசிக்கும் தட்டாதெரு சோதனை நிலையத்தில் கடந்த சில தினங்களாக சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகருக்குள் வரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அச் சோதனை முகாமில் தீவிர சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவதால் மக்கள் கியூவில் நீண்ட நேரம் காத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அரச, தனியார் ஊழியர்கள் காலதாமதமாக அலுவலகங்களுக்கு சமுகமளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-86-100-139)

### தமிழகத்திலிருந்து

## இங்கு திரும்பமுயன்ற ஏழு அகதிகள் கைது!

மணிலா, மே 30

தமிழ்நாடு மண்டபம் அகதி முகாமில் இருந்து பொலீஸாரின் முன் அனுமதி இன்றி வெளியேறி, தமது சொந்த நாடான இலங்கைக்கு வள்ளம் மூலம் வரமுயற்சித்ததாகக் கூறப்படும் ஏழு ஈழத் தமிழர்களை தமிழக பொலீஸார் நேற்றுக்காலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அகதிகள் அனைவரும் மன்னார் மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

(உ-7)

## அகதிகள் கப்பல் சேவை ஓரிரு நாள்கள் தாமதம்

திருகோணமலை, மே 30

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்—

இந்தச் சேவை ஓரிரு நாள்கள் தாமதமாக இடம்பெறும் என திருகோணமலை பிரதேச செயலர் அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சேவையை மேற்கொள்ள ''லங்கா முடித'' கப்பல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் இக் கப்பலில் பொருள் இறக்கும் பணி முடிவடையாத காரணத்தால் இக் கப்பல் நேற்று திருமலைக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் — யாழ்ப்பாணம் செல்வதற்காக மன்னார் பேசாலையில் இருந்து 982 அகதிகள் நேற்று திருமலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

(உ-3)

## இராஜா அரியரத்தினம் காலமானார்

யாழ்ப்பாணம், மே 30

ஈழத்தின் தலைசிறந்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான இராஜா அரியரத்தினம் (வயது 83) கடந்த புதன்கிழமை சென்னையில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## பிலிப்பீன்ஸில் நடிகர் ஜனாதிபதியாகத் தெரிவு

மணிலா, மே 30

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதித்



தேர்தலில் இதுவரை உபஜனாதிபதியாகப் பணியாற்றிய ஜோசப் எஸ்ட்ரடா வெற்றியீட்டியிருக்கின்றார்.

ஜனாதிபதி பிடல் ராமோஸின் பதவிக்காலம் முடிவடைவதை அடுத்து எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி அவர் பிலிப்பீன்ஸின் 13 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்பார்.

முன்னாள் நடிகரான எஸ்ட்ரடா பத்துப் பேர் போட்டியிட்ட இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடி ஏழு லட்சம் வாக்குகளைப் பெற்றார். இரண்டாவதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி மாணவி
செல்வி கோமளாவின் அன்புத் தந்தையாரான

### குணபாலசிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

98 வர்த்தகப் பிரிவு மாணவர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி.
(சி/3885)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா துரைச்சாமி

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பொலீஸ் திணைக்களம், பிரதம செயலாளர், அரியாலை ஸ்ரீ சத்திய சாயி பாபா சமித்தி)

அரியாலையைச் சேர்ந்த சின்னையா துரைச்சாமி 28-5-98 இல் காலமானார்.

இவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. சிவராஜா
(மைத்துனர்)
46, கலைமகள் வீதி,
அரியாலை.
(56423)

### திருமதி வினாசித்தம்பி அன்னப்பிள்ளை

திருமதி வினாசித்தம்பி அன்னப்பிள்ளை (அன்னபூரணம்) 29-5-98 இல் காலமானார்.

இவர் மீசாலை கிழக்கு கந்தையா வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், பாலச்சந்திரன் (மருந்தாளர், அனுராதபுரம் மாவட்டம்), புவனேந்திரன் (ஆசிரியர், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நீலாயதாட்சி (R. M. p., அரசினர் வைத்தியசாலை, பரசங்கவேவா), கிருஸ்ணதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், அரவிந்தன், சிவதர்சன், சுதர்சன், குபேரன், யெஞ்சி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், மங்கையர்க்கரசி, பாறுவதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-5-98) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. வினாசித்தம்பி
(கணவர்)
மீசாலை கிழக்கு.
(56420)

### செல்வி வைஷ்ணவி உபேந்திரன்

சிவன்கோயிலடி சாவகச்சேரியைச் சேர்ந்த உபேந்திரன் (கிராம உத்தியோகத்தர் — திருமதி பத்மாசனி உபேந்திரன் (ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்) ஆகியோரின் ஏக புத்திரி வைஷ்ணவி 28-05-98 இல் காலமானார்.

அன்னார் கேதுஷனின் அன்புத் தங்கையும், திருமதி ம. கணபதிப்பிள்ளையின் அன்புப் பேர்த்தியாரும், பிரபாகரனின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரி சண்ணாடிப்பிட்டி மயானத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

தகவல்:
க. உபேந்திரன்
(தந்தை)
சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.
(சி/3884)

### பொன்னுச்சாமி பஞ்சாட்சரம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்டவராகிய பொன்னுச்சாமி பஞ்சாட்சரம் (இளைப்பாறிய பிரதம இலிகிதர், சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம், வவுனியா) 29-5-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி, நாகரத்தினம் தம்பதியினரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அருமைக் கணவரும், இராஜதேவி, பத்மாவதி, சற்குணதேவி, தெய்வேந்திரராஜா, சகுந்தலாதேவி, காலஞ்சென்றசிங்கராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசேந்திரம், இரத்தினசிங்கம், சிவசுப்பிரமணியம், புஷ்பாதேவி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சுப்பிரமணியம், காலஞ்சென்ற வாலாம்பிகை, புவனேஸ்வரி, சொர்ணகாந்தி, குலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (30-05-98) சனிக்கிழமை காலை 8-00 மணியளவில் சித்தன்கேணியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. பரமேஸ்வரி
(மனைவி)
(56417)

## முதலுதவிப் பயிற்சி

திருநெல்வேலி மே 30

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையும் இணைந்து நடத்தும் முதலுதவிப் பயிற்சி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மகளிர் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. மகளிர் அடிப்படை மனையியல் பயிற்சி பெற்று வரும் நூறு யுவதிகள் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ- 135)


### நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்.
30-05-98 சனி முதல்
அகல வெண் திரையில்
மோகன், கார்த்திக்
மௌனராகம்
(பெண்கள் பார்க்க வேண்டிய குடும்பப் படம்)
காட்சி:- 10-30, 2-30
(56419)

### லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
TITANIC
Part I & II ஒரே தடவையில் காண்பிக்கப்படுகிறது
மாணவர்கள், பெண்கள் பார்க்கவேண்டிய பரிதாபமான உண்மைச் சம்பவம்)
நேரம்:- 10- 0, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56294)

### ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
கார்த்திக், சௌந்தர்யா நடித்த
பொன்னுமணி
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
கடைசி வாரம்
(சி/3830)


### நீங்கா நினைவில்



மறைந்த
உயர்திரு
கணபதிப்பிள்ளை
செல்வராசா
(Grama Officer,
Navaly North.)

தகவல்:
செ. செல்வராணி
[மனைவி]
நவாலி வடக்கு
(56421)

## தேங்காய்கள் எடுத்துவர தடை தளர்வு

தென்மராட்சி, மே 30

மிருசுவில் வடக்குப் பகுதி மக்கள் மிருசுவில் முகாம் பாதுகாப்பு அரண் ஊடாக தேங்காய்கள் கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டுள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த காணி உரிமையாளர் ஒருவர் தினமும் 25 தேங்காய்களைக் கொண்டுவர அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

( ஐ- 117)

## மிருசுவில் மக்களுக்கு பாஸ்

தென்மராட்சி, மே 30

மிருசுவில் முகாம் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விசேட பாஸ் மிருசுவில் முகாமில் வழங்கப்பட்டுவருகிறது.

பாஸினைப் பெறுவதற்கு தினமும் மக்கள் வரிசையில் நிற்பதைக் காண முடிகிறது.

[ஐ-117]

## பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு, மே 30

ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு யாழ். இந்துக் கல்லூரியில் இன்றும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

(உ-152)

## கூட்டம்

வலிகாமம்தெற்கு, மே 29

சீடா கல்வி அபிவிருத்தி திட்ட மாதாந்த மீளாய்வு சண்காணித்தல் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கோப்பாயில் உள்ள யாழ். கல்வி வலயம் இரண்டு அலுவலகத்தில் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தலைமையில் நடைபெற உள்ளது.

(உ-152)


வடமராட்சியில்...
### STUDY CIRCLE
ஆலங்கட்டை வீதி,
கொற்றாவத்தை.
98 O/L DAY CLASS
ஆரம்பம்:
ஜூன் 1 திங்கள் 8.00 A M
கணிதம்: பரம்
தமிழ்/சமயம்: ரதிஸ்
விஞ்ஞானம்: குமாரதாசன்
சமூகம்: மனோகரன், சுதாகர்
ஆங்கிலம்: சுதாகர்
வர்த்தகம்: ராஜகுமார்
சித்திரம்: செந்தூரன்
★ ஆண்டு 1 தொடக்கம் O/L வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
★ விசேட ஆங்கில வகுப்பு நடைபெறுகிறது.
ஆசிரியர்: சுந்தரராஜன்
(சி/3863)

யாழ்
### றீகல் வெண் திரையில்
25 அடி அகலத் திரையில்
மீண்டும்
இன்று முதல்
காட்சி:- 10-30 — 2-30
சுப்பஸ்ரார் ரஜனி
நக்மா, ரகுவரன்
பாட்ஷா
(நேரடி CD யில்)
சனி, ஞாயிறு மட்டும்
காலை 8 30 மணிக்கும்
தினசரி மாலை 5மணிக்கும்
STAR SHIP
(ராட்சத எறும்புகளின் அட்டகாசத்தைப் பார்க்கத் தவறாதீர்கள்)
(56424)

தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்



### அருண்
புளொக் தயாரிப்பாளர்
அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2000
பிரிவு 2 ஆரம்பம்: 31-05-98
காலை 8-30 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. வரதராஜன் |
| கணக்கீடு | — திரு. சௌந்தி<br>— திரு. முகுந்தன் |
| வணிகக்கல்வி | — திரு. முரளி |
| புள்ளி விவரவியல் | — திரு. திரிகரன்<br>— திரு. அம்பி |
| அளவையியல் | — திரு. R. P. சர்மா |
| தமிழ் | — திருமதி மீரா |
| இந்து நாகரிகம்<br>இந்து சமயம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — திரு. இக்னேசியஸ் |
| நாடக — அரங்கியல் | — திரு. கந்தவேள் |

A/L 99, 98, பிரிவு I II நடைபெறுகின்றன.
குறிப்பு: திரு. வரதராஜன் ஆசிரியர் அவர்களின் பொருளியல் வகுப்பு மோகன் ஆசிரியர் அவர்களினால் சில தினங்களுக்கு தற்காலிகமாக நடைபெறும்.
(56418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சார்க்' மாநாட்டு காலத்திலே புலிகள் தாக்குதல் திறனை காட்ட முயலலாம்!

எதிர்பார்க்கப்பட்ட படி வன்னியில் ''வெற்றிஉறுதி'' இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகத் தகவல் — ஆனால் முன்னரைப்போல் ஆர்ப்பாட்டம் இல்லாமல் — மிகமெதுவாக அதேசமயம் உறுதியாக (Slow And Steady) என்ற பாணியில். ஆர்ப்பாட்டத்துடன் ஆரம்பித்து பின்னர் வாங்கிக்கட்டிக் கொள்வதில் ஏற்படும் அவப்பெயரிலும் பார்க்க, சத்தமின்றி ஆரம்பித்து வெற்றி கிட்டினால் அதன் பின்னர் அதனை ஆர்ப்பாட்டமாக முழக்குவதுமேல் என்று யுத்தத்தை நடத்திச் செல்பவர்கள் எண்ணியிருக்கக் கூடும்.

ஒலுமடுவுக்கு அப்பால் அம்பகாமம் பகுதியை நோக்கி முன்னேற முயலும் ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்புகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்து மாலை வரை சண்டை தொடர்ந்த தாகக் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப்படையின் உதவியுடன், டாங்கிகள் மற்றும் ஆட்லறிகளின் தாக்குதலுடன் படையினர் முன்னேற முயற்சிப்பதாகவும் —

படைகளை எதிர்த்துப் புலிகள் உக்கிரதாக்குதல் நடத்தி வருவதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தின் படைநகர்வு முயற்சி ஆரம்பிக்கப் பட்டிருப்பதையும் —

அதனால் இருதரப்புக்கும் இடையில் கடுஞ்சண்டை மூண்டிருப்பதையும் —

புலிகள் தரப்பு ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

ஆனால் நேற்றுப் பிற்பகல் வரை இந்த நகர்வு குறித்து காழும்பில் படைத்தலைமயகம் மௌனம் சாதித்துருகிறது.

நகர்வில் வெற்றிகிட்டினால், சில வேளைகளில் ஆர்ப்பாட்டமான அறிவிப்புக்கள் வரக்கூடும்.

மாறாக—

கடந்த மாதம் 20 ஆம் திகதி ஒலுமடுப்பகுதியில் முன்னேற முயன்று 50 –க்கும் அதிக படையினரையும், மூன்று கவசவாகனங்களையும் இழந்தது போல் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டால் —

தற்போதைய படை நகர்வு முயற்சி பற்றி அசுமாத்தமே காட்டாமல் அமுக்கி விடக் கூடும்.

உண்மை நிலை என்ன என்பது அடுத்து வரும் நாள்களில் அம்பலத்துக்கு வரலாம் என எதிர்பார்க்கலாம்,

ஆனையிறவு - கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள படைகள் கூட — ''வெற்றி உறுதி'' நடவடிக்கையின் ஒருகட்டமாக தெற்கு நோக்கி முன்னேற முயலக் கூடும் என்று களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பளை, ஆனையிறவு, கிளிநொச்சிப்பகுதியில் 54 ஆவது டிவிஷன் படையணி நிலை கொண்டுள்ளது.

மிக அண்மைக்காலத்தில் மேஜர் ஜெனரல் பதவி உயர்வைப் பெற்றுக் கொண்ட லொஹான் குணவர்த்தன இந்தப் படையணிக்குத் தலைமை தாங்குகிறார்.

புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை பெருத்த எடுப்பில் மேற்கொள்ளக் கூடியதாக அவரின் கீழ்உள்ள படையணி பலப்படுத்தப் பட்டு, ஆயத்தப்படுத்தப் பட்டு வருவதாகத் தெரிகிறது.

மாங்குளத்துக்குத் தெற்கே இருந்து வடக்கு நோக்கி படைநகர்வு ஆரம்பிக்கப் படும் அதே சமயம், அவர்களுடன் சேர்ந்து இணைந்து கொள்வதற்காக கிளிநொச்சியில் இருந்து தெற்கு நோக்கியும் ஒரு படைநகர்வு இடம் பெறக் கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதற்காகவே கிளிநொச்சியில் துருப்புக்கள் குவிக்கப் படுகின்றன. குடாநாட்டில் தீவகப்பகுதியில் நிலை கொண்டிருந்த சுமார் இரண்டு பட்டாலியன் துருப்புக்கள் [ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் படையினர்] கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதனால் இதுவரை இராணுவத்தினரின் பொறுப்பில் இருந்த தீவகம்—இராணுவம் வாபஸ் பெறப்பட்டு—கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் தமது வட பகுதி தலைமையகத்தை வைத்திருக்கும் கடற்படைப் பிரிவு அங்கிருந்தபடி தீவகத்தின் ஏனைய பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவகத்தில் இருந்து பெரும்பாலும் இராணுவம் விலக்கப் பட்டுவிட்டதால் பூநகரியில் நிலைகொண்டுள்ள புலிகள் அங்கிருந்தபடியே பரந்த தீவகப் பிரதேசம் மீது 'கண்' வைக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

சில டசின் படகுகளில் பூநகரியில் இருந்து வரக் கூடிய புலிகளை முறியடிக்கக் கூடிய பலமும், ஆளணி வளமும் பரந்த தீவகப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள கடற் படையினருக்கு உள்ளன என்று கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி இராணுவ விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

என்றாலும் யதார்த்தத்தின் இத்தகைய நிகழ்வு நிகழும் போதுதான் அத்தகைய பலப்பரீட்சை முடிவு என்ன




என்பதை அறிய முடியும்.

வன்னி யுத்தத்தில் தமது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய நிலையில் உள்ள புலிகள் பூநகரியில் இருந்து தீவகத்தை நோக்கிப் பெருந்தாக்குதல் ஒன்றுக்கு இப்போதைய நிலையில் ''கண்'' வைப்பர் என்பதும் சந்தேகத்துக்குரியதே.

தீவகத்தின் பாதுகாப்புப் பொறுப்பு, வட பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள படைகளின் கட்டளைத் தளபதி என்ற முறையில் மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவின் கீழ் வந்தாலும்—

கடற்படையினரின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே தீவகம் இருக்கும் எனத் தெரிகிறது.

இத்தகைய மாற்றம் தீவகத்தில் கடந்த 7 ஆண்டுகளாக நிலை கொண்டிருக்கும் ஈ. பி. டி. பி. யினரையும் குழப்பத் தவறவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

இக் குழப்பத்துக்கு முக்கியமாக இரு காரணங்களை ஊகிக்க முடிகிறது.

ஒன்று —

அண்மைக்காலமாக கடற்படையினருக்கும், ஈ. பி. டி. பியினருக்கும் இடையேயான முறுகல் நிலை உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. கடந்த வருடம் நயினாதீவுக்கு அண்மையிலும், பின்னர் ஊர்காவற்றுறை துறையிலும் கடற் படையினரும், ஈ. பி. டி. பி. யினரும் மோதிக் கொண்டதும், இராணுவ, பொலீஸ் அதிகாரிகளின் தலையீட்டை அடுத்து சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டதும் தெரிந்ததே.

இந்த நல்லுறவின்மை ஒரு காரணம்.

இரண்டு —

தீவகத்தில் இராணுவம் வாபஸ் பெற்று அங்கு பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இவ்வேளையில், அங்கு தொடர்ந்து நிலை கொள்வது உகந்ததா? பாதுகாப்பானதா? தனித்திருக்கும் — தனித்தியங்கும் — ஈ. பி. டி. பி. முகாம்கள் மீது புலிகள் திடீர்த்தாக்குதலை நடத்தினால் அவசர உதவிகளை முன்னர் இராணுவத்தினரிடம் இருந்து எதிர் பார்த்தது போல கடற்படையினரிடம் இருந்து எதிர் பார்க்கலாமா? — இவ்வாறான கேள்விகள் ஈ. பி. டி. பி, தலைமையகத்தில் எழுந்திருப்பது மற்றொரு காரணம்.

அதே நேரம் நீண்டகாலம் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசியல் ரீதியாக தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்ட பின்னர் திடீரென தீவகத்தைக் கைவிடலாமா? தீவகத்தில் இருந்து விலகினால், தீவகத்தில் ஒரு படைப் பிரிவாக நிலை கொண்டிருப்பதற்காக அரசினால் வழங்கப்படும் உதவிகள் திடீரென இல்லாமல் போகும் வாய்ப்பு ஏற்படுமே? அதனால் அமைப்புக்கான வருமானம் பாதிக்கப்படுமே? போன்ற கேள்விகளும் அக்கட்சியின் உயர் மட்டத்தில் எழுந்திருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பியை பொறுத்தவரை தீவகத்தில் இருந்து இராணுவம் வாபஸ் பெற்றது ஒரு நெருக்கடியான காலகட்டத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கூறலாம்.

★ ★ ★

## சார்க்கும் கொழும்பு கெடுபிடிகளும்

இன்னும் ஐந்து வாரங்களில் கொழும்பில் 'சார்க்' மாநாடு நடைபெறவிருக்கிறது. இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஏழு தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றவிருக்கின்றனர்.

இந்தியாவும், பாகிஸ்தானும் மாறி மாறி ஏட்டிக்குப் போட்டியாக அணு வெடிப் [illegible] இந்தப் பிரதேசத்தை அணு ஆயுத வல்லாதிக்க வலயமாக ஏற்படுத்தியுள்ள இவ்வேளையில் இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் கொழும்பு மாநாட்டில் ஒரு மேசைக்கு வரவிருக்கிறார்கள்.

இதனால் இம்மாநாடு நடைபெறும் வேளையில் உலக வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் கவனம் கொழும்பின் பக்கம் திரும்பியிருக்கும் என்பது நிச்சயம்.

நாட்டில் பெரிய தாக்குதலையோ, சேதங்களையோ, இச்சந்தர்ப்பத்தில்ஏற்படுத்துவதன் மூலம் தமது விடுதலைப் போராட்டத்தின் மீது உலக கவனத்தைத் திருப்பலாம் என்று எண்ணி விடுதலைப் புலிகள் தாக்குதல் எதனையும் நடத்த முயற்சிக்கலாம் என அரசு உயர் வட்டாரங்கள் எதிர் பார்க்கின்றன. அதனால் சார்க் மாநாடு முடியும் வரை அதி உச்ச உஷார் நிலையில் இருக்கும் படி படைகளுக்கு உத்தரவிடப் பட்டிருப்பதாக அறிய வருகிறது.

புலிகள் வேறு தாக்குதல்

**பாசுபதன்**

நடவடிக்கையில் ஈடுபடாமல் இருக்க வேண்டுமாயின், புலிகளின் முழுக்கவனத்தையும் வன்னி யுத்த முனைப் பக்கம் திருப்ப வைக்க வேண்டும் என்றும்–

இதற்காகவேனும் வன்னியில தற்போது மந்த நிலையில் இருக்கும் யுத்தத்தை 'சார்க்' மாநாடு முடியும் வரை பதற்றமாக வைத்திருக்க வேண்டும் என்றும்– பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இதுவரை காலமும் கொழும்பில் சற்று ஓய்ந்திருந்த தமிழருக்கு எதிரான பாதுகாப்புக் கெடுபிடிகள் 'சார்க்' மாநாட்டை எதிர் பார்த்து மீண்டும் களைகட்டத் தொடங்கியுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு நேரத்தில் தாம் கொண்டு வந்த விசேட கவன ஈர்ப்புப் பிரேரணையை அடுத்து கொழும்பில் தமிழருக்கு எதிரான பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் குறைந்து விட்டதாகத் திருப்திப்பட்டுக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தோஷத்துக்கு மண் வீழ்ந்துள்ளது. கொழும்பில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியுள்ளது. வழக்கமாகக் குண்டு வெடிப்புகளுடன் முருங்கை மரத்தில் ஏறும் வேதாளம் 'சார்க்'மாநாட்டு ஆயத்தங்களுடன் இம்முறை முருங்கை மரத்தில் ஏறியிருப்பதுதான் வித்தியாசம்.

★ ★ ★

## உதயனுக்கு எச்சரிக்கை?

யாழ். மேயர் சரோஜினி யோகேஸ்வரன் படுகொலையையடுத்து, சங்கிலியன்படையின் அறிக்கைகளையும், புங்குடுதீவில் வைத்து புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர் ஒருவர் அளித்த பேட்டியையும் பிரசுரித்து பகிரங்கப் படுத்தியமைக்காக 'உதயன்' ஆசிரியபீடம் குறித்து இராணுவ வட்டாரங்களில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாக அறியவருகிறது.

சுதந்திரமாக செய்தி வெளியிடும் உரிமையை ''உதயன்'' எல்லை மீறிப் பயன்படுத்துவதாக இராணுவ உயர் வட்டாரங்களில் ஓர் அபிப்பிராயம் நிலவுவதாகவும் ஒரு தகவல்.

உதயனின் இத்தகைய போக்கு யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கட்டி எழுப்பும் அரச, படைதரப்புகளின் முயற்சிகளுக்கு குந்தகமாக அமைந்துவிடும் என்றும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

சில அரச அதிகாரிகள், சிலதமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் போன்றோரும் உதயனுக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு தூபம் போட்டு விசிறி வருவதாகவும் தெரிகிறது.

இது விடயத்தில் உதயன் பத்திரிகாசிரியருக்கும், இராணுவச் செய்தியாளருக்கும் ஆலோசனை வழங்கும் விதத்திலான ஓர் அறிவுறுத்தல் கடிதத்தை ஆரம்பத்தில் வழங்கிப்பார்த்தால் என்ன என்று சில இராணுவ உயரதிகாரிகள் கருதுவதாகத் தெரியவருகிறது.

எனவே அத்தகைய கடிதம் ஒன்று உதயன் ஆசிரியருக்கு எவ்வேளையிலும் கிடைக்கக் கூடும்.

புலிகளைத் தடைசெய்வது தொடர்பான அறிவித்தலை அடுத்து வெளியான விசேட வர்த்தமானிப் பிரசுரத்தில் புலிகளுடன் தொடர்பு வைப்பதும், புலிகளின் பிரசுரங்களை வெளியிடுவதும் கடுமையான குற்றங்கள் எனப் பிரகடனப்படுத்தப் பட்டிருந்தது.

ஆனாலும் இந்த ஏற்பாடுகள் பத்திரிகைச் சுதந்திரத்தில் தலையிடுவதாக வெகுஜனத் தொடர்பு சாதன வட்டாரங்கள் ஆட்சேபம் கிளப்பியதை அடுத்து, இந்தச்சட்டவிதிகள் பத்திரிகையாளர்களுக்கு பொருந்தா என நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பகிரங்கமாக அறிவித்திருந்தனர்.

எனவே இத்தகைய சட்டவிதிகளுக்குகீழ் ஆலோசனையோ எச்சரிக்கையோ தெரிவிக்கும் கடிதம் ஒன்றை ''உதயன்'' ஆசிரியருக்கு அனுப்பி வைப்பது தேசிய மட்டத்தில் — வெகுஜன தொடர்புசாதன அமைப்புக்கள் மத்தியில் — பெரும் கண்டனங்களையும், ஆட்சேபங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்துவனவாக அமைந்து விடும் என படை உயர் அதிகாரிகள் கருதுகின்றனர்.

எனவே வெகுஜனத் தொடர்பு சாதன அமைப்புக்கள் மட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாத வகையில் நாசூக்கான சொற்பிரயோகத்துடன் ''உதயன்'' பத்திரிகைக்கு அறிவுறுத்தல் கடிதம் ஒன்றை வழங்குவது குறித்து ஆராயப்படுவதாகப் படை வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.

★ ★ ★

## வவுனியா நிலைமை

வன்னியில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடியாக வவுனியா நகர் படையினரின் கெடுபிடி நகராக மாறியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'வெற்றி உறுதி' படையினரின் 'வழங்கல்' பகுதியாகவும் —

அதே நேரம், தமிழ் மக்கள் பிறபகுதிகளுக்கு புறப் பட்டுச் செல்லும் பகுதியாகவும் —வவுனியாநகர் விளங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவிக்காத நல்ல நிலையில் உள்ள சைனா வயலின் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: 499/1, பருத்தித்துறை றோட், நல்லூர்.
[56338]

### மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது அரசதிணைக்கள உத்தியோகத்தருக்கு ஆசிரியராக அல்லது அரச நிறுவனங்களில் தொழில் புரியும் அழகிய மணமகள் தேவை. இல. 741, C/O உதயன், யாழ்ப்பாணம். (56254)

### ஆங்கில சிங்களக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம், சிங்களம் தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு; இல. 730, C/O உதயன், யாழ்ப்பாணம்.
(55286)

### வீடு விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, கற்பக விநாயகர் ஆலய வீதியில் விநாயகர் களஞ்சியத்திற்கு முன்புறத்தில் எல்லா வசதிகளுடனும் அமைந்த வீடு, கடை 23/4 பரப்பில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ந. செல்லையா, உரும்பிராய் வடக்கு. [56346]

### காணவில்லை

பிறவுண் நிற நல்ல இன பசுக்கன்று ஒன்றைக் காணவில்லை. பசுக்கன்றைக் கண்டவர்கள் எம்மிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். பா. அமுதன் ஐயா, கற்பகப்பிள்ளையார் கோயில், இருபாலை, கோப்பாய். [சி/3859]

### தவறிவிட்டது

ப. சேபாலன் பழனி ஆண்டி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 490692630X தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாத்தில் ஒப்படைத்து உதவவும். [56397]

ஆரியகுளம் சந்திக்கும், முத்திரைச்சந்திக்கும் இடையில் 29-05-98 நேற்று ஒரு கை மணிக்கூடு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். K. வாசன், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, இல. 45/4. நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [56409]

### O/L MATHS

ஒரே அமர்வில் Distinction Credit பெறுபேறடைய இதுவரையும் சித்தியடையாதவர்களும், புதியவர்களும், ஆரம்பத்திலிருந்து (வாரந்தோறும் 5 மணித்தியாலம்) கற்பிக்கப்படுவர், ஆசிரியர் இல. 85, சிவன்கோயிலடி' சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [56342]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) கல்பேட்ஸ் ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [56405]

### மணமகள் தேவை

ஏழு செவ்வாய் உள்ள டொக்டர் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; செ. விஜயரெத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். [56408]

### கோழிக்குஞ்சு

பிறிமா புறோயிலர் குஞ்சுகள் ஆனி மாதம் 15 ஆம் திகதி விநியோகிக்கப்படும். தேவையானோர் முன்கூட்டிப் பதிவு செய்யவும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
[56410

### கைமாறப்பட்டது

Asia பெண்சள் சைக்கிள் மீசாலை பழைய ஸ்ரேஷனடி கருணா கடையடியில் கடந்த 21-05-98 வியாழக்கிழமையன்று கைமாறப்பட்டுவிட்டது. கைமாறி எடுத்துச் சென்றவர் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: ''கந்தசுரி'' மீசாலைமேற்கு, மீசாலை அல்லது மேற்படி கருணா கடை. [56371]

## டெல்கா DELKA

மணிக்கூடு, றேடியோ, ரி. வி., டெக் திருத்துபவர்கள்
அத்துடன்

## சுப்பலோ கலர்படச் சேவையின்

கலர்பட சுருள்களின்
வடமராட்சி, தென்மராட்சி
ஏக சேகரிப்பு முகவர்கள்

**டெல்கா,** பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்) (சி/3872 )

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்

## பகிரங்க ஏலவிற்பனை

சங்க லொறிகளுக்கு பாவிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்கள் சங்க முன்றலில் வைத்து **06-06-98** ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

01. லொறி உடற்கோப்பு (பொடி)
02. பற்றிகள் 06
03. லொறி உதிரிப்பாகங்கள்

முக்கிய குறிப்பு

(அ) மேற்குறிப்பிட்ட பொருள்களை பார்வையிட விரும்புவோர் சங்க வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

(ஆ) பொருள்களை ஏலத்தில் பெற்றுக்கொள்பவர் பணத்தினை முழுமையாகச் செலுத்தி அன்றையதினமே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

(இ) ஏலவிற்பனை தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும் முழுமையான அதிகாரம் சங்க நிர்வாகத்திற்கு உரியதாகும்.

தலைவர் - பொது முகாமையாளர்
27 - 05 - 98
[சி – 3865)

அருள்மிகு நெல்லியடி
தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய

## மஹோற்சவம் - 1998

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் **31-05-98** ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

கொடியேற்றம்: 31 - 05 - 98 ஞாயிறு
காலை 9.00 மணி
தேரோற்சவம்: 08 - 06 - 98 திங்கள்
காலை 9.00 மணி
தீர்த்தோற்சவம்: 09 - 06 - 98 செவ்வாய்
காலை 9.00 மணி

பகல் திருவிழா தினமும் காலை 5.45 மணிக்கும் மாலைத் திருவிழா பி. ப. 3.00 மணிக்கும் ஆரம்பமாகும்.

சப்பறத் திருவிழா (07 – 06 – 98) தவிர்ந்த மற்றைய விழா நாள்களில் மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை தெய்வீகப் பேருரை இடம் பெறும்.

ஆலய பரிபாலன சபையினர்
[சி/3864]

## 31 ஆம நாள் கண்ணீர் அஞ்சலி




செல்வி
**சந்திராதேவி நடராசா**

எமது வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்த உபஅதிபர் செல்வி சந்திராதேவி நடராசாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பா. அ. சங்கம்
யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
(56274)

உ
தில்லைபம்பதியாள் துணை

## கோண்டாவில் தில்லையம்பதி
## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
# வைகாசி மஹோற்சவ பெருவிழா – 1998



31 – 05 – 98 தொடக்கம் 11 – 06 – 98 வரை

| | | | |
|---|---|---|---|
| 31 - 05 - 98 | ஞாயிறு | முற்பகல் 10 மணிக்கு | கொடியேற்றம். |
| 04 - 06 - 98 | வியாழன் | பிற்பகல் 5 மணிக்கு | பூச்சப்பறம். |
| 05 - 06 - 98 | வெள்ளி | பிற்பகல் 5 மணிக்கு | வசந்த உற்சவம். |
| 07 - 06 - 98 | ஞாயிறு | பிற்பகல் 2 மணிக்கு | வேட்டைத் திருவிழா. |
| | | (ஸ்ரீ ஞான வைரவர் ஆலய முன்றலில் நடைபெறும்) | |
| | | பிற்பகல் 5 மணிக்கு | சப்பறம். |
| 08 - 06 - 98 | திங்கள் | முற்பகல் 10 மணிக்கு | தேர் உற்சவம். |
| 09 - 06 - 98 | செவ்வாய் | முற்பகல் 10 மணிக்கு | பூரணை தீர்த்த உற்சவம். |
| | | பிற்பகல் 3 மணிக்கு | ஸ்ரீ சக்கர பூசை. |
| 10 - 06 - 98 | புதன் | நண்பகல் | மகேஸ்வர பூசை (அன்னதானம்) |
| | | மாலை 5 மணிக்கு | பூங்காவனம். |
| 11 - 06 -98 | வியாழன் | காலை 6 மணிக்கு | பிராயச்சித்த அபிஷேகம். |
| | | பிற்பகல் 5 மணிக்கு | வைரவர் பொங்கல். |

மங்கள இசை:
என். எம். பிறேமானந்தன்
என். எம். ஜெயானந்தன் (சகோதரர்கள்)

பஜனை இசை: எஸ். குமாரசாமி அவர்கள்

★ மஹோற்சவ காலங்களில் இலங்கையின் புகழ்பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியும் இடம் பெறும்.

இங்ஙனம்:
– திருக்கோயில் பரிபாலனசபை
[56374)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஐ.நா. அபிவிருத்தி திட்ட உதவி

யாழ்ப்பாணம், மே 30 தீவுப்பகுதி மற்றும் வலி காமம் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பத்து ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தினால் கடனுதவி வழங்கப் படவுள்ளது.

வருமான அதிகரிப்பு, தொழில் முயற்சிக்கடனுதவி என்னும் திட்டத்தின் கீழ் இக்கடன் வழங்கப்படவுள்ளது.

இக்கடன் பெறுவதற்குரிய ப. நோ. கூ. சங்கங்களின் தெரிவு விரைவில் நடைபெறவுள்ளது.

இதேவேளை கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கும் கிராமிய வங்கிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் ஐ. நா. அபிவிருத்தி திட்டத்தினர் உதவிகளை வழங்கவுள்ளனர்.

(ஐ.5)

வீனஸ் டெல்கா கொம்யுனிக்கேஷன்

உள்நாட்டு, வெளிநாட்டு
நேரடித் தொலைபேசிச் சேவை,
(இரவு / பகல்)
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம்.
(அமைதியான சூழல், குறைந்த கட்டணங்கள்)
(சி/3877)

# சாவகச்சேரி சந்தையில் சைக்கிள் விடத் தடை

தென்மராட்சி, மே 30 கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம் பெற்ற சைக்கிள் குண்டுவெடிப்புச்சம்பவத்தை அடுத்து சாவகச்சேரி சந்தை உட்புறமும், வெளியிலும் சைக்கிள்கள் நிறுத்துவது சாவகச்சேரி நகரசபையினால் தடை செய்யப்பட்டுள்ளதாக விளம்பரப்பலகைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சந்தைக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் சைக்கிள்களில் வருவோருக்கு நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார். (ஐ-117)

## நிதி உதவி

கொழும்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தர் மகராஜ் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஊடாகயாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வசதி குறைந்த நிலையிலுள்ள ஏழு பாடசாலை மாணவர்களுக்கும் இரு மருத்துவபீட மாணவர்களுக்கும் கல்வி ஊக்குவிப்பு நிதியினை வழங்கியுள்ளார். திருநெல்வேலி இராமகிருஷ்ணாலய இயக்குநர் இ. இராஜா மகேந்திரசிங்கம் இந்த நிதியினை மேற்படி மாணவர்களிடம் கையளித்துள்ளார்.

(ஐ-135)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 29 |
| — | — |
| 02 | 04 |
| — | — |
| 1930 | 1998 |

அமரர்

**இளையகுட்டி நரசிங்கம்**

(ஓய்வு பெற்ற பார வாகன இயக்குநர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்த
எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத
நினைவுடன் எம்மை விட்டுப் பிரிந்த
பாசமுள்ள ஐயாவே! தங்கள் ஆத்மா
சாந்தியுறத் தினந் தினம் இறைவனின்
பாதங்களை வேண்டுகின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்களையே நினைந்துருகும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கந்தரோடை றோட்,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(56377)

## நகரில் கேட்ட குண்டுச் சத்தங்கள்

யாழ்ப்பாணம், மே 30 யாழ். நகரத்துக்கு அண்மையில் நேற்றுமுன்தினமிரவு 7-30 மணியளவில் பாரிய சத்தத்துடன் மூன்று குண்டுகள் வெடித்தன.

படையினர் பரிசோதித்த குண்டுகளே அவையென படைவட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## வலி. கிழக்கில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், மே 30 நிலாவரைச்சந்தி, மாசிவன் சந்தி, புன்னாலைக் கட்டுவன் மூன்றாம் சந்தி ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகள் நேற்று முன்தினம் வியாழன் அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

வீடுகள் தோறும் சென்ற படையினர் குடும்ப விபரப் படிவங்களைப் பார்வையிட்டதோடு அடையாள அட்டைகளையும் பரிசோதித்தனர்.

வீதிகளால் சென்ற பலரும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(இ-7)

## செட்டிகுளத்தில் மோதல்

வவுனியா, மே 30 மன்னார் — வவுனியா வீதி செட்டி குளம் என்னும் இடத்தில் விடுதலைப்புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் காயம் அடைந்தார்.

நேற்று முனதினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-21)

## சீருடையில் வந்தோர் கொள்ளை

கொழும்பு, மே 30 கொழும்பிலிருந்து பால்மா மற்றும் உணவுப் பொருள்களை மட்டக்களப்புக்கு ஏற்றிச் சென்ற தமிழர் ஒருவருக்குச் சொந்தமான லொறி பொலீஸ் சீருடை அணிந்த கோஷ்டி ஒன்றால் மானெல்லையில் வழி மறிக்கப்பட்டு 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன் இரவு நடந்த இக்கொள்ளையை நடத்திய கோஷ்டியினர் லொறியின் சாரதியையும், கிளீனரையும் கடத்தி அறை ஒன்றினுள் பூட்டி வைத்து [illegible] நடத்தியுதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 09 |
| — | — |
| 11 | 06 |
| — | — |
| 1941 | 1997 |

அமரர்

**இராசரட்ணம் செல்வராசா**

(மின் அத்தியட்சகர், பளை)

திதி: 30 - 05 - 1998

உங்கள் ஆத்ம சாந்திக்காகவும், மோட்ச சாம்ராச்சிய நல்வாழ்வுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, சகோதரர்கள், சகோதரி,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

கற்பக விநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்,

(56197)

## நூல் வெளியீட்டு விழா

நூல்: திரு. ஜெ. சத்தியேந்திரன்
அவர்கள் எழுதிய
(தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

**தென்னைச் செய்கை**

அன்புடையீர்!

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நாவலர் றோட், ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து, கைலாசபிள்ளையார் கோயிலுக்குப் போகும் வீதியில்)

காலம்: 31-05-1998 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி (புதியநேரம்)

தலைவர்: திரு. சி. சிவச்சந்திரன்
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை
(வடமாகாணம்)

பிரதம விருந்தினர்: திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்:
அமைதி வணக்கம்:
வரவேற்புரை: திரு. க. தனிநாயகம்
(தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், பளை)
தலைமையுரை: திரு. சி. சிவச்சந்திரன்
(உதவிப் பிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை)

''தென்னைச் செய்கை'' ஓர் அறிமுகம்

வாழ்த்துரைகள்: திரு. த. சிவலோகநாதன்
(உதவி விவசாயப் பணிப்பாளர், விவசாய விரிவாக்க அலுவலகம், திருநெல்வேலி)
திரு. பி. செந்தில்நந்தனன்
(பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)
திரு. த. வ. கிருஷ்ணசாமி
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்பபாணம்)
திரு. S. கோகுலதாசன்
(பொது முகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)
திரு. க. சுந்தரேசன் (கமநல சேவைகள் உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

சிறப்புரைகள்: கலாநிதி க. குணராசா
(பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்)
திரு. பு. சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர், சாவகச்சேரி)
திரு. V. P. சிவநாதன் (சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. கு. பிறேமகாந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், விவசாயம் வலயம் – II)

வெளியீட்டுரையும், நூல் வெளியீடும்:
திரு. க. சண்முகநாதன்
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் வழங்கல்

மதிப்பீட்டுரைகள்: பேராசிரியர் சு. மோகனதாஸ்
(விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
திரு. ச. சின்னத்துரை (உதவி விவசாயப் பணிப்பாளர், பயிற்சி யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், திருநெல்வேலி)

நூலாசிரியர் பதிலுரை: திரு. ஜெ. சத்தியேந்திரன்
(தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

நன்றியுரை: திரு. கு. சதாசிவமூர்த்தி
(விரிவுரையாளர், அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

நூல் ஒன்றின் விலை ரூபா 100

குறிப்பு: நிகழ்வின் இறுதியில் ''தென்னைச் செய்கை'' பற்றிய வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்படும்.

ஆர்வலர்கள் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(56404) —விழாக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கும் பேக்கரிகள்

திருநெல்வேலி, மே 30

கல்வியங்காடு பகுதியிலுள்ள பேக்கரி ஒன்றில் சுகாதாரப்பரிசோதகர் திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது அங்கு எலிப்பொந்துகள் இருப்பதையும் எலிகள் கண்டபடி நடமாடித் திரிவதையும் நேரடியாகக் கண்டுபிடித்தார்.

உணவுச் சட்டத்திற்கு மாறுபட்ட வகையில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்பட்ட அந்த பேக்கரியை சுத்தமாகவும், சுகாதார விதிகளுக்கு அமைவாகவும் நடத்துமாறும் மேற்படி சுகாதாரச் சீர்கேடுகளை உடன் நீக்குமாறும் சுகாதாரப் பரிசோதகர் பேக்கரி உரிமையாளருக்கு எழுத்து மூலமான உத்தரவை வழங்கியுள்ளார்.

இதேவேளை திருநெல்வேலி கிழக்கிலுள்ள பேக்கரியொன்றிலும் சுகாதாரச் சீர்கேடுகள் உணவுச்சட்டத்திற்கு முரணான வகையில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சுகாதாரப் பரிசோதகரினால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

(ஐ-135)

JAFFNA COLLEGE

WANTED IMMEDIATELY

A Teacher To Teach
Applied And Pure Mathematics
In the Ordinary Level Classes.

Salary Negotiable

Contact Personally:-
PRINCIPAL,
Jaffna College, Vaddukoddai.

(C/3881)

சிறுப்பிட்டி மேற்கு
ஸ்ரீஞான வைரவர் தேவஸ்தானம்
அலங்கார உற்சவம்
30 - 05 - 98 தொடக்கம் 09 - 06 - 98 வரை

30—05—98 சனிக்கிழமை பி. ப. 2.30 மணி அலங்கார உற்சவம் ஆரம்பம்
06—06—98 சனி பி. ப. 2.30 மணி வேட்டைத் திருவிழா
07—06—98 ஞாயிறு பி. ப. 2.30 மணி சப்பறத் திருவிழா
08—06—98 திங்கள் காலை 11 மணி தேர் உற்சவம்
09—06—98 செவ்வாய் காலை 11 மணி தீர்த்த உற்சவம்

மற்றைய சகல அலங்கார உற்சவங்களும் பிற்பகல் 2 30 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமிக் குருக்கள்
(அச்செழு)
பரிபாலன சபை

(56414)

11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07 — 03 — 1968

விண்ணில் 30 — 05 — 1987

இராஜகோபால் இராஜ்மோகன்
(மருத்துவ பீட மாணவன்)

கடலில் கண்டெடுத்த முத்தே
புதுவசந்தமென நீ வந்த நாள் முதல்
இன்பத்தின் செலவு புன்னகையாகி
இதழ்களில் மலர்ந்ததே அன்று
உனது திறமையினால் உறுதியான உழைப்பினால்
உயர்கல்வி கற்று மருத்துவ பீடத்திற்கு
தெரிவாகி நின்ற வேளை
உன்னைக் காலன் கவர்ந்ததேனோ?
பாலைவனமான எமதுள்ளங்களை சோலைவனமாக்க
நீ மீண்டும் ஒருமுறை வருவாயோ!

உன்பிரிவால் வாடும்;
-குடும்பத்தினர்

திக்கம்,

(56188)

# பாம்பு தீண்டியது

தென்மராட்சி, மே 30

உழவு இயந்திரத்தில் பனை ஓலை ஏற்றிக் கொண்டு நின்றவரை ஓலைக்குள்ளிருந்து சீறிக் கொண்டு புறப்பட்ட பாம்பு கடித்தது.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று கிளாலியில் இடம் பெற்றது.

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த துரையப்பா சண்முகம் [வயது 47] என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

(ஐ-117)

## சார்க் மாநாட்டு...

(3 ஆம் பக்கத் தொடர்)

கிறது. போர்முனைக்கு படைகளை வாகனங்கள் மூலம் அணி அணியாக அழைத்துச் செல்வதும் —

போர் முனைகளில் காயம் அடையும் படையினரை அம்புலன்ஸ்கள் மூலம் அவசரமாக எடுத்து வருவதுங்கூட— வவுனியா நகர் ஊடாகவே.

அச்சமயங்களில் தாக்குதல்கள் ஏதும் நடக்கலாம் என்பதால் வவுனியா நகரில் வாழும் வெளியில் இருந்து வந்து தங்கி நிற்கும் தமிழர்கள் மீதான செடுபிடிகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் தமிழ் மக்கள் வீடுகளில் திடீர்ச் சோதனைகள் இடம் பெறுவதால் தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நகரின் முக்கிய பகுதிகள் திடீரெனச் சுற்றிவளைக்கப்படுதல், தமிழர்கள் கைது செய்யப்படுதல், வெள்ளை வான் மூலம் கடத்தப்படுதல் ஆகியன என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

★ ★ ★

## 4 பிரிகேடியர்கள் 2 நாள்களில் ஓய்வு

நான்கு சிரேஷ்ட பிரிகேடியர்கள் தமது சேவைக் காலத்தை நீடிக்கும்படி விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

பிரிகேடியர்கள் கே. அத்தநாயக்க, கே. ஏ. எம். ஜி. குலரட்ண, லக்கி குலதுங்க, ரி. எம். ஜி. ஆரியரட்ண ஆகியோரே அந்த நால்வருமாவர்.

அவர்களின் சேவைக்கால நீடிப்புக்கான கோரிக்கை பாதுகாப்பு அமைச்சினால் நிராகரிக்கப்பட்டிருப்பதை அடுத்து, அவர்கள் நால்வரும் நாளை மறுதினம் முதலாம் திகதியுடன் தமது பதவிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றார்கள்.

இப் படைகள் மற்றும் பொலீஸில் தங்களுடைய பதவி நிலைகளில் உச்ச கால எல்லையைப் பூர்த்தி செய்யும் அதிகாரிகளுக்கு தொடர்ந்து பதவி உயர்வு வழங்குவதில்லை என அரசு முடிவு செய்திருப்பதாக அறிய வருகின்றது.

★

கல்வி நாவலர் நிலையம்
NAAVALAR EDUCATION CENTRE

புலமைப் பரிசில் -'98
பயிற்சிப் பரீட்சை
24- வது.
31 - 05 - 98
ஞாயிறு 9 மணி
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
(56419)

# அதிரடி அரங்கு

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் கப்பல் கட்டணமின்றி கொழும்பில் இருந்து 10 ஆயிரம் சிமெந்துப் பைகளும், 6 ஆயிரம் கோழித்தீன் பைகளும் எடுத்து வந்துள்ளன.

கடந்த காலங்களில் ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகளில் இயங்கும் குழுக்களின் சிபார்சுடன் பங்கீட்டு அடிப்படையில் அவை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

ஆனால் இம்முறை புதிய நடைமுறை ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிமெந்து கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடனும்—

கோழித்தீன் கால்நடை வைத்தியரின் சிபார்சுடனும்—

மட்டுமே விநியோகிக்கவேண்டும் என்று ப. நோ. கூ. சங்கங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சிபார்சு பெறுவதில் மக்கள் கிராம சேவையாளர், பிரதேச செயலர், கால்நடை வைத்தியர் என அலைய வேண்டிய நிலை ஒருபுறம்—

தமது சொந்தப்பணத்தில் எடுத்து வந்து அந்தப்பொருளை விற்கமுடியாத நிலையில் ப. நோ. கூ. சங்கங்கள் மறுபுறம்—

இந்நிலையில் கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் பொதுமக்களுக்கு கிடைக்காமல் தேங்கிக்கிடக்கின்றன.

அரச அதிகாரிகளுக்கும், பொது அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடக்கும் பனிப்போரால் பாதிக்கப்படப் போவது மக்களே!

★ ★ ★ ★ ★

ஆலயத்தில் பலியிடுதலை 'மதம்' பிடித்த மதச் செயல் என்று பலரும் விமர்சிக்கின்றார்கள்.

ஆனால் பழந் தலைமுறைப் பக்தர் ஒருவர் பலியிடுதலை நியாயப்படுத்துகின்றார்.

''இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆடு, மாடு, கோழி போன்றவற்றை பலியிடுகல் ஒழுங்காக நடந்ததால்தான் இங்கு மக்களின்—மனிதனின்—இரத்தம் ஆறாக ஓடும் நிலை ஏற்படவில்லை.

''ஆனால் நாம் இப்போது அதை நிறுத்திவிட்டோம். அதன் பலன் மனித இரக்தம் இன்று படைக்கப்படுகின்றது; வீடுகளிலும், வீதிகளிலும், சந்தையிலும்மனிதசதைக்குவியல்குவிக்கப்படுகின்றன; மனித இரத்தத்தை பூமிக்குச் சொரியும் அவல நிலை ஏற்பட்டது. எனவே மிருக பலியிடுதலை அனுமதியுங்கள்; விடுங்கள். அது தன்னுடையபாட்டில்நடக்கட்டும். அது நடந்தால்மனிதஉயிர் பலியாவது குறையும்''— என்று விளக்கம் வியாக்கியானம் கூறுகின்றார் அந்தப்பக்தர். சாயி பக்தரானஅவர், தமதுகோரிக்கையை கடிதமாக உதயனுக்கு அனுப்பியுள்ளார். சாயீஸ்வரா! இத்தகைய உன் பக்தர்களுக்கு நல்வழி காட்டமாட்டாயா?

★ ★ ★ ★ ★

அண்மையில் அரியாலையில் இளம் பெண் ஒருவர்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் யாழ்ப்பாணத்தில்இயங்கும் தமிழ்க் கட்சிகள் குறித்து பெரும் அவநம்பிக்கையையும் அச்சத்தையும் மீண்டும்ஏற்படுத்தியிருக்கின்றன.

தனிப்பட்ட குரோதம் மற்றும் கோபத்துக்காக இயக்க ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கியைப் பயன்படுத்தியதாகக் குற்றச்சாட்டு. சொந்த கோபதாபங்களுக்கு இயக்கத்தின் பெயரால்— ஆயுதங்களை— பயன்படுத்துவோருக்கு சம்பந்தப்பட்ட இயக்கம் இடம் கொடுக்குமானால் மக்கள் விரைவில் அத்தகைய இயக்கங்களை ஒதுக்கி விடுவர். எனவே தவறிழைத்தோர் அடையாளங்காணப்பட்டு, மக்கள் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையும் பகிரங்கப்படுத்த வேண்டும். அத்தோடு இது விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டையும் சம்பந்தப்பட்ட இயக்கம் அம்பலப்படுத்த வேண்டும். அப்படிச்செய்தால்தான் இது விடயத்தில் 'ரிப்பேர்' ஆன அந்த இயக்கத்தின் பெயர் சீராகும். அந்த இயக்க நிர்வாகிகளுக்கு இது சமர்ப்பணம்.

★ ★ ★ ★ ★

குடாநாட்டு பொதுமக்களை மிரட்டி நிதி சேகரித்தல் என்ற சில இயக்கங்களின் இதுவரை காலமான கோட்பாடு இப்போது தளர்ந்து வருவதாகத் தகவல். முன்னேற்றம் இருப்பதைப் பாராட்டலாம்.

ஆனால் மக்களின் வீடுகளை பலத்தால் (By Force) கைப்பற்றும் முயற்சிகள் ஆங்காங்கே நடப்பதாகத் தகவல். இது தொடர்ந்தால் யார், யார் — எப்போது, எப்போது — எங்கு, எங்கு — என்ற விவரங்களுடன் இத்தகைய அடாவடித்தனங்களை இப்பத்தியில் அம்பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

சம்பந்தப்பட்ட அடிதடிக் குழுக்களே இதற்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை முடிவு செய்யட்டும். பத்திரிகையைப் பொறுத்த வரை பகிரங்கப்படுத்தி, அம்பலப்படுத்துவதுதான் ஒரே வழி.

சம்பந்தப்பட்ட தமிழ்க்கட்சிகளின் பதில் என்னவோ?.

— மின்னல்

# ஆஸி. அதிகாரிகள் தெல்லிப்பழை விஜயம்

யாழ்ப்பாணம், மே 30

தற்போது யாழ். நகரில் தங்கியிருக்கும் ஆஸ்திரேலிய தூதரகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் யாழ். அரச திணைக்கள தலைவர்கள், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், உட்பட பலரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

யாழ். பொதுசன நூலகத்திற்கு நேரில் விஜயம் செய்த இவர்கள் யாழ். நகரையும் சுற்றிப் பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் தெல்லிப்பழை பகுதிக்கு விஜயம் செய்த இவர்கள் அங்கு மீளக் குடியேறிய மக்களையும் சந்தித்தனர்.

(ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை:

# திருமலையிலிருந்து 3,000 துருப்புகள்!

## அனுப்புவதற்கு முடிவு

கொழும்பு, மே 30

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்காக திருகோணமலை மாவட்டத்திலிருந்து 3 ஆயிரம் படையினர் அனுப்பப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஒப்புதலைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது எனவும் — திருகோணமலை மாவட்டத்தில் கிராமங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள படையினர் மற்றும் முக்கிய முகாம்களிலுள்ள படையினர் ஆகியோரில் 3 ஆயிரம் பேர் இதற்காக மீளப் பெறப்படவுள்ளனர் எனவும் —

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த வாரம் அம்மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் வட பகுதி இராணுவ நடவடிக்கைக்காக திருமலை இராணுவமுகாம்களில் இருந்து படையினர் வாபஸ் பெறப்பட்ட போது அந்த மாவட்டத்திலுள்ள கிராமங்கள் தாக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதன் காரணமாக தற்போது இராணுவம் வாபஸ் பெறப்படுவது குறித்து அம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்று கூறப்பட்டது. (உ-10)

## தென்னை செய்கை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் மே 30

யாழ். தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் எழுதிய 'தென்னைச் செய்கை' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வட பகுதி தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை உதவிப் பிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விழாவின் இறுதியில் தென்னைச் செய்கை பற்றிய வீடியோ படக் காட்சியும் காண்பிக்கப்படும். (ஐ-5)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி சப்பச்சிமாவடி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பகல் திருவிழா தினமும் காலை 8 மணிமுதலும், இரவுத் திருவிழா மாலை 4 மணி முதலும் நடைபெறும்.

எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ஐ-8-30)

★ ★ ★

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

ஜூன் 8 ஆம் திகதி திங்கள் காலை 8.00 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மகோற்சவ கிரியைகள் சிவஸ்ரீ சு. நடராசக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ.117)

★ ★ ★

நீராவியடி ஸ்ரீ ஜெயவீர சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை அஷ்டோத்திர சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

காலைத்திருவிழா காலை 9 மணிக்கும், மாலைத் திருவிழா மாலை 4 மணிக்கும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினந்தோறும் பாட்டு, சமயப் பேச்சு என்பன விசேட நிகழ்ச்சிகளாக இடம்பெறும். (ஐ-7)

## சிறாம்பியடி அ. அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், மே 30

சிறாம்பியடி (ஜே/79) கிராம சேவை அலுவலர் பிரிவிற்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரியகுளம் சந்தி இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என்று இப்பிரதேச கிராமசேவையாளர் அறிவித்துள்ளார். (ஐ-ரீ)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. தென்மேற்கு, மே 30

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டின் நிறைவையொட்டிய விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் நடைபெறும் என விளையாட்டு இணைப்பாளர் திரு. நா. தற்பரானந்தன் தெரிவித்தார்.

கிரிக்கெட், ஹொக்கி, பட்மின்ரன், கூடைப்பந்து, டென்னிஸ் ஆகிய போட்டிகள் நடத்தப்படும். (உ-185)

★ ★ ★

சண்டிலிப்பாய் மே 30

மானிப்பாய் மேற்கு கட்டுடை விநாயகர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சமூக அபிவிருத்தி மன்ற உபதலைவரும், கட்டுடை சேமிப்புக் கழக தலைவருமான பொ.வ.மா.க. முதலியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ்மாவட்ட சமூக சேவை அதிகாரி ரி. சிவநேசன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ். ஸ்ரீபதி சமூக அபிவிருத்திமன்ற பிரதி நிர்வாக செயலாளர் திருமதி பி. ஜோசப், மானிப்பாய் மேற்கு கிராம அலுவலர் எல். அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொள்வார்கள். [ஐ-135]

## அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 30

அண்மையில் சிவபதம் அடைந்த ஊரெழுவைச் சேர்ந்த வேதாகம வித்தகர் சிவஸ்ரீ வைத்தியநாதசிவாச்சாரியாரின் அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு சி. கணேசு தலைமையில் ஊரெழுவில் நடைபெறும்.

சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த அஞ்சலிக் கூட்டத்தில் வைத்தியநாதக் குருக்களின் திருவுருவப்படத்தை சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில் பிரதமகுரு திரை நீக்கம் செய்துவைப்பார். தொடர்ந்து சிவஸ்ரீ நித்தியானந்தசர்மா சிறப்புரையாற்றுவார்.

இதே நேரம் — இன்று காலை 9-00 மணியளவில் 'குருக்கள் வீதி' என்று வைத்தியநாதக்குருக்கள் வீட்டருகில் உள்ள வீதிக்குப் பெயர் சூட்டும் வைபவம் ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும். (6)

## 2 இளைஞர்கள் இளவாலையில் கைது!

யாழ்ப்பாணம், மே 30

தெர்ப்பைப்புல் வெட்டுவதற்காக இளவாலைப் பகுதிக்குச் சென்றதாகக் கூறப்படும் இரு இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இளவாலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த எ. சிவனேசன், இ. கோகுல அரசன் ஆகிய இவ்விரு இளைஞர்களும் இளவாலைப் பொலீஸாரால் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இருவரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (2-6)

## கணனி மூலம் பணிகள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் கணிசமான வேலைகள் நேற்று முதல் கணனி மயப்படுத்தப்பட்டன.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் நேற்று கணனி மயப்படுத்தப்பட்ட பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (உ-6)

## கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ். வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் பாடசாலைகளுக்கிடையில் 15 வயது, 17 வயது அணிகளுக்கிடையில் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

### 15 வயது பிரிவு

★ யாழ். மத்திய கல்லூரி அணி எதிர் ஸ்கந்தா அணி — யாழ். மத்திய கல்லூரி மைதானம்.

★ சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் ஹாட்லிக் கல்லூரி அணி— யாழ். சென் பற்றிக்ஸ் மைதானம்.

### 17 வயது பிரிவு

★ ஹாட்லிக் கல்லூரி அணி எதிர் கொக்குவில் இந்து அணி — ஹாட்லிக் கல்லூரி மைதானம். (உ-3)

★ ★ ★

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே. ஸி. ஸி. ஸி. கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இருகால் இறுதி ஆட்டங்கள் இன்று கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இரு ஆட்டங்களிலும் மோதும் அணிகள் வருமாறு:

★ காலை 8. 30 மணி — மானிப்பாய் பரீஸ் அணி எதிர் கே. ஸி. ஸி. ஸி. 'ஏ' அணி.

★ நண்பகல் ஒரு மணி — ஜொனியன்ஸ் அணி எதிர் கே. ஸி. ஸி. ஸி. 'பி' அணி. (உ-3)

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலீஸ் அதிகாரிஒருவர் தமக்கு பதவி உயர்வு, லீவு மற்றும் சுகவீனத்துக்கான சிகிச்சை ஆகியவை வழங்காமல் தன்னை பாதிப்படையும் விதத்தில் உயர் அதிகாரிகள் நடத்துகின்றார்கள் என்று தெரிவித்து கொழும்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார் என அறியவருகின்றது.

இந்த மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டால் — இங்குள்ள நிலைமையைப் பார்க்கும் போது— இதே போன்ற மனுக்கள் நூற்றுக் கணக்கில் உயர்நீதிமன்றத்தில் குவிந்து, உயர் நீதிமன்ற நீதியாள்களின்பாடு தலையிடியாகி விடும் என்கின்றார் யாழ்ப்பாணத்து பொது மகன் ஒருவர்.

## வேடுவத் தலைவர் மறைவு திங்கள் இறுதிக் கிரியை

### அரச மரியாதைகளுடன்

கொழும்பு, மே 30

தென்னிலங்கையின் வேடுவர் குலத் தலைவர் திஸ்ஸ காமி நேற்று அதிகாலை தனது 104 ஆவது வயதில் காலமானார்.

இறுதிக் காலத்தில் தம்பானைப் பிரதேசத்தில் உள்ள கொத்தம்பதேனிய என்னும் கிராமத்தில் வாழ்ந்த திஸ்ஸ காமி சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார்.

திஸ்ஸகாமினியின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் காலை கொத்தம்பதேனியாவில் பூரண அரச மரியாதைகளுடன் இடம்பெறவுள்ளது.

திஸ்ஸகாமினியின் மறைவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டார். (உ-7)

## மியாங்குளத்தில் 9 புலிகள் உயிரிழப்பு

வவுனியா, மே 30

மட்டக்களப்பு மியாங்குளம் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் தமது தரப்பில் ஒன்பது பேர் களப்பலியானதாகப் ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்துள்ளது.

கப்டன் புவிராஜ் (சண்முகம் சந்திரோகன் — மட்டக்களப்பு), லெப்டினன்ட் சிதம்பரம் (கிருஷ்ணபிள்ளை நடேஸ்வரன் —அம்பாறை), லெப்டினன்ட் பவனிதரன் (கார்த்திகேசு சுரேன் தவராசா — மட்டக்களப்பு), முல்லைதீபன் (மதிபாலசிங்கம் காண்டீபன் — அம்பாறை), சேதுராஜ் (விஜயன் நந்தகோபான் — மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் பாசுபன் (கந்தசாமி மனோகரன் — அம்பாறை), ரூபதன் (ஆறுமுகம் கமல்ராஜ் — மட்டக்களப்பு) சப்தனன் (யோகராசா சற்குணராசா —மட்டக்களப்பு), சங்கரன் (சின்னத்தம்பி குருகுலசிங்கம்— மட்டக்களப்பு), ஆகியோரே களப்பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## இராஜ...

(முதலாம் பக்கத் தொடர்)

காலமானார்.

ஈழகேசரி, ஈழநாடு, சிந்தாமணி ஆகிய பிரபல பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணி புரிந்த இவர் ஓர் உழைக்கும் பத்திரிகையாளராகவே வாழ்ந்தார்.

ஈழகேசரி வாரப் பத்திரிகையில் உதவியாசிரியராகத் தமது தொழிலை ஆரம்பித்த இவர் அந்தப பத்திரிகையின் ஆசிரியராக உயர்ந்தார்.

இப்பத்திரிகையின் ஊடாகப் பல புதிய எழுத்தாளர்களை உருவாக்கிய இராஜ அரியரத்தினம் அவர்கள் சோணாசலம் என்ற பெயரில் கவிஞராகவும், பத்தி எழுத்தாளராகவும் திகழ்ந்தார்.

ஈழகேசரியின் ஆசிரியராக இருந்தவேளை, கல்கி மற்றும் தமிழகத்தின் அப்போதைய முன்னணி எழுத்தாளர்களின் நட்புக்கும்பாராட்டுக்கும் ஆளானவர்.

ஈழகேசரிப் பத்திரிகையின் ஸ்தாபகர் நா. பொன்னையாவின் மறைவின் பின்னர் அப்பத்திரிகை வெளிவரவில்லை. சிறிது கால இடைவெளியின் பின்னர் ஈழநாடு வாரமலரின் ஆசிரியர் பதவியை ஏற்றார். அங்கு பணி புரியும் காலத்திலும் பல இளம் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக்கொடுத்து அவர்களை ஊக்குவித்து வளர்த்தார். இன்றைய பல மூத்த எழுத்தாளர்கள் அவரது பண்ணையில் வளர்ந்தவர்களே.

சிந்தாமணி பத்திரிகையின் ஆசிரியராகப் பதினேழு வருடங்கள் பணி புரிந்து ஓய்வு பெற்ற பின்னர் தமிழகத்திலேயே வாழ்ந்தார். சிறிது காலம் இவர் நோய் வாய்ப்பட்டிருந்தார்,

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இராஜ அரியரத்தினம் டிறிபேர்க் கல்லூரி, மட்டக்களப்பு சிவனந்தாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் சென்னை அடையாறில் நடைபெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஜ்பாய் அரசுக்கான ஆதரவை மம்தா பனர்ஜியின் கட்சி வாபஸ்!

## தற்காலிக இடைநிறுத்தம் என அறிவிப்பு

புதுடில்லி, மே 30

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டணி அரசுக்கு இதுவரை காலமும் தாம் வழங்கிவந்த ஆதரவைத் தற்காலிகமாக நிறுத்துவதென மேற்குவங்காள மாநிலத்தின் திணமூர் காங்கிரஸ் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

திணமூர் காங்கிரஸ் கட்சியின் மம்தாபனர்ஜி இது தொடர்பான அறிவிப்பை நேற்றுப் பிற்பகல் விடுத்தார்.

மேற்கு வங்காள மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும்— முதல்வர் ஜோதிபாசு தலைமையிலான மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசைக் கலைக்க வேண்டும் எனத் தாம் விடுத்த வேண்டுகோளை இது வரை வாஜ்பாய் அரசு கவனத்தில் எடுக்காத காரணத்தாலேயே தமது ஆதரவைத் தற்காலிகமாக நிறுத்துவதெனத் தான் முடிவு செய்ததாக மம்தா பனர்ஜி நேற்று அறிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் திணமூர் காங்கிரஸ் சார்பில் அங்கம் வகிக்கும் எட்டு உறுப்பினர்கள் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு ஆதரவு அளித்து வரும் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவும் தமிழகத்தில் ஆட்சியிலுள்ள தி. மு. க. மாநில அரசைக் கலைக்க வேண்டுமென வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

நாடாளுமன்றில் மயிரிழைப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதாக்கட்சி அரசுக்கு ஆட்சியைத் தக்க வைத்திருப்பதற்கு திணமூர் காங்கிரஸ் மற்றும் அ.தி.மு,கவின் ஆதரவுஅவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பங்குச் சந்தை வீழ்ச்சி

புதுடில்லி, [றோய்ட்டர்)

இந்தியாவுக்கு மொத்தம் மூன்று கடன் திட்டங்களின் கீழ் வழங்கவிருந்த 855 கோடி ரூபாவை உலக வங்கி கடந்த செவ்வாயன்று நிறுத்தி வைத்ததை அடுத்த மும்பாய் பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி இரண்டு சதவீதத்தால் வீழ்ச்சி கண்டது. (ஐ)

## நாராயணன் நேபாளம் விஜயம்

புதுடில்லி, மே 30

இந்திய ஜனாதிபதி கே. ஆர் நாராயணன் மூன்று நாள் விஜயமாக நேற்று நேபாளம் போய்ச் சேர்ந்தார். அவருடன் வர்த்தக அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டேயும், உயர் நிலைக்குழு ஒன்றும் உடன் சென்றுள்ளது. [ஐ]

# இராணுவத்தில் அணு ஆயுதங்களை சேர்க்க பெர்னாண்டஸ் வலியுறுத்து!

புதுடில்லி, மே 30

இந்திய இராணுவத்தில் அணு ஆயுதங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வலியுறுத்தியுள்ளார்.

'ஸ்ரார் நியூஸ்' தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. பெர்னாண்டஸ் இதனை வலியுறுத்தினார்.

''அணு ஆயுதங்களை வைத்திருக்காமல் அணுஆயுத நாடு என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தமில்லை'' என்றும் அப் பேட்டியில் அவர் கூறினார்.

அப்படியானால், இந்தியா அனுப்பும் ஏவுகணைகளில் அணு ஆயுதங்களும் இடம் பெறுமா என்று கேட்டதற்கு, ''ஆமாம் அப்படித்தான் அர்த்தம், அணு ஆயுதமயமாக்கல் என்பதும் அதுதான்'' என்று பதிலளித்தார்.

இந்திய இராணுவத்தை அணு ஆயுதமயமாக்குவதற்கான காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறிவரும் பாதுகாப்புச் சூழ்நிலை, அச்சுறுத்தல் ஆகியயவற்றைப் பொறுத்து இதற்கான காலக்கெடு அமையும் —என்றார். (ஐ-10)

## கொடியேற்றம்

சென்மட்டுவில் வேரற்கேணி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனி முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறவுள்ளது. பகல் திருவிழா காலை 8-30 மணிக்கும் மாலைத் திருவிழா பிற்பகல் 3-00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும். (உ-7)

## புள்ளிவிவரம் வெளியானது

யாழ்ப்பாணம், மே 30

1997 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றியிருந்த மாணவர்களில் 180புள்ளிகளுக்குக் குறைவாகப்பெற்ற மாணவர்களின் புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. வழமையாக 180புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களின் புள்ளி விவரங்களே வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-9)

## நகரசந்தை விவகாரம்:

## திருமலைப் பிரமுகர்கள் அமைச்சருடன் பேசுவர்

திருகோணமலை நகராட்சி மன்றம் நிறுவியுள்ள புதிய சந்தையைத் திறப்பது தொடர்பாக எழுந்துள்ள சிக்கலுக்கு தீர்வு காணும் நோக்குடன் நகராட்சி மன்றத்தின் உப தலைவர் லோகேஸ்வரன் தலைமையிலான குழு ஒன்று மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானாவுடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

புதிய சந்தையைத் திறப்பதற்கு படையினர் தடை விதித்துள்ளதால் அங்கு எழுந்துள்ள நிலைமையை அமைச்சரிடம் விளக்கி, தடை உத்தரவை வாபஸ் பெற்று சந்தையைத் திறக்க உதவுமாறு இக்குழு அவரிடம் கேட்கவிருக்கிறது. (உ-3)

## கிழக்குப் பல்கலையில் மாணவர் பகிஷ்கரிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட முதலாம், மூன்றாம் ஆண்டு மாணவர்கள் நேற்று முதல் விரிவுரை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

பாடவிதானத்தின் பிரகாரம் வெளிக்களச் சுற்றுலா இது வரை நடைபெறவில்லை. இதனை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரியே மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்துகின்றார்கள்.

இது குறித்து விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மனோ சபாரெட்ணத்துடன் தொடர்பு கொண்டபோது—

''மாணவருக்கு வாகன வசதிகள் அளிக்கப்படும்; ஆனால் நிதி வசதி வழங்க முடியாது''— என்று தெரிவித்தார். (உ-21)

## 'மகோ', 'ஓஷன் கரியர்' கப்பல்களில் வெங்காயம்

யாழ்ப்பாணம், மே 30

'மகோ' கப்பல் மூலம் 378 மெற்றிக் தொன் வெங்காயமும், ஓஷன் கரியர்' கப்பல் மூலம் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வெங்காயமும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆயிரத்து 200 மெற்றிக்தொன் வெங்காயம் 'ஹண்டி' கப்பலில் அனுப்புவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்து 500மெற்றிக் தொன் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பி வைப்பதென யாழ். மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் ப. நோ. கூ. சங்கங்களினால் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெங்காயமே கொழும்புக்கு தற்போது அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றது. (உ-5)

## தெற்கில் பஸ் விபத்து! ஏழுவர் உயிரிழப்பு!!

## 25 பேர் படுகாயமுற்றனர்

அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று மொறட்டுவ முல்ல என்னும் இடத்தில் நேற்று அதிகாலை 5.10 மணியளவில் மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஏழு பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; 25 பயணிகள் காயமடைந்தனர்.

பஸ் விபத்துக்குள்ளான போது பஸ்ஸில் நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் இருந்தனர் என்றும்—

காயமடைந்தவர்கள் கொழும்பு, களுபோவில ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் 6 பயணிகளின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-21-ரீ)

## இரண்டு..

(முதலாம் பக்கத் தொடர்)

35 வரையில் புலிகள் உயிரிழந்ததாகக் கொழும்பில் அறிவிக்கப்பட்டபோதும் —

14 புலிகளே உயிரிழந்ததாக வவுனியா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் —

தற்போதைய சண்டையில் உயிரிழந்த இராணுவத்தினர் ஒருவரின் சடலத்தையும் புலிகள் கைப்பற்றியுள்ளதாகவும் —

விடுதலைப் புலிகள் தரப்பில் ஜாமுவரன் (பாலச்சந்திரன் உதயகுமார் - மட்டக்களப்பு) என்பவர் களப்பலியானதாகவும் —

'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது, (உ-3)

## 1லட்சம் கிலோ பூசனிதேக்கம்

யாழ்ப்பாணம், மே 30

வடமராட்சிப் பகுதியில் சுமார் ஒரு லட்சம் கிலோ பூசணிக்காய் சந்தைப்படுத்த வசதியின்றி தேக்கமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளில் கிலோ மூன்று ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த பூசணிக்காய் தற்போது தாராளமாகக் கிடைப்பதால் அதனை எவரும் கொள்வனவு செய்ய முன்வருவதில்லை என்று கூறப்படுகின்றது.

பூசணிக்காய் தேக்கமடைந்துள்ளதால் இதனை உற்பத்தி செய்த விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். [உ-5[

## தேடுதல்

நெல்லியடி, மே 30

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள தும்பளை, நெல்லண்டை பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (உ-109)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நாளை (31-05-1998) ஞாயிறு பிற்பகல் 4. 00 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருந்த சங்க நிர்வாக சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செயலாளர்,
யா. இ. க. பழைய மாணவர் சங்கம்.

(சி/3886)

## மாங்குளத்தைக்..

(முதலாம் பக்கத் தொடர்)

நோக்கி விரைந்த வண்ணம் இருந்தன.

ஆனால் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும படையினரின் தற்போதைய நகர்வு முயற்சி குறித்து கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் பெரிதாகத் தகவல் எதனையும் வெளியிடவில்லை.

''போர்முனையில் படை நகர்வு இடம்பெறவில்லை. ஷெல் தாக்குதலே நடக்கிறது'' என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கொழும்பில் தெரிவித்துள்ளார். (உ-3-21)

## பிலிப்பீன்ஸில்..

(முதலாம் பக்கத் தொடர்)

வந்த நாடாளுமன்ற சபாநாயகர் ஜோஸ் டி வென்ஸியா 43 லட்சம் வாக்குகளையே பெற்றார்.

ஆனால் எஸ்ட்ராவுடன் இணைந்து உப ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட எட்கார்ட்டோ அங்காரா 56 இலட்சம் வாக்குக்ளைப் பெற்றுந்தே தால்வியடைந்தார்.

முன்னாள் ஜனாதிபதி டயஸோடா மகபககோலின் மகனானஅரோயா ஒருகோடி 26 இலட்சம் வாக்குகளைப் பெற்று உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (உ-3)

## ஒபடகே திங்கள் வருகை

யாழ்ப்பாணம், மே 30

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் கே. ஒபடகே நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகின்றார்.


அதிகாரசபையைச்சேர்ந்த நான்கு அதிகாரிகள் சகிதம் வரும் அவர் யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள் தங்கியிருந்து அரச, தனியார் துறை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஆராய்வார். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 30 -05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி சஞ்சிகை

30 – 5 – 1998 சஞ்சீவி



வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப மூக்குக் கண்ணாடிகள் பெறுவதற்கும் சிறந்தமுறையில் பற்களைக் கட்டிக் கொள்வதற்கும் நாடவேண்டிய இடம்.

பி. ஜெ. பர்னாண்டோ

542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ச/3851)

## கருத்துக் கலசம்

மயூரா

### தாயால் இயலும்!

நாளைய பிரஜைகளின்—இன்றைய மாணவர்களின்—கல்வி, உடல், உள வளர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களாக விளங்க வேண்டியவர்கள் பெற்றோர்களே.

அண்மையில் யாழ். நகரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் மேற்படி கருத்து முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

கல்வி, உடல், உள வளர்ச்சிகளை மட்டுமன்றி மாணவர்களை நற்பண்புள்ள, நற்குணவியல்புள்ள சிறந்த சமூக மனிதனாக்குவதிலும் பெற்றோருக்குப் பெரும் பங்குண்டு.

ஒப்பீட்டளவில், இரண்டு மூன்று சந்ததிகள் முந்திய பெற்றோர்களை விட, இன்றைய பெற்றோர்கள் சராசரியாகக் கல்வி அறிவு கூடியவர்கள். ஆனால் அவர்களில் பலர் தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் தமக்குப் பெரும் பங்கு உண்டு என்பதனை உணர்வ[illegible] இல்லை; அல்லது வசதி[illegible] மறந்துவிடுகிறார்கள்.

மிகக் குறிப்பாக, கண்டதே [illegible]ட்சி கொண்டதே கோலம் என்ற போக்குடைய இன்றைய இளைய தலைமுறையினருக்கு எமது கலாசாரம், பண்பாட்டை அடியொற்றிய நற்பண்புகளை ஊட்டுவதில் பெற்றோரிடம் அக்கறையும் கரிசனையும்குன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இது மிகவும் கவலை[illegible]தாகும்.

[illegible]வீனம் அல்லது நாகரிகம் [illegible] மாயைக்குள் சிக்குண்டு, [illegible]ால் உண்டாகக் கூடிய [illegible]விளைவுகளை, சீரழிவு[illegible] தூர நோக்குடன் பார்க்[illegible] இயல்பு இல்லாத இளைய[illegible]ளை கண்டித்து, அன்பால் [illegible]த்துவதில் பல பெற்றோர் [illegible] வேண்டிய அக்கறை [illegible]டுவதாக இல்லை.

[illegible]ந்ததி இடைவெளி போலும்; [illegible]ர்கள் எங்களுக்கு ''மேலா[illegible] பேசுகிறார்கள். ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பு குறித்துப் பேச்சு எடுத்ததுமே எங்கள் புத்திமதிகளை வெட்டிவிட முனைகிறார்கள். அவர்களை நாம் எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறோமோ...? இது விவகாரத்தில் நாம் உதவியற்றவர்களாகி விடுவோமோ என்று அஞ்சுகிறோம் — என்று பல பெற்றோர்கள் தமது இயலா[illegible]மையை வெளிப்படுத்துகிறார்கள்.

[illegible]றைய வாழ்க்கைமுறை [illegible]லக்கு இல்லாத—[illegible]மிஞ்சிய—வர்த்தகமயப் ப[illegible] ஒன்றாக—மாறிவிட்டது. அது[illegible] இந்த இயலாமையின் உ[illegible] காரணம்!

இ[illegible] மூன்றுசந்ததிகளுக்கு மு[illegible] பெற்றோர்களால் எவ்வா[illegible]மது பிள்ளைகளை சமூ[illegible]நதியுள்ள நற்பிரசைகளா[illegible]டிந்தது? அடிக்கிற [illegible] அடித்து, அணைக்க[illegible] நேரம் அணைத்து, [illegible] பொழிந்து வளர்த்[illegible]வர்கள் [illegible]ால் இது இயலாதது

## வேடுவரே! கூறும் விடை!

புவனத்தைக் கருத்தரித்த புண்ணியத்தாய் அம்பாளே!
அவலத்தைக் கண்டேன் அருவருத்துப் போய்விட்டேன்
'மே மே' எனக்கதறி மேனிகிழிபட்டுப்
பூமியிலே பலியாயுன் பூங்கழற்குக் கீழாக
தாம்துடித்து வீழ்ந்தனவே தலையில்லா முண்டங்கள்!

அந்தோ பரிதாபம் அம்பாளின் கருணை பெற
பந்தாடப் பட்ட பலநூறு கழுத்துக்கள்
கனவினிலே நீ போட்ட உத்தரவாம்! அம்மாவே
நினைத்தால் கொதிக்கிறதே நெருப்பால் எழுதுகிறேன்!

நீயா ஜெகன்மாதா? நீயா அருள்மாரி?
தாயா நீ; அந்தத் தாடகையின் வம்சமெல்லோ!
வாயில்லா உசிருகளின் வறுவல் தனையுண்ணும்
பேயல்லோ தாயேநீ பெருங்கருணைப் பேறாநீ?

சீ இந்த வெறியாட்டம் செய்துவைத்த வேடருக்கு
நீயா அருள்கொடுப்பாய்? நினைத்தாற் கொதிக்கிறது

கல்லினுள் தேரைக்கும் கருணை புரிபவளா
கொல்வதை உண்டு குளிர்ந்து மகிழ்ந்திடுவாள்?
தழை கடிக்கும் ஆடுகளின் தலைவெட்டிப் போடுவதால்
தளை அறுமா உமைக்கண்டு தருமம் சிரிக்காதா?

பால்தந்த பசுகாளை பரமசிவன் சொத்தென்றால்
வேல்முருகன் சேவலின்ன வேள்விக்கு இடலாமோ?
காளீ! உனக்குதிரம் காணலையோ எம்நாட்டில்
நாழிக்கு எத்தனைபேர் நலங்குன்றிப் பலியானார்?

வேளைக்கு வேளை விதம்விதமாய் பலியாக்கி
ஆள்கொல்லும் வேலையிங்கு அமளியாய் நடக்கிறதே!

தடுத்து நிறுத்த தாயேஏன் முயன்றிடலை?
அடுத்தடுத்து மனிசருசி அலுத்துவிட்ட தால்தானோ
வாய்பேசா உசிருகளை வதைத்துண்ண எண்ணமிட்டாய்?
ஏய்காளி நீயென் உசிரை எடுத்தாலும்

நீதந்த தமிழ்கொண்டே நின்னை எதிர்க்கின்றேன்
வாதுக்கு வருக வளர்த்தபிள்ளை தின்றவளே
ஆதிப் பழக்கமெலாம் அப்படியே இன்றிதிருந்தால்

பாடை எதற்கு? பறைஎதற்கு? செத்தவரை
ஓடைதனில் கரைக்கும் உபத்திரவம் தானெதற்கு?
மூளையினை ஒருவருண்ண, மூக்குபிய்த்து ஒருவருண்ண
வேளைக்குப் பங்கிட்டு வெளுத்துக் கட்டிவிட்டால்

பசியும் குறையும் பயிர்நிலமும் மிச்சம்தான்
சசியம்மா நீயுண்மைச் சக்திஎனக் காட்ட
புசியம்மா ரத்தம் பூண்டிடுக தலைமாலை
வசித்திடுக சுடுகாட்டில், வலம்வருக நள்ளிரவில்!

வஞ்சரத்தம் குடித்து வழிகாட்டும் நீஎதற்கு
அஞ்சறிவுச் செந்நீரில் அபிசேகம் செய்வித்தாய்?

எதற்காக ஏனிந்த அப்பாவி உசிருகளைப்
பதறடிக்க வைத்தாய்? பலியிட்டோர் கனவினிலே
நீவந்து கேட்டாயாம் நிணம்தருக என்றாமே?
ஆகா உன் அடியவரின் அன்பதனைக் கண்டாயா?

கேட்ட உடனே கிழித்துப் படைத்து விட்டார்
மாட்டோம் எனச்சொல்லும் மனமற்ற உன்பக்தர்!

மீண்டும் அவர் கனவில் மிடுக்காக நீதோன்றி
வேண்டும் உம்தலைகள் எனவிளம்பி என்னிடமே

ஆணைநிறைவேற்ற அதிகாரம் இட்டுளதாய் சொல்லிச்செல்
நானுள்ளேன் கரத்தில் நல்லரிவாள் கொண்டுவர!

— ச .முகுந்தன் —

## இந்துமதம் பதில் தருகிறது

இந்துமதத்தையும் வழிபாட்டு முறைகளையும் வகுத்துக் கொடுத்தவர்கள் ஆரியர்களா? விக்கிரக வழிபாட்டையும், பலி கொடுப்பதையும் புகுத்தியவர்கள் யார்? திராவிடப் பண்புகள் இந்துமதத்தில் இடம்பெறுகின்றனவா?

இந்துமதம் ஆரியர்களுக்குத்தான் உரியது என்ற எண்ணம் தவறானது. வேதகாலப்பண்புகள் கிரேக்கர் கால மதப்பண்புகளுக்கு ஒப்பானவை. அவற்றை இன்றைய வழிபாட்டுப் பண்புகளுக்கு ஏற்ப அமைத்துக் கொடுத்தது திராவிடர்கள்தாம். வானத்தை தேவர்களுக்குரிய இடமாகவைத்து பலிகளின் மூலமும், ஹோமங்களின் மூலமும் பிரார்த்தனை செய்தது ஆரியர்கள். நாளாவட்டத்தில் ஹோமம்— விஇவற்றுக்குப் பதிலாகப் பூஜையும் — நைவேத்தியமும் உருவெடுத்தன. இந்த மாற்றத்துக்குக் காரணமாக அமைந்தவர்கள் திராவிடர்கள். விக்கிரக வழிபாட்டைக் கொண்டுவந்ததும் திராவிடர்தாம். இதை ஆரியர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பலி கொடுத்து, மாமிசத்தைப் பிரசாதமாக ஏற்ற ஆரியர்களை, கனியும் தளிர்களும் கொண்டு பிரசாதம் அளித்துச் சைவர்களாக மாற்றியதும் திராவிடர்கள்தாம். இன்றுநாம் கடைப்பிடிக்கும் இந்துமதம் ஆரியப் பண்புகளும், திராவிடப் பண்புகளும், கலந்து உருவான ஒன்றேயாம்.

- டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் -
'The Hindu View of Life' என்ற நூலில்.

★ ★ ★

புலால் உண்பது மெய்ஞ்ஞானம் கிடைப்பதற்குத் தடையாக இருக்குமா?

'அன்பே கடவுள்' என்பது நமது மதத்தின் தத்துவம். தன்னைக் காப்பாற்ற யாரும் இல்லாதவர்களைக் கடவுள் காக்கிறார். இதையே புராண வரலாறுகள் நமக்குத் திரும்பத் திரும்பச் சொல்லுகின்றன. ஆகையால் நமக்கு எந்தத் தீங்கும் செய்யாத மிருகங்களை வதைத்து உணவாக்கிக் கொள்வதற்குத் தெய்வ சம்மதம் கிடைக்காது. மெய்ஞ்ஞானத்தை உணர விரும்புகிறவர்கள் இந்த அடிப்படையைக் கவனிக்க வேண்டும்.

நல்ல காரியங்கள் சத்வ குணத்தின் மூலமாக வரக் கூடியவை. தீய சிந்தனைகளும் காரியங்களும் ரஜோ குணத்தால் தூண்டப்படுபவை. உபயோகமற்றசெயல்களுக்குத் தமோகுணம் அடிப்படையாக அமையும். சத்வ குணத்தைப் புலால் உணவு அமைத்துக் கொடுக்காது. ரஜோ குணத்தைத்தான் தூண்டும். ஆகையால் புலன்களை அடக்கி, நல்லசிந்தனைகளைத் தூண்டி, நற்காரியங்களைச் செய்ய முயலுபவர்களுக்குச் சாத்வீகமான உணவு—புலால் சேராத உணவு—நல்ல ஆதாரமாக அமையும்.

- பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கும்

# தேர்தல் நடத்த ஐ.தே.க. வற்புறுத்து

எல்லோரும் ஏறிய மூடைக் கழுதையில் சக்கடத்தாரும் ஏறிவிழுந்த கதைதான் சந்திரிகா அரசின் அதிகாரப் பரவல் திட்டத்துக்கு—இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைக்கு — ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் பதவிக்கு வந்து இன்னும் இரண்டு மாதங்களில் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றன. ஆயினும் அதிகாரப்பரவல் திட்டம் காதவழி கடக்கவும் கதியற்று முடங்கி கிடக்கிறது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் இறங்கி அதில் வெற்றி காண முடியாமல் முன்னர் தோல்வி கண்டவர்கள் சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், டட்லி சேனநாயக்காவும் ஆவர்.

இதே முயற்சியில் அழுத்தத்தின் பேரில் இறங்கிய ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் முயற்சியும் அரை குறை வெற்றிதான். இந்தியா தலையிட்டதன் பேரில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது சட்டத்திருத்தம் இப்போது கிடப்பில் கிடக்கிறது.

அந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தில் வகை செய்யப் பட்டுள்ள மாகாண சபையை விட கூடுதல் அதிகாரங்கள் கொண்ட பிராந்திய சபைகளை உருவாக்கும் சந்திரிகா அரசின் அதிகாரப் பரவல் திட்டம் நிறைவேறும் அறிகுறி எதனையும்காண முடியவில்லை.

இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் அரசியல்தீர்வு காணப் போவதாகத் தேர்தலில் ஆணைபெற்ற சந்திரிகா, தனது சொந்த விருப்பத்தின் பேரில், தன்னிச்சையாக, முந்தியதற்கு முற்றிலும்—முரணான போரினூடு சமாதானம் என்று குத்துக்கரணம் அடித்துள்ளார். போர் ஒரு முடிவுக்கு வரும் வரையில் அரசியல் தீர்வைக் கொண்டுவரும் உள்நோக்கம் சந்திரிகா அரசுக்கில்லை

எனினும் வெளிநாடுகளிடம் நிதி மற்றும் பல வகை உதவிகளைப் பெறும் நோக்கத்துடன் சமாதானப் புறாவாக வேடங்கள் போட்டு வருகிறது அரசு. அந்த வேடங்களில் ஒன்றுதான் அதிகாரப்பரவல் திட்டத்துக்கு ஏனைய தரப்பாரின் கருத்திணக்கத்தைக் காணும் ''முயற்சி''.

இந்த முயற்சியில் பங்கு பற்றியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமது முயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதாக அரசாங்கத் தரப்பினர் குற்றஞ் சாட்டுகின்றனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் நடைமுறைகள், நடவடிக்கைகள் போர் முடிந்த பின்னரே அரசியல் தீர்வு என்ற அரசின் உள்நோக்கத்துக்கு ஒத்து ஊதுவதாகவே உள்ளன.

தெரிவுக்குழுவில் கருத்திணக்கம் காணும் முயற்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டது. அரசின் தீர்வு யோசனைக்கு மாற்று யோசனை தருவதாகத் திசை திரும்பிய ஐக்கிய தேசியக்கட்சி, அதனை மெல்லச் சாகவிட்டு விடும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்தியாவில் பாரதீய ஜனதா அரசு பதவி ஏற்ற பின்னர், அமைச்சர் கதிர்காமரைத் தொடர்ந்து புதுடில்லி சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, தமக்குள் புதிய நிலைப்பாடு ஒன்றுக்கு வந்திருப்பதாகத் தகவல்.

★ ஜே. ஆர் — ராஜீவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிகாரத்தை பரவல் செய்வது.

— அதாவது பத்து வருடங்களுக்கு முன்னர் ஐ. தே. கட்சி அரசு காலத்தில் இயற்றப்பட்ட — இப்போது கடப்பில் சொருகி வைக்கப்பட்டுள்ள — 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு புத்துயிர் அளிப்பது.

★ மேற்படி புத்துயிர் அளிக்கும் முயற்சியில் முக்கிய அங்கமாக வடக்கு — கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தி, மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தல்.

மேற்கண்ட இரண்டு அம்சத் திட்டத்தையே ரணில் இப்போது கையில் தூக்கிப் பிடித்திருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் மூலம் அறியவருகிறது.

இந்தத் திட்டத்துக்கு அரசை இணங்க வைத்தால் சந்திரிகாவின் தீர்வுப் பொதியை கீழே அமுக்கி விடலாம் என்பது ரணிலின் எண்ணம் போலும்!

ரணில் தமது இந்த எண்ணத்தை தமிழ்க்கட்சித் தலைவர்களிடம் பேசும் போது சாடை மாடையாகக் கசிய விட்டிருப்பதாகவும் தகவல்.

வடக்கு—கிழக்கு மாகாண சபையை இயங்கச் செய்வித்தால் தமிழ்க் கட்சிகள் அதனை கவ்விப் பிடித்துக் கொள்ளும்; அதன் பின்னர் தமது தீர்வுப் பொதியை முன்னெடுக்க முடியாமற் போய்விடும் என்ற மன அச்சம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உண்டென அறியப்படுகிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும் தமது தீர்வுப் பொதியை முன்னெடுப்பது என்ற திட்டம் தவிடுபொடியாகிப் போய் விடலாம் என்பதனால் வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் வைப்பதனை அவர் விரும்பவில்லை. அதனாலேயே வடக்கு—கிழக்கு தேர்தல் குறித்து தமிழ்க் கட்சிகள் பிரஸ்தாபித்தபோதெல்லாம் அவர் அதற்குப் பின்னடித்து வருகிறார் என்பது அரசியல் உள்ளரங்கத்தின் ஊடாட்டம்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில்தென்னிலங்கையில் உள்ள ஏழு மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்துவது முடிவாகிவிட்டது. முன்னர் ஐந்து சபைகளுக்கு மட்டுமே தேர்தல் நடத்துவதாக இருந்தது. எனினும் பின்னர் ஏழு சபைகளுக்கும் நடத்த ஏற்பாடாகி வருகிறது. அவ்வாறிருக்க வடக்கு — கிழக்கு மாகாண சபையை மட்டும் ஏன் புறந்தள்ளுவது என்பதே ஐக்கிய தேசியக் கட்சியினரின் கேள்வி. இயங்காதிருக்கும் வடக்கு—கிழக்கு மாகாணசபையை இயக்க இது நல்ல சந்தர்ப்பம் என்பது ரணிலின் கருத்து.

ரணிலின் இந்தப் புதிய போக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ரெலோ தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளை அவர் பக்கம் கவர்ந்திழுக்கும். ஈ. பி. டி. பி., புளொட், ஈ. பி. ஆர். எல். எவ் ஆகியன வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கருத்துடையவை.

புளொட், ஈ. பி. டி. பி. ஆகியன வடக்கு—கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகாவிடம் ஏற்கனவே கோரிக்கை விடுத்து வந்தன.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருமாறு ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகம் விரைவில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை கொண்டு வரவிருக்கிறார். அந்தப் பிரேரணையை ஆதரித்து ஐக்கியதேசியக் கட்சி வாக்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரஸ்தாப பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குப் போடப்படும் அழுத்தமாக அமையும்.

வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களின் கருத்தை இங்கே படியுங்கள்.

**ஈ. பி. டி. பி**

வடக்கு —கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இன்று வடக்கு — கிழக்கில் தலைமைத்துவம் இல்லை. இதனால் இங்கு ஊழல் தலைவிரித்தாடுகிறது. முறையான நிர்வாகம் நடைபெறவில்லை இதன் காரணமாகவே நாங்கள் வடக்கு—கிழக்குக்கு ஓர் இடைக்கால நிர்வாகம் வேண்டுமென வலியுறுத்தி வந்தோம்.

## உள்ளதும் புறமும்

குறுமுனி

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வழங்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என நாங்கள் வலியுறுத்தி வந்துள்ளோம். எனவே வடக்கு — கிழக்கு மாகாண தேர்தலை நடத்தினால் நாங்கள் போட்டியிடத் தயார்.

**ஈ. பி. ஆர். எல். எவ்**

வடக்கு — கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த முடியுமென்றால் ஏன் மாகாணசபைத் தேர்தல்களை நடத்த முடியாது?

வடக்கு — கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு — கிழக்குக்கென்றே மாகாண சபை முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் கடந்த பத்து வருடங்களாக அது இயங்காமல் முடக்கி வைத்திருப்பது துரதிர்ஷ்டவசமானது.

**புளொட்**

வடக்கு — கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் வேண்டும் என பலமுறை ஜனாதிபதியிடமும், நாடாளுமன்றத்திலும் வேண்டுகோள் விடுத்தோம். இப்போது வடக்கு — கிழக்கு நிர்வாகத்தில் ஊழல் மோசடி தலைவிரித்தாடுகின்றது. எனவே வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

**கூட்டணி**

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தவேண்டுமென [illegible] கேட்டுக் கொண்டோம். இருந்தும் அரசாங்கம் அடாவடித் தனமாக அங்குதேர்தலை நடத்தியதால் உயிரிழப்புக்களே ஏற்பட்டன. மாகாண சபைத் தேர்தலை வடக்கில் நடத்தினாலும் கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இருக்கிறதா?

**ரெலோ**

இனப்பிரச்சினைக்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து ஒரு தீர்க்கமான ஆலோசனையை முன்வைக்காமல் வடக்கு — கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதால் எதுவித பயனுமில்லை என்கிறது ரெலோ.

வடக்கு—கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் தமது கட்சி பங்குகொள்ளத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் தேர்தல் நடத்தக்கூடிய சூழலை அரசு உறுதி செய்ய வேண்டும் என்பது மு. காவின் நிபந்தனை.

தெற்கில் நடைபெறும் மாகாணசபைத்தேர்தல்களில் அரசு வெற்றி அடையாவிட்டால், தமது தீர்வுப் பொதி பொடியாகிவிட்டதாக நினைத்துக் கொண்டு, அதன் பின்னர் வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த சந்திரிகா முன்வரலாம் என்று அரசியல் அவதானிகள் ஊகிக்கின்றனர்.

வெற்றியோ, தோல்வியோ, தென்னிலங்கை மக்களின் அரசியல் நாடியைப் பிடித்துப் பார்க்கும் தேர்தலாக —

மக்கள் ஆதரவு அரச தரப்புக்கா அல்லது எதிர்க்கட்சிகள் தரப்புக்கா என்பதனை வெளிப்படுத்தும் தேர்தலாக — மாகாண சபைத் தேர்தல் அமையப் போகிறது.

தென்னிலங்கையில் மாகாண சபைத் தேர்தல் வாடை வீசத்தொடங்கி விட்டதாகத் தகவல். அரசியல் கட்சிகளின் புலன்கள் யாவும் அங்கேயே செறிந்துள்ளன. வேட்பாளர்களை நியமிக்கும் வேலைகள் எல்லாத் தரப்புகளிலும் மும்முரமாகி உள்ளன.

ஆளுங்கட்சிக்கு தனக்குள்ள ஆதரவில்—பலத்தில்— சந்தேகம் உள்ளதால் பெரும் புள்ளிகளை களத்தில் குதிக்க வைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதனாலேயே அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களில் கூடக் கைவைக்கப் படுகிறது. பாவங்கள், அவர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் மத்தியிலிருந்து மாகாணம் செல்ல விரும்பவில்லை; வற்புறுத்தலின் பேரில் தானாம் என்பது உள்ளிடத்து ஊடாட்டம்!

ஆனால் ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியோ இளவட்டங்களுக்குத்தான் வேட்பாளர் பட்டியல்களில் அதிக இடங்களையும் முதன்மை இடங்களையும் ஒதுக்கி வருகின்றதாம்.

ஸ்ரீமணி லலித் அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணைந்து தேர்தலில் போட்டியிடவுள்ளது.

மலையகத்தைப் பொறுத்த வரை தமிழ் வேட்பாளர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்கி அவர்களுக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் வழங்க ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுத்து வருவதாகக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியே பெரும்பாலான மாகாண சபைகளில் உண்டு. தல்தா மாளிகை குண்டு வெடிப்பின் பின்னர் ஐ. தே. க. கடைப்பிடித்து வரும் போக்கு அதன் ஆதரவை தெற்கில் அதிகரிக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகையால் மாகாணசபைத் தேர்தலில் ஐ. தே. கட்சியின் பக்கமே தராசு இறங்கும் என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

★ ★ ★

அமைச்சர் பீரிஸ் திறமைசாலியே. அரசின் பக்கத்தில் சொல்லக்கூடிய நியாயங்களை எடுத்துக்கூறி உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து 78 கோடி டொலர் நிதியை இந்த வருடத்தில் பெற்று விட்டார். இந்த நிதி உதவி 1998 — 99ஆம் நிதி வருடத்தில் அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தப் படும்.

உலக வங்கியின் அனுசரணையின் கீழ் வருடாந்தப் பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஜப்பான், சுவீடன், நோர்வே, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கொரிய ஆகிய நாடுகள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றன.

அமெரிக்காவும், ஜேர்மனியும், ஜப்பானுமே அதிகம் அள்ளிக் கொடுக்கும் நாடுகளாகத் திகழ்கின்றன. இம்முறை ஜப்பான் தனக்குள்ள நிதி நெருக்கடி காரணமாக உதவு தொகையை குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

வெளிநாட்டு உதவி நிதிகள் 1990 ஆம் ஆண்டில் இருந்து குறைக்கப்பட்டு விட்டன. அத்தோடு கிழக்கு ஆசியாவில் உள்ள பல நாடுகளுக்கும் புதிதாக நிதி உதவிகள் வழங்கவதற்குத் தொடங்கப்பட்டுள்ளது அத்தோடு உலகப் பொருளாதார நிலையும் ஓரளவு தளர்ந்து வருகிறது.

இத்தகைய பின்னணியில் 78 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்க இருப்பது இலங்கைக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்பதில் ஐயமில்லை.

இந்தளவு கணிசமான தொகை கிடைத்தமை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை உதவி வழங்கும் நாடுகள் அங்கீகரித்துள்ளதையே எடுத்துக் காட்டுகிறது.

அரசமைப்புத்துறைஅமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மாநாட்டில் விடயங்களை விளக்கி, விவரித்த தன்மையே நிதி உதவி கிடைக்க முக்கிய காரணம் என்பதில் ஐயமில்லை.

போருக்கு மத்தியிலும், கிழக்காசிய பொருளாதார நெருக்கடியின் பாதிப்புகளின் மத்தியிலும் நாட்டின்பொருளாதார வளர்ச்சி திருப்திகரமாக அமைந்ததாக அவர் தரவுகளுடன் தமது பக்கத்தை எடுத்துக் கூறி உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளின் நம்பிக்கையைப் பெற்றார்.

அதே போன்று அரசியல் தீர்வு, போர் குறித்தும் அவர் உதவி வழங்கும் நாடுகளை நம்ப வைத்துவிட்டார்.

★ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தி[illegible] அரசு அக்கறையாகவ[illegible] முனைப்பாகவும் செய[illegible] கிறது.

★ ஆனால் கட்சி அர[illegible] லால் தீர்வு முயற்சி பின்[illegible] டைவு கண்டுள்ளது.

(X! ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத விரோதம்

தூக்கென்றேன் இறக்கென்றாய்
தூங்கென்றேன் எழும்பென்றாய்
நோக்கென்றேன் 'நோ' என்றாய்
நுழையென்றேன் வெளிவந்தாய்!

சிரியென்றேன் சினம் கொண்டாய்—(சரி)
சீறென்றேன் ஆறிப்போனாய்
''சொறி''யென்றேன் சுகமென்றாய்
சொதி யென்றேன் மோர் விட்டாய்!

ஓடென்றேன் நடந்துபோனாய்—(மனதில்)
ஒளியென்றேன் வெளியில் விட்டாய்
பாடென்றேன் பகிடியென்றாய்
பழியென்றேன் புகழ்ந்துவென்றாய்!

தா என்றேன் மாட்டேனென்றாய்
தர மறுத்துப் பின் கொடுத்தாய்
வா என்றேன் போய் விட்டாய்—இள
வயதென்றால் இப்படித்தான்!

—கி. வாயுபுத்திரன்—

# மயிர்க்கொட்டிப் புழுவும் மனிதனும்

பச்சைகளைக் கண்டாலே
பதறுகின்ற மனிதர் நாம்
பச்சைகளைத் தின்றே பந்தாய் உருண்டவன் நீ
தொட்டுத் தடவ
தோல்சுரணை அற்றவராய்
விட்டுக் கொடுத்து; விண்நோக்கி கைஉயர்த்தி
தட்டிப் பார்க்கத் தலைகுனியும்
எம்மைவிட......
சுட்டிப் புழு நீ சூரன்தான்
யார்மறுப்பார்?!
அணைத்தாலும் சாவை
அளிப்பவனின் மேனியினைச்
சுணைக்கவைக்கப் போராடும்
''சுரணமான்'' நீ; நானோ? பார்
திராணி அற்ற திருமான்! ஆறறிவுப்
பிராணிதான்; வெறும் பெயரால் நான்மனிதன்!

உண்டு கொழுத்தால்
ஊர் சுற்றி வீண்வம்பு
கொண்டு வரும் நாங்கள் குரங்கினது பூட்டர்கள்
அப்பம் பங்கிட்டு அளித்த தந்திரிகள்
இப்போதும் அத்திறமை இரத்தத்தில் உண்டெமக்கு!

ஆனால் நீ கொழுத்தால்
அடங்கித் தவமிருப்பாய்
உள்ளடக்கம் பெருத்து உனை நீயே சுற்றியொரு
வெள்ளைச் சிறையெழுப்பி வீண்புலன்கள்
தமை அடக்கி
உன்னை நீயே முதலில்
உணரத் தலைப்படுவாய்.
மோனம் பயின்று
முற்றறிவும் கைகூடி
ஞானங் கிளர்ந்து நடைபயிலும் ஞானிகள்போல்
வானில் பறக்கும் வலிமைபெற்றாய்
வண்ண வண்ண
தோகை முளைக்கும் துடிப்பில்
சிறையுடைப்பாய்.
ஆகா! புழுவே அற்பன்நான்;
நீ பெரியாள்!

—செல்லப்பர்—

# நேற்றைய மழையில்...!

தூறல் வலுத்து தொடர்ந்து வெயிலை துரத்தி விரட்டியது
''சோ''வெனப் பாடி இடித்துச் செருமி சிரித்து விரட்டியது
ஈரமழை பெருந் தாரையாய்ச் சிறியோர் போரைத் துவங்கியது
எட்டுத் திசையும் கரைந்து ஒழுகியதாய்ப் புனல் ஓடியது.

கார்முகிற் பேய்கள் குவிந்து நிறைந்திடச் சூரியனோ ஒளிந்தான்
கூசிடும் 'காற்றுப் புடையன்கள்' சீறின...சந்திரனும் மறைந்தான்
தேடின மின்னல் வெளிச்சங்கள்; நட்சத்திரங்கள்'கவர்' எடுக்கும்
ஆணவமாய் நடைபோட்டது மாரி...நிலமோ நடுநடுங்கும்.

தாழ்ந்து பணிந்திட்ட புற்களைக்குட்டி ரசித்தது வந்த மழை,
தன்திசைக்கெல்லாம் இழுத்தது புற்களை வீசித்தொலைத்த
புயல்
நீண்ட விருட்சமோ நின்றதிவற்றின் முன்! பல்லைநெருமிக்
கொண்டு
சீண்டின காற்றும் புயலும்; விருட்சத்தை வீழ்த்தக் கறுவிச்
சென்று.

மூசி முயன்றன, மோதி அடித்தன முட்டிபெயரும் என்று
மூன்று கிளைகளைப் பிய்த்து எறிந்தன...கோபம் சிவக்கநின்று
ஏசியும் பார்த்தன! எதுவும் நடக்கலை...விருட்சம் சிரித்துக்
கொண்டு
சொன்னது; ''புல்லுக்கு வேர்ப்பலமில்லை எனக்குநிறைய''
என்று.

விட்டது பேய்மழை, பட்டதடாபுயல், நின்றதுவாம் விருட்சம்
''வெற்றி எடுப்பம் அடுத்தமுறை'' என்று போனதடா மழையும்
இற்ற கிளையில் புதிய துளிர்களைப் பூத்ததடா விருட்சம்.
ஏட்டிக்குப் போட்டிதான் ''வாழ்வின் இயற்கையோ''?
தெய்வத்துக்கே வெளிச்சம்.

—அருணன்—

### அயலவன்...!

அயலவன் சிரித்தால்
சிரிப்பாரு முண்டு!
அயலவன் சிரித்தால்
அழுவாரு முண்டு!!

### பொறாமை..?

பொறாமைத் தீயை
அறிவுநீர் தணிக்கும்!
பொறாமைத் தீயை
ஆசைநெய் வளர்க்கும்!

### போதையும் போதமும்

போதம் மிகுந்தால்
மேதைக ளாவார்!
போதை மிகுந்தால்
பேதைக ளாவார்!!

### பணம்

என்னுடன் இருந்தாய்!
எல்லாரும் உறவு!!
என்னைப் பிரிந்தாய்!
எல்லாரும் துறவு!!

### தொண்டில்...?

தொண்டுகள் செய்திட
யாருமே முன்வரார்!
தொண்டினில்
பிழைசொல்ல
யாருமே பின்நில்லார்!

### நீ[பீ]திகள்

நீதிகள் இருந்தால்
பீதிகள் இல்லையாம்!
பீதிகள் இருந்தால்
நீதிகள் இல்லையாம்!!

— முருகு —

# சாதனை

நீண்ட பயணம்!
தின்று கொழுத்தோரின்
திமிருக்காகத்
தட்டுத் தடுமாறித்
தொடர்கிறது.
தொடங்கியவர்கள்
தொலைந்துபோனார்கள்
இன்றிருப்போர்
இனியிருப்பாரா?
எனினும்,
இவர்களாலும்
சாதனைகள்
எழுதப்படுகின்றன.
எதில்...?
இறப்பதில்...
இழப்பதில்...
இழுப்பதில்...
எல்லாவற்றிலுமே!

— உடுவில் அரவிந்தன் —

# 'ஹைக்கூ' கவிதைகள்

லொகு பண்டா அடித்த
அருமையான ஆறு
—எறிகணை!

★ ★ ★

சீருடை தரியாத
சோதனை வீரர்
சோதிக்கும் ''ஐசி''
—ரியூசன்காட்!

★ ★ ★

மின்னிவரும்காரிகையாள்
கண் சிமிட்டிப்
போயிடுவாள்
—''கரண்ட்''!

★ ★ ★

பாதியிலே பாடசாலை
— பின்
மதிலால் பாய்ந்தவர்கள்
கூடிவிடும் போதிமரம்
— மினி [தியேட்டர்]

★ ★ ★

பல்லில்லாக் கிழவருக்கும்
பால் குடிக்கும்
குழந்தைக்கும்
பொதுவான ஆகாரம்
— பாண்!

—[illegible]—

# கட்டாய துப்பாக்கிச் சேவை!

செவிமலர்ச் செந்திற் கிழவா நினக்கோர்
கவிமலர் தந்தேன் களி.

வேதாளக் கூட்டம் விழிபிதுங்க வேல்தொடுக்கும்
காதிலேபூக் கந்த சுவாமியே — தாதில்லாக்
கோதுமுலைக் கூத்தி கொடுமுடியாள் வைத்தபொதி
பேதியெனச் சொன்னாற் பிணக்கு.

காதிலே பூச்சூடுங் கந்த சுவாமிநின்
வேதைதரும் வேல்வரிகள் வீணுக்கே! — போதைதரும்
கோதைமுந் தானை கொழுகொம்பாய்க் கண்டதொரு
நாதியிலாக் கூட்டமென நாணு.

நூற்றுக்கு நூறெய்த நாலே குறையென்று
நேற்றுவந்த நெப்போ லியனாருஞ் — சாற்றுவதோர்
தேற்று மொழியெனத் தென்னவருங் கண்டின்று
தூற்ற முனைந்தார் துணிந்து.

தப்பிப் பறந்த சப்பித் துருப்பினரைக்
கப்பியுங் கவ்வா நிலைகண்டு — இப்போது
தொப்பி புரட்டுகிறார்; தூண்டுகிறார்; கட்டாயத்
துப்பாக்கிச் சேவையெனத் தொட்டு.

துடுப்பையெடுத்தா ரடு போர் தொடுத்தார்
அடுத்து நடத்தத் துடியாய்த் — துடித்து
முடிக்க முடியா திடுப்பைப் பிடித்து
விடுத்தார் படைசேர் விதி.

— அங்குசன் —

# இதயம் சபிக்கும் நாள்கள்!

இனிய கவிதைத் தூறல் விழுந்து இதயம் பூத்ததே!
பனியில் நனைந்த பூவைப் போல விழியும் கரையுதே!
உதய வேளை உயிரின் கீதம் என்னை எழுப்புமே!
சிதிலமாகக் கனவு மாண்ட கதையை நினைக்குமே!

மண்ணில் இன்று வேனிற் காலம் வெயில் கொளுத்துதே!
விண்ணில் கூட நிலவு கண்டு நாளும் ஆனதே!
சோக நாள்கள் தாண்டிப் போகும் வேளை வந்ததே!
தாக நேரம் நீர் பருகத் தடையும் வந்ததே!

குரல்வளைகள் உடைந்த குயில் கூவமறுக்குதே!
நிரல் நிரலாம் பறவைகளின் சிறகு முறிந்ததே!
வாழ்வறுந்த பேதைப் பெண்கள் நெஞ்சங் கதறுதே!
வாழ்வதன் முன் வதைத்த பிஞ்சுப் பூக்கள் வாடுதே!

காயம்பட்டு நொந்தபோது கருணை கொள்வதார்...?
தேயவில்லைத் துயரம் என்று தெரிந்து கொள்வதார்...?
தேசமெல்லாம் பார்த்திருக்கு! தேறுதலில்லை!
நாசம் வந்தபின்புதானா வந்து செல்லுவார்?

பூமகளின் புழுதியில் ஏன் புதைந்ததிந்தக் கறைகள்?
தீயெழுதும் கவிதைகளும் எழுந்தெழுந்து புலம்பும்!
என்று வரும் விடிவெள்ளி எனத்தேடும் விழிகள்.
''இன்றிருக்கும் நிலை போக...'' எனச் சபிக்கும் இதயம்.

— தாட்சாயணி —

# வீதித் தடையை விலக்குவீர்!

நாலுபேர் கூடி ''ஹான்டில்'' மேல் கைபோட்டு,
நடுவீதிமுழுதும் தமதாக்கி,
காதல் கதைகளில் களித்தும்; சினிமா
நாயகியர் அழகினை நயந்தும்;
பேசிச் சிரித்து, போதையில் மிதப்பவர்போல்,
பாதைசுழித்துப் பயணிக்கும் தம்பியர்க்கு,
என்
பேனாமுனை விடுக்கும் தாழ்வான விண்ணப்பம்!

எண்ணச் சிறகடிக்கும் சின்னவயதில்,
வண்ணக் கனவுகளில் வாழும் பருவத்தில்,
கலர்கண்டால் ''கொலர்'' தூக்கும்
பருவத்து வெளிப்பாட்டை,
தவறாகக் கூறுவது தப்புத்தான்.
நாமென்ன,
முற்றும் துறந்த முனிவரா அந்நாளில்?

பானுமதி படமென்றால், பத்துமுறை பார்த்திருப்போம்
தேருக்குப் புறப்பட்டு, தியேட்டருக்குள் புகுந்திருப்போம்
கோயில் விழாக்களில் கும்மாளம் போட்டிருப்போம்
குளக்கரையில், குளிர் ஆல மரத்தடியில்
கூடிக்களித்து அரட்டை கொட்டினோம்
ஒளிப்பில்லை.

ஆனாலும் தம்பி இவை,
வீதியில் நடப்பதனால் — சிலர்
விதி விரைவில் முடிவதற்கும்
விறகோடு வரும் ஏழை தடுமாறி விழுவதற்கும்
விழுகிழவன் கோல்தவறி வேலியில் சாய்வதற்கும்
வழிவகுக்கும் என்பதனால்,
வீதித்தடை விலக்கி, விதிமுறையை மதித்திடுவீர்!

—புத்தூர் வே. இளையகுட்டி—

**கவிதை முற்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிதக்கும் சொர்க்கங்கள்

விமானப் பயணங்கள் சொகுசானவை. சில மணித்தியாலங்களில் ஆயிரக்கணக்கான மைல்களை கடந்து வேண்டிய இடத்தைப் போய்ச் சேரும்போது இன்றும் ஆச்சரியமாகத்தான் பயணம் அமைகிறது.

பயணத்துக்கு விண்ணப்பித்தால் மாதக்கணக்கில் இழுபடும் நடைமுறைகள். கடைசியில் பயணத் திகதி உறுதிப்படுத்தப்பட்டதும் யாழ் — கொழும்பு விமான சேவை ஒரு வரப்பிரசாதமாகவே கண்ணில் தெரியும். பயணத்தை மேற்கொள்ளும் நாளில்... பலமணிநேர சோதனை நடைமுறைகள் தொடர்ந்து... முன்பெல்லாம் திறந்த டிரக்கிலும் இப்போது பஸ்ஸிலும் விமான நிலையத்தின் ஒரு கோடியை நெருங்கும் வாய்ப்பு பலருக்கும் கிட்டுகிறது.

விமானத்தில் ஏறி அமர்ந்தாலும் சிலவேளைகளில் அது புறப்படமுன் வெறுப்புத் தட்டிவிடும். ஓர் ஆள் கூடுது என்பார்கள்; குறையுது என்பார்கள்; கைவிடப்பட்ட பொதி ஒன்று கிடக்குது என்பார்கள்; திருப்பி இறக்குவார்கள்; ஏற்றுவார்கள். கடைசியில் ஒருபடி விமானம் புறப்படத் தயாராகும்.

எந்த வசதியான நாட்டு விமான சேவை என்றாலும் ஓடுபாதையில் அசுரவேகம் பிடித்து வானில் கிளம்பும் விமானம் மீண்டும் பாதுகாப்பாக தரையிறங்கும் வரை நெஞ்சுகளை ஏக்கம் அடைக்கத்தான் செய்யும். விமானத்தில் சில்லுகள் வெளிப்பட்டு— ஓடுபாதையை அவை முத்தமிட்டு சீராக விமானம் தரையில் ஓடத் தொடங்கும் போது நெஞ்சுக்குள் பால் வார்ப்பது போலிருக்கும்.

இரத்மலானையில் இறங்கி விமானத்தோடு உரசிக் கொண்டு நிற்கும் பஸ்ஸில் இடம்பிடித்து ஓய்வதற்குள் பஸ்ஸும் புறப்பட்டு விடும். விமான நிலையத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட நேரம் கிடைக்காது. யாழ்ப்பாணத்து செம்மண்வாசனை மாறாமலே — புழுதி படிந்திருக்க — காலிவீதியில் நின்று கொண்டு சாரிசாரியாக வரும் வாகனங்களைப் பார்த்தபின்பும் — கொழும்புக்கு வந்துவிட்டோம் என நினைக்க ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

சுமார் எண்ணூறு பயணிகளை ஏற்றிக்கொண்டு பறக்கும் இராட்சத பயணிகள் விமானங்கள் தயாராகி வருகின்றன என செய்திகள் வருகின்றன. இவைதான் ஆகாயக் கப்பல்களோ?

என்னதான் வசதிகளும் கண்காணிப்பும் இருப்பினும் விமானப் பயணங்கள் ஆபத்தானவைதான் என்பதை மறுப்பதற்கில்லை. தினமும் உலகின் எங்காவது ஒருமூலையில் விமான விபத்துக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அவற்றின் கோரம் சொல்லிமாளாது.

தவிர, இருக்கைகளில் பல மணிநேரம் கட்டுப்பட்டுக் கிடப்பதை அடிக்கடி விமானப்பயணம் செய்பவர்கள் வெறுக்கத்தான் செய்கிறார்கள். உல்லாசமாகக் கப்பல்களில் பயணம் செய்வது சிறந்தது என பலரும் நினைக்கிறார்கள். கடற்பயணம் — கப்பலின் தாலாட்டு — இதமான புதிய காற்று — இருக்கைகளில் பட்டிகளால் பிணைக்கப்பட்டுக் கிடக்காமல் — ஓடித் திரியும் வாய்ப்புகள்— என சுதந்திரங்கள் அதிகமான இப்பயணத்தை யார் விரும்பார்?

உல்லாசமாகப் பயணம் செய்யவெனப் பல கப்பல்கள் கட்டப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றின் உள் — வெளி அமைப்பும் — அழகும் காண்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும். கடலலைகள் தாலாட்ட அவற்றில் புறப்பட்டால் பயணம் ...க்கமாகவே தெரியும். ...ல் ஆபத்துக்கள் சந்...ட்டால் சரி.

சில மாதங்களுக்கு முன் காங்கேசன் துறை —மன்னார் கப்பல் சேவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பயணிகள் பாவனைக்கு உதவாதது என — சிபாரிசு மறுக்கப்பட்ட—ஒரு கப்பல் பயணிகளை ஏற்றத் தயாராகி இருந்தது. இறங்குதுறையில் நீண்டவரிசையில் நிற்கும் பயணிகளை எப்படி இந்தக் கப்பலுக்குள் அடக்கிவிட இயலும்?

கப்பல் அழகாகத்தான் இருக்கிறது. வெள்ளைநிற மேல் தளங்கள் — சட்டங்கள் வேலி அமைக்கும் மொட்டை மாடிகள் — கண்ணாடி யன்னல்கள் — அன்டெனாக்கள்...

மாலை ஆறுமணிக்கெல்லாம் பயணிகள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றார்கள். உள்ளே சொகுசு தரை விரிப்புகள் — சொகுசான இருக்கைகள் — வண்ண விளக்குகள் என ஒரு ஹோட்டலுக்குள் வந்துவிட்ட உணர்வு. இதையா பயணிகள் பாவனைக்கு உதவாதது எனச் சொன்னார்கள்?... அப்படியானால் உதவும் எனச் சிபாரிசு செய்யப்படும் கப்பல்கள் எப்படி இருக்குமோ?

**...கடலில் மிதக்கும் சொர்க்கங்களாக விளங்கி பேரனர்த்தத்தில் முடிவடைந்த கப்பல் பயணங்கள் பற்றிய உணர்வு பூர்வத் தொகுப்பு இது.**

கப்பல் சிப்பந்திகள் பயணிகளுக்கு பொலித்தீன் பைகளை விநியோகித்துக் கொண்டு இருந்தார்கள். பயணிகளும் விழுந்தடித்து வாங்கிச் சேகரித்துக் கொண்டார்கள். ஆனால் யாருக்கும் வாந்தி எடுக்கும் மூட் அப்போ தென்படவில்லை.

நான்கு மணிநேர கடற்பயணம் என்றார்கள். ஆனால் கப்பல் விடியத்தான் புறப்படும் என்கிறார்கள். அடைக்கப்பட்ட அறைகள். ஆனால் குளிரூட்டிகள் செயற்பட மறுத்தன. எல்லோருக்கும் குப்பென வியர்க்கத் தொடங்கியது. பலரும் வாந்தி எடுக்கத் தொடங்கினர்.

கும்மிருட்டு வெளியே அப்பிக்கொண்டது. இடம் உள்ள வரை மொட்டை மாடிகளைப் பலரும் மொய்க்க முனைந்தனர். வாந்தி — இருள் — வியர்வை — அடுத்தவர் நெடி — கப்பல் குலுக்கம் — உறக்கம் இன்மை என நரகமாகவே இரவு கழிந்தது. விடிந்ததும் கப்பல் புறப்படுமாம்...


இப்படியான எமது அனுபவங்களை வைத்துக் கொண்டு சர்வதேச விமான மற்றும் கப்பல் பயணங்களை எடைபோடுதல் சற்றுச் சிரமமே.

பெருமெடுப்பிலான செலவில் தயாரிக்கப்பட்டு இப்போ சக்கைபோடு போடும் அமெரிக்கத்திரைப்படமான ‘டைட்டானிக்’ பற்றித் தற்போது உலகெங்கும் பேசப்படுகிறது. 1912 இல் நிகழ்ந்த மிகவும் சோகமான — கோரமான அனர்த்தம் பற்றிய நினைவுகளை இத்திரைப்படம் மீட்டு நிற்கின்றது.

டைட்டானிக்—ஒரு சொகுசான வசதிகள் நிறைந்த உல்லாசக் கப்பல். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற முதலாவது பிரமாண்டமான தயாரிப்பு அது எனலாம்.

46 ஆயிரம் தொன் எடை கொண்ட அக்கப்பலின் நீளம் சுமார் 900 அடிகள். இதன் ஒன்பது மாடிகளும் வசதியான ஹோட்டல் போன்ற அமைப்பினையும் அறைகளையும் கொண்டவை. கலை நயம் மிக்க வேலைப்பாடுகளுக்கும் அங்கே குறைவில்லை.

இதனுடைய முதலாம் வகுப்பு அறை ஒன்றுக்கு




கப்டன் ஸ்மித்

அன்று அறவிடப்பட்ட கட்டணத்தின் இன்றைய பெறுமதி சுமார் ஐம்பதினாயிரம் அமெரிக்க டொலர்கள் என்றால் பாருங்களேன்.

கன்னிப் பயணத்தின்போது ஆயிரக்கணக்கான முக்கிய பிரமுகர்களுடன் அத்திலாந்திக் சமுத்திரத்தைத் தாண்ட வேண்டிய டைட்டானிக் கப்பல் — கட்டப்பட்ட போது அதன் பாதுகாப்பும் — ஆபத்துக்களை எதிர்நோக்கும் திறனும் நன்கே ஆராயப்பட்டன. கப்பலின் உடலோ ஓர் அங்குலம் தடிப்புள்ள உறுதியான இரும்புத் தகடுகளால் தயாரிக்கப்பட்டே இருந்தது.

கப்பலைக் கட்டியவர்கள் விபத்துக்களை எதிர்நோக்கியே திட்டமிட்டு இருந்திருக்கிறார்கள். பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கும் வகையில் தயாரிப்பில் கவனம் செலுத்தப்பட்டே இருக்கிறது.



‘மூழ்கும் டைட்டானிக்’

கப்பலின் புறச் சுவரில் உடைவு ஏற்பட்டால்கூட உள்ளே புகும் கடல் நீர் முழுக் கப்பலையும் நிறைத்துவிடாமல் தடுக்கும் வகையில் தடுப்புக்களும் பிரிப்புக்களும் அமைக்கப்பட்டிருந்தன. உடைவு ஏற்படும் இடத்துக்கு நேரே உள்ள அறைக்குள் மட்டுமே நீர்புக முடியும்.

எதிர்பார்க்க முடியாத கடும் சேதம் கப்பலுக்கு ஏற்படுமாயின் பல அறைகள் நீரினால் நிரம்பினாலும் கூட கப்பல் முற்றாகத் தண்ணீ[illegible] மூழ்கும் நிலை வந்தாலும் ஆகக் குறைந்தது மூன்று நாள்கள் ஆதல் தேவைப்படும் எனக் கப்பலைக் கட்டியவர்கள் கணித்தார்கள். அதற்கிடையில் வேண்டிய உதவிகள் நடுக்கடலிலும்கூட வரவழைக்கப்படமுடியும் என்ற நம்பிக்கை.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் இது என்பது கப்பல் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் போதிய அனுபவங்கள் பெறப்பட்ட காலமே.

1790 களில் இரும்பினாலான படகுகள் தயாராகி விட்டன. அவை பெரும்பாலும் நீராவியால் இயக்கப்பட்டன. 1836 இல் புறப்பெல்லர் எனப்படும் சுழல் விசிறிகள் கப்பல்களை இயக்கத் தொடங்கி விட்டன. இக்காலப்பகுதியில் இருந்து கப்பல்களின் பருமனும் — வேகமும் செயல்திறனும் — அதிகரிக்கவே செய்தன.

சுமார் 75 இலட்சம் அமெரிக்க டொலர் செலவில் பிரிட்டனில் அன்று தயாரிக்கப்பட்ட டைட்டானிக் கப்பல் பயணத்தில் பெரும் சாதனைகளைப் படைக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

பிரிட்டனின் சௌத்தாம்டன் (Southampton) துறைமுகத்திலிருந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளுடன் அது தனது கன்னிப் பயணத்தைத் தொடங்கியது. பிரான்சிலும் அயர்லாந்திலும் தரித்து நின்று மீண்டும் புறப்பட்ட அக்கப்பலின் இலக்கு நியூயோர்க் தான்.

அமெரிக்காவை நோக்கி அத்திலாந்திக் சமுத்திரத்தில் பெருமையுடன் இறங்கியது டைட்டானிக். கடல் நீரைக் கிழித்தபடி சமுத்திரத்தை இருகூறாக்கும் வலிமை

தொகுப்பு:
**மு. சிவநேசன்**

கொண்ட நெஞ்சுறுதியுடன் கப்பல் பயணத்தை தொடர்கிறது. நெஞ்சை நிமிர்த்தி பெருமை பிடிபடாமல் நிற்கும் கப்டன் எட்வாட் ஜே. ஸ்மிதின் மனநிலையை சொல்லியா தெரிய வேண்டும்? மிகவிரைவில் அவன் ஓய்வு பெறவும் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. கப்டனாக இதுவே அவனது கடைசிப் பயணம் எனவும் சொல்லப்படுகிறது.

கப்பலின் கன்னிப் பயணத்தில் இடம்பிடிக்கப் போட்டி போட்டவர்களில் பலருக்கும் பயண வாய்ப்புக் கிட்டவில்லை என்ற கவலை. பிரபல தொழில் அதிபர்கள், கலைஞர்கள், பிரிட்டனின் பெரிய புள்ளிகள், விஞ்ஞானிகள், அரசியல்வாதிகள் எனப் பலரும் கப்பலில் இடம் பிடித்து விட்டனர். அவர்களின் ஆட்டமும் பாட்டும் அளவுகணக்கின்றி ஆனந்தமாகவே இருந்தது.

டைட்டானிக்கின் புறப்பாடு பிரிட்டனுக்குப் பெருமையாகவே இருந்தது. பத்திரிகைகள் பெருமளவு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளைப் பிரசுரித்தன.

கப்பலை வடிவமைத்த பொறியியலாளர் தோமஸ் அன்ட்றூஸ், கப்டன் ஸ்மித், மற்றும் பல பொறியியலாளர்கள், தொலைத்தொடர்பு சாதன இயக்குநர்கள், கப்பல் சிப்பந்திகள் எனப் பலரும் கண்காணிப்புடன் செயற்பட்டுக்கொண்டே இருந்தனர்.

1912 ஏப்ரலில் புறப்பட்ட பயணம் 3, 4 நாள்கள் மிக ஆனந்தமாகவே கழிந்தது. நட்புகள் மலர்ந்திருக்கும். காதல்கள் கனிந்திருக்கும். விருந்துகள் உச்சம் கண்டிருக்கும்.

காலநிலை இதமாக—குளிராக இருந்தது. கடற் பரப்பிலே முகில்கள் கொஞ்சுவது போலவும், மலைக் குன்றுகள் தோன்றுவது போலவும் சிறுசிறு பனிமலைகள் தென்பட்டன. இவற்றைப் பற்றிய வானொலி எச்சரிக்கையும் கிடைத்தே இருந்தது.

நேரம் மாலை 7. 30 இருக்கும். ‘Californian’ என்ற கப்பல் மூன்று பாரிய பனிக்கட்டி மலைகள் 5 மைல்கள் தெற்கே தென்படுவதாக அறிவித்து இருந்தது. எனினும் கடலையும் இருளையும் கிழித்தவாறே டைட்டானிக் முன்னேறிக்கொண்டிருந்தது.

இவ்வாறான பல எச்சரிக்கைகள் அன்று கிடைத்த வண்ணமே இருந்தன. வரவரக் காற்று குளிராக இருந்தது. கடலில் அலைகள் கூட இல்லாத அமைதி. சந்திரன் தென்படாத இரவு. கப்பலின் உச்சியில் இருளைத் துளாவும் விழிகளுடன் பணியில் ஈடுபட்டிருப்பவரின் கண்களில் எதுவும் வித்தியாசமாகப் படவில்லை.

பொதுவாக விபத்து திடீரென நடந்துவிடும். ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள் தெரியாமலே அடிபட்டோ. தடம்புரண்டோ போய்விடும். மீண்டும் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட பின்புதான், சைக்கிளோட்டி விபத்து நடந்த முறை, தவறுகள் பற்றியெல்லாம் கணிக்க அவகாசம் கிட்டுகிறது. தெரிந்து யாரும் விபத்துக்களில் போய் மாட்டிக்கொள்வதில்லை.

ஆனால் டைட்டானிக் விபத்தில் சிக்கியபோது நடந்தது என்ன என்ற சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. விளைவுகளைச் சந்தித்தவர்களால்காரணங்களை ஆராய முடியவில்லை. கடலில் மறைந்துபோன டைட்டானிக் பற்றி மேலும் ஆராயவோ அதைக் கண்டுபிடிக்கவோ அந்தக் கால தொழில் நுட்ப வலு இடம்தரவில்லை.

அதே இரவு 11. 40 மணியளவில் தொலைவில் — அடிவானில் நட்சத்திரங்கள் மறைவதைக் கண்ட பணியாள் எதிரே பாரிய ஐஸ் மலை தென்படுவதைக்கண்டு பதறிப்போனான். நிலவு இருந்திருந்தால் தொலைவில் அதனைக் கண்டிருக்க முடியும். காற்றும் அலைகளும் இருந்திருந்தால் அவை மோதிக் கிளம்பும் வெண்நுரை அதனை அடையாளம் காட்டி இருக்கும்.

அவன் செய்தி கொடுக்கவும் கப்பல் அவசரமாக திசை திருப்பப்படுகிறது. நீர் மட்டத்துக்குக் கீழேயும் மிதக்கும் பாரிய ஐஸ்குன்று விளிம்புகள் கப்பலின் பக்கச் சுவரைப் பதம் பார்த்தன.

கப்பல் திரும்பும்போது அருகே பாரிய பனிமலைச் சுவர் அழகாகத் தெரிகிறது. அதிலிருந்து கொட்டப்படும் ஐஸ்கட்டிகளை அள்ளி எத்தி விளையாடிய பயணிகள் பலர். — தொடரும் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குப்பி விளக்கின் குறு வெளிச்சம். அந்தத் திண்ணை மூலையில் வெது கரத்தை வசையாய் ஊன்றியபடி நான். பாடப் புத்தகத்தில், 'சின்ன மகளின் சின்னக் கைகள்' பாடத்துடன் பல நிமிடங்கள்...... புரியவில்லை. வினாவிடை, வீட்டுவேலை. சீ.. ஏன் தான் எனக்குப் பள்ளிக்கூடம்? எதைப் படிச்சாலும் ஏறுதே இல்லை. என்ன செய்ய? இனி நாளைக்கு நான் போனால் நல்ல சாப்பாடு இருக்கு. எல்லா சர்மாருக்கும் எனக்கு அடிக்காம சம்பளம் வராது போல— பாவம் அந்த சமூகக்கல்வி சட்டம்பியை விட.

தை மாதம் தந்த சிறடை அமுக்கு ஏறியேறி தட்டாப் போச்சுது. அடிச்சடிச்சு சமூகப்போட்டு ஐப்பசி மட்டும் சமாளிச்சாச்சு. காற்சட்டைப் பின்பக்கம் அரிதட்டாப் போச்சுது. இனி என்ன செய்ய?

நான் ஒவ்வொரு நாளும் குளிச்சிட்டுத்தான் பள்ளிக்குடம் போறன். ஆனா என்னை எல்லாம் 'ஊத்தை' எண்டுதான் கூப்பிடுறாங்கள். நான் வடிவில்லைத் தான். அதுதான் என்னை எல்லாரும் ஒதுக்கினமோ? எல்லோருக்கும் சினேகிதம் இருக்கு. ஏன் என்னோடை ஒருதரும் சேருதுகள் இல்லை? மைதானத்திற்கு போனால், என்னை விளையாட்டிலும் சேர்க்கினமில்லை. மைதான மூலையில் அந்தப் புளியமரமும் இல்லாட்டி எனக்கு சினேகிதம் எண்டொன்று இருந்திருக்காது. ஏன் என்னை இப்படி அந்நியப்படுத்தினம்? வகுப்பில் ஏதாவது களவு போனால் கூட என்னைத் தான் சந்தேகிப்பீனம். பிள்ளைகளும் அப்பிடித்தான், சேர்மாரும் அப்பிடித்தான்.

நான் நல்லா படிக்க வேணும் எண்டுதான் நினைக்கிறன். ஆனா இயலாம இருக்கு. புத்தகத்தைத் திறந்தா எல்லாம் பூச்சியமாய் தெரியுது.

இந்த உலகத்தில் எத்தனையோ பேர் நல்ல வசதியை அனுபவிக்கினம். நல்ல சந்தோசமான வாழ்க்கை நடத்தினம். ஏன் நான் மட்டும் எல்லாம் தெரிஞ்சவனாக, எல்லாம் இருப்பவனாக இருக்க முடியுதில்லை, ஒரு வேளை இப்படியும் வாழ்க்கையானது இருக்க வேணுமோ? அல்லது இது தான விதி எண்டு சொல்லுறதோ?

பள்ளிக்கூடத்தில் மட்டுமில்லை இந்தக் கிராமச் சனமே என்னோட கிட்ட இல்லை. நான் பழைய உடுப்புக்களைப் போட்டால், 'ஊத்தை', 'ஊத்தை' எண்டு பகுடி பண்ணுங்கள். புதுசாப் போட்டாலும் ''இஞ்ச இவன் புதுச்சட்டை போட்டிருக்கிறான்'' எண்டு கிண்டலும் செய்யுங்கள். எல்லாருக்கும் என்ர வசீகரம் வாய்ப்பில்லையே! முட்டை முழி, சுழியல் தலை, கருமைத் தேகம் இதுதான் என்ர அவயவ அழகு. ஐ. சி. இருந்தாலும் உந்த ஆமிக்காரன் என்னை அங்குல அங்குலமா பார்த்த பிறகுதான் அங்கால விடுறான்.

என்ர குடும்ப நிலையும் அப்படியும் இப்படியும்தான். அப்பருக்கு மூக்கு முட்டப் போடவேணும். உழைக்கிற கூலியில முக்கால்வாசி முடிச்சிட்டுத்தான் வீட்டை வருவார். எனக்கும் தங்கச்சிக்கும் அரைகுறை வயிறுதான் நிரம்பும். என்ர அம்மா இருந்தால் முந்திய மாதிரி பலகாரம் சுட்டு வித்தாவது எங்களை வடிவாக் கவனிச்சிருப்பா. இடப்பெயர்வின் இடையூறால இடம் திரும்பாமல் போய் சேர்ந்திட்டா. முருங்கை மரம் மாதிரி எனக்கு மூத்தது. எங்கே என்றே தெரியாது.

இண்டைக்கு சோத்துக்கு கறியுமில்லை. இனி, அப்பர் வந்தால் தான் கறிக்கு ஏதாவது ஒழுங்கு செய்யலாம். அவர் ஊரில் உள்ள நாய் எல்லாம் கூட்டிக் கொண்டு இரவு எட்டுமணிக்குத்தான் தட்டித் தடவி வருவார். என்ன செய்ய?

என்னை எவரும் மதிக்கிற தில்லை. எனக்கு எவ்வித வசதியுமில்லை. என்ர பள்ளிக்கூடத்தில, என்ர சொந்தங்களுக்குள்ள, என்ர ஊருக்குள்ள நான் எவ்வளவு அந்நியப்பட்டிருக்கிறன். எனது எதிர்காலம் என்ன? எனக்கேன் இப்படி ஒரு வாழ்க்கை? சீ......இதிலும் விட...என்று எண்ணிக் கலங்கியவாறு. விரித்த புத்தகப் பாடத் தலைப்பை மீண்டும் ஒரு முறை உற்றுப் பார்க்கிறேன் ''சின்ன மகளின் சின்னக் கைகள்''

அப்போது என்னருகே வந்த எனது ஒரே ஒரு தங்கை, ''அண்ணா, இந்தா தேத்தண்ணி குடிச்சிட்டுப் படி''

தங்கையின் தேநீர் எனது இதய வரட்சியைச் சற்றுத் தணித்தது.

''அண்ணா அப்பா வாறார் போல...''

''இண்டைக்கென்ன நாய் குரைப்போட பாட்டுச் சத்தமும் கேக்குது''

''ஓம் அண்ணா, அப்பா தான் பாடிக்கொண்டு வாறார்''

...உனக்கும் கீழே...உள்ளவர் கோடி நி..னைத்துப் பார்த்து நிம்..மதி நாடு...''

(யாவும் கற்பனை)

**- மானியூர் ரட்ணேஸ் -**

---

**சஞ்சீவி சிறுகதைகள்**

# இரண்டு சில்லுகள்

கோவில்களில் மணியோசைகளும், சேவல்கள் கூவும் ஒலிகளும் பறவைகளின் ஆரவாரமும் சூரிய உதயத்தை வரவேற்கத் தயாராகின்றன. சூரிய குடும்பத்தின் முதற் சதிரே இன்னும் பூமியிற் படவில்லை. புலர்ந்தும் புலராத இனிய பொழுது. முன்பென்றால் வீடுகள் விழித்துக் கொள்ளும்; வீதிகள் களை கட்டிவிடும்; சந்தைக்குச் செல்லும் சனங்களின் சத்தம், விரைந்து செல்லும் வாகனங்களின் இரைச்சல்; விடியும் பொழுதுக்கு சுறுசுறுப்பை ஊட்டி நிற்கும். இப்பொழுது இவைகள் இல்லை. ஊரடங்கு நேரம் அதிகமாதலால் ஊர் உறங்கும் காலம்தான் அதிகம். நிரந்தர விடிவையெண்ணி மக்கள் நிதமும் வாடுவதாலோ என்னவோ இந்தப் பொழுது விடிதலில் அக்கறை இல்லைப்போலும்.

ஆனந்தனின் வீடும் பரபரத்தது. அவனது மனைவி மாலினி அடுக்களையில் தன் காரியங்களை நிறைவு செய்வதில் கண்ணாய் இருந்தாள். இன்னும் படுத்துறங்கும் பிள்ளையையும் கணவனையும் இடைக்கிடை பார்த்துக் கொண்டாள். இன்று அவன் செய்யும் வேலை அவனுக்குப் பழக்கப்பட்டதுதான். இருந்தும் ஏதோவொரு புதுக் காரியம் மாதிரி நெஞ்சு படபடத்தது. தோசை சுட்டு சந்தியில் உள்ள தேநீர் கடைக்கு ஆறு மணிக்கு முன்னதாகக் கொடுக்க வேண்டுமென முதலாளி நிபந்தனை போட்டிருந்தார். அதுவும் கடை முதலாளி மகேசன் நேற்றுத்தான் ஒரு விதமாய் ஒப்புதல் சொன்னார். மகேசன் ஒரு கண்டிப்பான பேர்வழி. காரியம் சாதிப்பதில் சமத்தர். அவரின் சம்மதம் கிடைத்ததும் பெரிதும் சந்தோஷப்பட்டு அவருக்கு நன்றி சொல்ல மாலினி மறக்கவில்லை. எப்படியோ தன் குடும்பத்தைக் காப்பாற்ற அவள் தேடிக் கொண்ட புதிய முயற்சி அதற்கு உதவிய மகேசனை அவள் மனம் வாழ்த்தியது.

ஆனந்தன் படுக்கையில் இருந்து எழுந்து குந்தி இருந்து முழங்காலை மடித்து முகத்துக்கு முட்டுக்கொடுத்தபடி இருந்தான். இடது கை கன்னத்தில் பதிந்து இருந்தது. அடுக்களையில் மனைவியைப் பார்த்த கண்கள் இலேசாகப் பனித்தன. மனம் வேதனைப்பட்டது.

''கலியாணம் கட்டி இந்த அஞ்சாறு வருஷத்திலை மாலினிக்கு எதைத்தான் சீராய்ச் செய்து வைச்சன். அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், தொழில் பாதிப்பும் எங்களைப் போல எத்தனை குடும்பங்களைப் பாதித்திருக்குமோ''.

பெருமூச்சு ஒன்று பெரிதாய் வெளிப்பட்டது.

நடுத்தர வகுப்பில் பிறந்தது ஒன்றும் பாவமில்லை. தமிழனாய்ப் பிறந்ததுதான் பெரிய பாவம். அவன் மனம் எண்ணிக்கொண்டது. ஓயாத உழைப்பாளிதான் அவன். காய்ச்சல் தலையிடி என்று கூட வீட்டில் இருந்தது கிடையாது. மனைவி மகனோடு பெரிசாய் இல்லையெண்டாலும் பிறர் நகைக்காத அளவுக்கு வாழ்ந்தவன். கணவன் கொண்டு வருவதை ஊதாரித்தனம் பண்ணாது குடும்பத்தைக் கச்சிதமாய் நடாத்தியவள். இப்போது கடைக்குப் பலகாரம் செய்து கொடுத்துச் சீவிக்க வேண்டிய நிலையை நினைக்க ஆனந்தனின் நெஞ்சு இரத்தக் கண்ணீர் வடித்தது.

அவள் எதைப் பற்றியும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. தான் கலங்குவதைப் பார்த்துக் கணவனும் கலங்குவான் என்றதற்காகத் தன் மனவேதனையை மறைத்துக் கொள்கிறாளோ தெரியாது.

அளவான சின்னக் குடும்பம். இன்று கண்பட்டமாதிரி கலங்கி நிக்குது. ''என்ன ஏதோ பறிகுடுத்தவன் மாதிரி யோசனை'' என்ற மனைவியின் குரல் அவனை நிமிர வைத்தது.

''இனியும் பறிகுடுக்க என்ன இருக்கு? மிஞ்சிப் போனால் இந்த உயிர்தானே இருக்கு?'' விரக்தியாய் உதட்டின் விளிம்பு வரை வந்த வார்த்தையை அடக்கிக் கொண்டான். ஊமை நெஞ்சோடு விழிகள் சிந்தும் கண்ணீரை இவள் அறிவாளா? நிச்சயம் அறிவாள். அடித்துச் சொல்லியது அவன் மனம். அவளது அன்பும் ஆதரவும் தான் ஆனந்தனுக்கு தெம்பைக் கொடுக்கின்றன.

''சும்மா கடுமையாக ஒண்டையும் யோசிக்க வேண்டாம் என்றுதானே சொல்லுறன்'' மீண்டும் கணவனைப் பார்த்தபடி மாலினி சொன்னாள். ஒண்டையும் யோசிக்காமல் அவனால் இருக்க முடியவில்லையே.

வழமை போல அன்றும் வேலைக்கு உற்சாகமாகப் போன ஆனந்தன் பத்து பதினொரு மணியளவில் மிதிவெடியில் சிக்கித் தனது வலது கால் முழங்காலோடு துண்டிக்கப்படும் எனக் கனவிலும் எண்ணியிருக்க மாட்டான். ஆனால் என்ன செய்வது? அப்படித்தான் நடந்தது. செய்தியை அறிந்த மாலினி ஆஸ்பத்திரியெல்லாம் பாராது கத்திக் குளறி விட்ட கண்ணீர் கொஞ்சமல்ல. பலன் ஒன்றுமில்லை. போன கால் போனதுதான். செய்தி பரவி சுற்றம் சூழ்ந்தது. ஊரவர்களுடன் தெரிந்தவர்களும் வந்தனர். ஆறுதல் சொல்லி அம்பதோ நூறோ கொடுத்ததோடு சரி.

''பொன் விளைந்த யாழ். மண்ணில் இப்போ மிதிவெடிகள் தான் விளைகின்றன'' என்று வருத்தம் பார்க்க வந்த ஒருவர் சொன்னது மெய்யாகவே ஆனந்தனுக்குப் பட்டது நெருக்கமான சிலர் இப்பவும் வந்து போயினர். இருந்தும் இனி குடும்பம் வாழ வழி... யோசிக்க யோசிக்க ஆனந்தனுக்கு வாழ்க்கையே வெறுத்தது.

''கோழி மேய்ச்சாலும் கோரணமேந்திலை மேய்க்க வேணும்'' என சும்மா சொல்லவில்லை. அரசாங்கத்திலை ஒரு சின்ன வேலை பார்த்தாலும் இப்படியான நிலையில் பயமில்லை. ஏதோ அந்தக் காசு, இந்தக் காசு, பென்சன் எண்டு வரும். கவலை இல்லை. எங்களைப் போல அன்றாட உழைப்பாளிகளுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. வசையும் பிறணியும் தான் கிடைக்கும். வாழ்வு சூனியமாய் போன பிரமையில கட்டிலில் அமைதியாகக் கிடந்தான். மாலினி தேற்றினாள். மன ஆறுதலுக்காக என்னென்னவோ கதைகள் சொன்னாள். அறிவு பூர்வமாக சிந்தித்துச் செயற்பட்டாள். ஒரு வேளை இடப்பெயர்வுகளும், அலைச்சல்களும், இழப்புக்களும் முதிர்ச்சியான ஒரு வளர்ச்சியை இந்த வயதில் அவளுக்கு கொடுத்திருக்க வேணும். பாவம். சின்ன வயது. இப்ப எதுவும் விளங்கவில்லை. இனிமேல்தானே கஷ்டமும் கலக்கமும்.

அடுத்து வந்த சில நாள்களில் அவள் செய்த காரியங்கள் அவனை மேலும் ஆச்சரியப்படவைத்தன. ஊனமுற்றவர்களுக்கு தேவை உணவும் பண உதவியுமல்ல. அவசரமாய்த் தேவைப்படுவது அன்பான அரவணைப்பும், ஆறுதல் வார்த்தையும் உபசாரமுமே என்பதனை நன்றறிந்து அதன்படி ஒழுகினாள். அவள் தந்த தென்பு தேறவைத்தது; மனதை ஆறவைத்தது. முதன் முதலில் ஊன்றுகோலோடு கணவனைப் பார்த்தபோது அப்பளமாய் நொறுங்கிப் போனாள். இரத்தம் இதயத்தைப் பிளந்து வந்தது. அவளையும் அறியாது கண்கள் நீரைச் சொரிந்தன. கணவனைத் தாங்கிக்கொண்டாள். நெஞ்சோ கடவுளை நொந்து கொண்டது. வேதனையின் உச்சக்கட்டத்தில் ஆனந்தன் இருந்தான். கலங்கிய நிலையில் ''கடவுள் வாழவும் விடாமல் சாகவும் விடாமல்...ஏன் இப்பிடி....?'' துண்டு துண்டாக வார்த்தைகள் வெளிவந்தன.

அவசரமாக இடை மறித்த மாலினி—

''சீச்சீ...என்ன சொல்லுறியள். கால் இல்லையெண்டால் என்ன நீங்கள் இல்லாட்டி நாங்கள் என்ன செய்யுறது...ஐயோ நினைக்கவே பயமாய் இருக்கு...''

**க. தியாகராசா**

என்று சொன்னவள் குலுங்கிக் குலுங்கி அழுதபடி கணவனின் வாயைப் பொத்தினாள். ஆனந்தன் அமைதியானான். இருந்தும் உள்ளக் குமுறல் தணியவில்லை.

''எங்களுக்கென்ன. என புள்ளையளே இருக்கு? எனக்குக் கையும் காலும் இருக்கு. சீவிக்க வழியும் இருக்கு...'' உணர்ச்சி வசப்பட்டு சொன்னவளை ஆனந்தன் ஆதரவாக, கனிவாக இளைப்பாறுதலுக்காக, இலேசாக அதற்கு மேலே உயர்ந்த ஒன்றாகப் பார்த்தவன் மனைவியின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டான். தீச்சுவாலையாக தகித்த மனம் கொஞ்சம் ஆறுதலடைந்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மாலினி.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ....பாலுணர்வுகளைத் தூண்டும் விதமான சூழ்நிலைக்குள் இளைய தலைமுறை சிக்கி வருவது சமூகச் சீரழிவுகளுடன் பாலியல் தொடர்பான நோய்கள் வேகமாகப் பரவுவதற்கும் வழிவகுக்கும்...
>
> — டாக்டர் சீ. எஸ். நச்சினார்க்கினியன்,
> சிரேஷ்ட விரிவுரையாளர்,
> சமூக மருத்துவத்துறை.

# குடாநாட்டில் எய்ட்ஸ்

இரண்டாயிரமாம் ஆண்டளவில் உலகில் எச். ஐ. வி. யினால் பீடிக்கப்படுவோரில் மூன்றில் ஒரு பங்கினர் 10 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவே இருப்பர். இவர்களில் 94சதவீதமானோர் இலங்கை, இந்தியா போன்ற வளர்முகநாடுகளிலேயே காணப்படுவர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

இதுஎமது பிரதேசத்துக்கும் பொருந்தும். இங்கு இதுவரை 40 வயதுக்குட்பட்ட எவரும் எச். ஐ. வி. யினால் பாதிக்கப்பட்டதாக தகவல் இல்லை. ஆனால் எய்ட்ஸ்

# பதுங்கி இருக்கும் ஆபத்து

நோயாளிகள் சிலரின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் எச். ஐ. வி. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தனது 25 ஆவது வயதில் எச். ஐ. வி. தொற்றுக் கொள்ளும் ஒருவர் அடுத்த நான்கு, ஐந்து தசாப்த காலத்துக்கு அதைப் பரப்புபவராக விளங்குவார். எனவே எதிர்காலத்தில் எச். ஐ. வி. பரவக்கூடிய வேகத்தை இதை வைத்தே கணிப்பிட முடியும்.

இத்தகைய சூழ்நிலையில் 'எய்ட்ஸ்' பற்றிச் சிந்திக்கும் சமூக மருத்துவர்களின் கவனம் 'ரீன்—ஏஜ்' பிரிவினர் மீது—குறிப்பாக மாணவர்களின் பக்கம்—திரும்புகிறது.

டாக்டர்களோ அல்லது மருத்துவ ஆளணியினரோ நேரடியாக களத்தில் இறங்கி பிரச்சாரத்தில் ஈடுபடுவது சாத்தியமல்ல. அதற்கான வளமும், ஆளணியும் மருத்துவ பீடத்திடம் இல்லை.

எனவே இளைய தலைமுறையை இலகுவில் சென்றடையக்கூடியவர்களை அவர்கள் மத்தியில் இருந்துதெரிவு செய்து அவர்களுக்கு எய்ட்ஸ் உட்பட பாலியல் நோய்கள் தொடர்பான விளக்கப் பயிற்சிகளை அளிக்க முன் வருகிறோம் என்கிறார் யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத் துறைக் தலைவர் டாக்டர் என். சிவராஜா.

ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை சமூகமருத்துவத் துறையினர் ஏற்கனவே நடத்தி வருகின்றனர். ''கல்வி ஊடாக விழிப்புணர்வு'' என்னும் இந்தத் திட்டத்தின் மூலம் பாலியல் மற்றும் எய்ட்ஸ் தொடர்பான கருத்துக்களை மாணவர்களிடையே எடுத்துச் சொல்வது நோக்கம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு பாலியல் உணர்வுகளைத் தூண்டும் விதமான சூழ்நிலைக்குள்நமது இளைய தலைமுறை சிக்குண்டு வருகிறது. இதனால் சமூகசீரழிவு மட்டுமன்றி பாலியல்தொடர்பான நோய்களும் வேகமாகப் பரவவாய்ப்புண்டு என்கிறார் சமூக மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ். ஆஸ்பத்திரியின் மூன்னாள் பணிப்பாளருமான டாக்டர் சீ. எஸ். நச்சினார்க்கினியன்.

ஆபாசமும், வன்முறையும் (SEX&VIOLENCE) மலிந்த சினிமாக் கலாச்சாரம் இன்றைய இளந் தலைமுறையை தன் பிடிக்குள் வைத்திருக்கிறது. எங்கும் வீடியோ, சினிமா, கலர்கலராய் கண்ணைக் கவரும் ஆபாசப் போஸ்ரர்கள் — இவை எல்லாம் வாழ்க்கை பற்றிய ஒரு மாயத் தோற்றத்தை இளைய தலைமுறையின் முன் சிருஷ்டித்து விட்டிருக்கின்றன.

'ரீன் — ஏஜ்' தலைமுறையையே தங்களின் நிரந்தர வாடிக்கையாளர்களாகத் தக்க வைத்துக் கொண்ட படத் தயாரிப்பாளர்களும், நடிகர், நடிகைகளும் எவ்வளவுக்கு எவ்வளவு ஆபாசத்தையும், வன்முறையையும் புகுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு தமது திரைப் படங்களில் அவற்றைப் புகுத்தி வருகின்றனர். (விதிவிலக்காக ஒரு சில நல்ல திரைப்படங்கள் சினிமா என்கின்ற அரிய கலையின் பண்பாட்டை தொடர்ந்தும் பேணிவருகின்றன.)

## நல்லூர் தாஸ்

நாளாந்த வாழ்வின் சகல அம்சங்களிலும் சினிமாவின் பாதிப்பு உள்ளது. இரண்டு இளைஞர்கள் அல்லது யுவதிகள் சந்திக்கும் போது சினிமா பற்றி முதலில் பேச்சு. கதாநாயகன், கதாநாயகி, ஆடல் பாடல் என அவர்களின் கதை நீளும்.

குடாநாட்டில் சந்திக்குச் சந்தி முளைத்துள்ள மினி சினிமாக்களும், வீடியோ கடைகளும் அவற்றை அலங்கரிக்கும் வண்ணப் போஸ்டர்களும் அங்கெல்லாம் கூடும் இளைஞர் கூட்டமும்வளர்ந்து வரும் ஒரு புதிய கலாச்சாரத்தையே பறைசாற்றுகின்றன.

சினிமா நடிகர்கள், நடிகையரின் கவர்ச்சிப் படங்களைத் தாங்கி வெளிவராத எந்தப் பத்திரிகையோ, சஞ்சிகையோ பரபரப்பான விற்பனைச் சந்தையில் நின்று பிடிக்க முடியாது என்ற நிலை தென்னிந்தியாவில் முன்னர் இருந்தது. இப்போதும் இருக்கிறது.

ஒரு சஞ்சிகையை எடுத்துக் கொண்டால் அதன் முன் அட்டையையும், நடுப்பக்கத்தையும், பின் அட்டையையும் கவர்ச்சியான, கிளுகிளுப்பான சினிமாப் படங்களே ஆக்கிரமித்திருக்கும்.

இவ்வாறான தென்னிந்தியக் கலாச்சாரம் தற்போது இலங்கைத் தமிழ் வெளியீடுகளையும் பீடித்து விட்டது. கொழும்பில் இருந்து வெளியாகும் பல தமிழ் வார இதழ்களில் ஆபாசமான காட்சிகளைச் சித்திரிக்கும் சினிமாப் படங்கள் மலிந்துவிட்டன.

குறிப்பிட்ட ஒரு பத்திரிகையின் நடுப்பக்க சினிமாக் காட்சிகளுக்காக மட்டும் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்துப் பத்திரமாகப் பேணும் இளைஞர், கூட்டத்தை சாதாரணமாக இங்கும் காணமுடிகிறது.

சினிமா இல்லாமல் ஒரு பத்திரிகையை, அல்லது சஞ்சிகையை விற்க முடியாது என்பது நிச்சயமான ஒன்றாகிவிட்டது. இதனால் சில தரமான சஞ்சிகைகளும் கூட இடையிடையே சினிமாவைச் செருக வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகின்றன.

ஆபாசம் கலந்த சினிமா மோகத்தை தூண்டி விடும் இத்தகைய வெளியீடுகளும் பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டும் சூழ்நிலைக்குள் இளைய தலைமுலையினரை இட்டுச் செல்வதில் பங்கு வகிக்கின்றன.

> ...பாலியலைப்பற்றி, எய்ட்ஸைப் பற்றி பிள்ளைகளுடன் பெற்றோரும் மாணவர்களுடன் ஆசிரியர்களும் இனி மெல்ல மெல்லப் பேசவேண்டியது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. ஆனால் இது அவர்களிடையே எதிர் மாறான விளைவுகளை உண்டுபண்ணி விடுமோ என ஒரு சாரார் அஞ்சுகின்றனர்...

வாழ்வின் உயரிய நெறிமுறைகளை இலகுவில் அலட்சியம் செய்துவிடும் போக்கும் இளைய தலைமுறையிடையே அதிகரித்து வருவதாக மனோவியல் நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

இது போன்றபல காரணி

(XI ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் பாவனை!

குடாநாட்டில் இனங்காணப்பட்ட 'எய்ட்ஸ்' நோயாளிகளில் எவருமே போதைப் பொருள் பழக்கமுடையவராக இருக்கவில்லை. ஆனால் இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது ஏராளமான ஹெரோயின் பாவனையாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தான் அதிர்ச்சி தருகிறது.

மருத்துவ ரீதியிலான ஆய்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் முயற்சியின் போது மட்டும் கடந்த காலங்களில் 150க்கும் சற்றுக் கூடுதலான ஹெரோயின் பாவனையாளர்கள் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

விடயமறிந்த மருத்துவ வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்களின்படி 1980 களின் தொடக்கத்திலேயே ஹெரோயின் (Heroin) போதைவஸ்து குடாநாட்டில் முதன் முதலாக அறிமுகமாகியுள்ளது.

சில பாவனையாளர்கள் கூறிய தகவல்களின்படி 1983 ஆம் ஆண்டில் இருந்து வியாபார நோக்கில் ஹெரோயின் புழக்கத்துக்கு வந்திருப்பதை அறிய முடிகிறது.

1988 ஆம் ஆண்டின் இறுதி முதல், 1989 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதியிலும் பின்னர் 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் யாழ். சமூகமருத்துவத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மட்டும் 45 ஹெரோயின் பாவனையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். யாழ், ஆஸ்பத்திரி மூலமும், தனிப்பட்ட முயற்சிகள் மூலமும் இவர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் 18 முதல் 38 வயதுக்கு இடைப்பட்ட ஆண்கள். இவர்களில் 62.2 வீதமானோருக்கு முதன் முதலாக யாழ்ப்பாணத்திலேயே ஹெரோயின் கிடைத்துள்ளது. 35.6 சதவீதமானோர் வெளிநாடுகளிலும் ஒருவர் கொழும்பிலும் ஹெரோயினைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர்.

யாழ். மாநகரசபைப பகுதிக்குள் கண்டு பிடிக்கப்பட்ட இந்த ஹெரோயின் பாவனையாளர்களின் எண்ணிக்கையைப்போல் பல மடங்கினர் அக் காலப் பகுதியில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்திருப்பர் என அச்சமயம் கணிப்பிடப்பட்டது.

1987 ஆம் ஆண்டில்—இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த காலப் பகுதியில்—பாகிஸ்தானில் இருந்து வந்த நபர் ஒருவர் மூலம் ஹெரோயின் வியாபாரமும் அதற்கான ஒரு வாடிக்கையாளர் கூட்டமும் யாழ். நகரப் பகுதியில் உருவாகியதாக அறியப்படுகிறது. ஆனால் இந்திய இராணுவம் வெளியேறி குடாநாடு விடுதலைப்புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபோது இத்தகைய போதைவஸ்து வியாபாரிகள் சிலர் புலிகளிடம் சிக்கினர். பலர் தலைமறைவாகி வெளியேறினர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் பாவனை அருகி வந்தமை சமூக மருத்துவர்களின் அவதானிப்பில் இருந்து தெரிய வந்தது. ஆனால் பாவனையாளர்களுக்கு ஹெரோயின் கிடைப்பது திடீரென நின்று போனதால் அவர்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையை நாட வேண்டி வந்தது. சிகிச்சை பெற்றுத் திரும்பியவர்களில் சிலர் பின்னர் சிகிச்சைக்கு வரவில்லை. அவ்வாறு அவர்கள் தொடர்ந்து சிகிச்சைக்கு வராது போனமைக்கு பல காரணங்கள் இருந்தன. அவர்களில் சிலருக்கு மீண்டும் ஹெரோயின் கிடைத்ததும் அவற்றுள் ஒரு காரணமாக இருந்தது.

ஹெரோயின் விநியோகிப்பவர்கள், ஹெரோயின் பாவனையாளர்கள் என இரு சுற்றுவட்டத்தினர் இப்போதும் குடாநாட்டுக்குள் உள்ளனர் என்பதை மருத்துவர்கள் நிராகரிக்கவில்லை. எனினும் அதன் சமூகத் தாக்கம் பெரிதாக உணரப்படவில்லை.

கஞ்சா, அபின் போன்ற மருத்துவப் பயன்பாடுடைய போதைப் பொருள்களை பயன்படுத்துவோர் பரவலாக எங்கும் உள்ளனர். ஆனால் ஹெரோயின் போன்ற கொடிய போதை வஸ்துகள் இன்னும் அவர்களை எட்டவில்லை என்றே கூறலாம்.


உலகெங்கும் எச். ஐ. வி. வேகமாகப் பரவிய சமூகப் பிரிவினரில் போதைப்பொருள் பாவனையாளர்களும் முன்னணியில் உள்ளனர். போதைப்பொருள் பாவிப்போரிடையே உள்ள தவறான பாலியல் தொடர்புகள், ஊசி, 'சிறிஞ்ச்' போன்ற கூரிய ஆயுதங்கள் மூலம் போதைப்பொருள்களை ஒருவருக்கு ஒருவர் அல்லது தாமாகவே உடலில் செலுத்திக்கொள்வது போன்ற பழக்கங்கள் காரணமாக இவர்களிடையே எச். ஐ. வி. வேகமாகப் பரிமாறப்படுகிறது.

சில நாடுகளில் விபசாரத்தில் ஈடுபடுவோரைவிட போதைவஸ்து பாவனையாளர்களே பெரும் எண்ணிக்கையில் எச். ஐ. வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

'சிறிஞ்ச்' மூலம் போதைப் பொருள்களை உடலில் செலுத்திக்கொள்ளும் வழக்கமுடையவர்களை கொழும்பு போன்ற தென்னாசிய நகரங்களில் சர்வசாதாரணமாகக் காணமுடிகிறது. ஆனால் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட ஹெரோயின் பாவனையாளர்களில் பெரும்பாலானோர் வெப்பமூட்டுவதன் மூலம் புகையை நுகரும் முறை மூலமே போதையை அனுபவிக்கும் வழக்கமுடையவர்களாக இருந்தனர். 'சிறிஞ்ச்' மற்றும் ஊசி போன்றவற்றை மிகச் சிலரே பயன்படுத்தினர்.

குடாநாட்டில் எச். ஐ.வி பரம்பலுக்கு போதை வஸ்து பாவனையும் ஒரு காரணமாக இருக்கும் என அஞ்சவேண்டிய நிலைமை இப்போதைக்கு இல்லை. ஆனால் குடாநாட்டுக்குள் போதைப் பொருள்கள் புழக்கத்துக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகவே உள்ளன. ★

இ



மேலேயுள்
உள்ளன. 10
ங்களில் 16
தெடுத்து இக்
அதன் பின்னர்
ருத்து மே
மூலைப்பாட்டு
யும் கூட்டினா
வரவேண்டும்.
தலைகீழாக
மேலிருந்து கீ
கவோ, பக்
டுக்கோ உள்ள
போதும் இதே
டும். தலைகீழ
ங்கள் தலை
இதேமாதிரி
வர வைத்தால்
அடித்துக்கூறல்

(வி

அவன்



மேலேயுள்
பத்து நான்
இணைத்துப்
ஊஞ்சலாடும்
காண்பீர்கள்.
றதா?


ஒரே அ



மேலேயுள்
இரண்டு மட்டு
அவை எவை
கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலுமா?




மேலேயுள்ள சதுரத்தில் 16 கட்டங்கள் ள்ளன. 10 முதல் 100 வரையுள்ள இலக் களில் 16 இலக்கங்களை மட்டும் தேர்ந் தடுத்து இக்கட்டங்களை நிரப்பவேண்டும். தன் பின்னர் மேலிருந்து கீழாகவோ, கீழி ந்து மேலாகவோ, பக்கவாட்டுக்கோ. லைப்பாட்டுக்கோ உள்ள நான்கு எண்களை ம் கூட்டினால் கூட்டுத்தொகை 264 ஆக வேண்டும். அதேபோல இச்சதுர வடிவை லைகீழாக வைத்துக் கொண்டு இதேமாதிரி லிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலா வோ, பக்கவாட்டுக்கோ, மூலைப் பாட் க்கோ உள்ள நான்கு எண்களைக் கூட்டும் ாதும் இதே கூட்டுத் தொகை வரவேண் ம். தலைகீழாக சதுரத்தைப் புரட்டி, இலக் ங்கள் தலைகீழாகப் புரண்ட பின்னரும் தேமாதிரி கூட்டுத் தொகை சமனாக ர வைத்தால் நீங்கள் கணக்கில் புலி என்று டித்துக்கூறலாம்.

—நாகமணி மகேந்திரலிங்கம்

(விடை XI ஆம் பக்கத்தில்)

## அவன் யார் தெரியுமா?



மேலேயுள்ள படத்தில் ஒன்றுமுதல் நாற் த்து நான்கு வரையுள்ள இலக்கங்களை ணைத்துப்பாருங்கள். தொங்கிக் கொண்டு ஞ்சலாடும் ஒரு குழப்படிக்காரனைப் ாண்பீர்கள். அவன் யார் என்று தெரிகின் தா?

## ஒரே அச்சு எது தெரியுமா?



மேலேயுள்ள ஒன்பது பலூன்களில் ரண்டு மட்டுமே ஒரே அச்சில் உள்ளன. வை எவை எனத் தெரிகின்றதா பாருங் ள்.

## முயலுங்கள் பார்க்கலாம்

1) அரசன் ஒருவனுக்கு. கடும் நோய் ஏற்பட்டது அதைப் போக்குவதற்கு நாக லோகத்தில் உள்ள அதிசயக் கனி ஒன்றாலேயே முடியும். இளவரசன் அதைப் பெறப் புறப்பட்டான். நாகலோகத்தில் உள்ள மூன்று வாயில்களைக் கடந்துதான் அந்த மரம் இருக்கும் இடத்திற்குச் செல்லவேண்டும். ஒவ்வொரு வாயில் காவலரும் ''நீ கைகளில் கொண்டு வரும் கனிகளில் அரைவாசியையும் மேலதிகமாக ஒன்றையும் தர வேண்டும்'' என வற்புறுத்தினர். நாகலோகத்தில் இருந்து வெளியே வரும்போது ஒரு கனிதான் கொண்டு செல்ல வேண்டும் என்ற சாபம் வேறு. இளவரசனுக்கும் ஒரு கனிதான் தேவைப்பட்டது. அப்படியானால் அவன் எத்தனை கனிகளை பறித்திருக்க வேண்டும்?

2. ரமணன் கிளியொன்றினைப் பெரிய கூட்டினுள் இட்டு வளர்த்து வந்தான். கிளியுடன் கூட்டின் நிறை 12 கிலோ ஆகும். கிளியின் நிறை 750 கிராம் ஆகும். கூட்டினுள் கிளி பறக்கும் போது கூட்டின் நிறையை நிறுத்துப் பார்த்தான். எவ்வளவு நிறை வரும்?

3. 45 என்ற எண்ணை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொள்க. முதல் எண்ணுடன் 2 ஐக் கூட்டுக. இரண்டாம் எண்ணிலிருந்து 2 ஐக் கழிக்குக. மூன்றாம் எண்ணை இரண்டால் பெருக்குக. நான்காம் எண்ணை 2 ஆல் வகுக்குக. இவ்வாறு செய்தால் நான்கு செய்கைகளிலும் கிடைக்கும் விடை ஒரே எண்ணாக இருக்கவேண்டும். அவ்வெண்கள் எவை?

சி. கவிதன்
(ஆண்டு-10, ஹாட்லிக் கல்லூரி)

(விடை XI ஆம் பக்கத்தில்)

## விடுகதைகள்

1. மாடு ஏறி மிதியாத மகிழம்பூத் திட்டியிலே மண்ணேறி மடிகுடிக்குது. அது என்ன?

2. ஓங்கி வளர்ந்தாள்; ஒரு பிள்ளை பெற்றாள்; பொத்தென்று விழுந்தாள்; புழுத்துச் செத்தாள். அது என்ன?

3. அப்பன்சொறியன்; ஆத்தாள் கடைசி: நானோ சக்கரைக்குட்டி. அது என்ன?

4. சேலத்து செம்புறா: செல்லமாம் பச்சை புறா; மாடத்து மணிப்புறா; மூன்றையும் கலந்து ஒருவன் தன்னைப் பதினாறு பேர் மிதிக்க, ஒரு துளி இரத்தம் கக்குது பார். அது என்ன?

5 நெல்லுக்கும் புல்லுக்கும் நின்றாடும் குருவி அதுஎன்ன?

6, ஒரு கூட்டுக்குள் இரு தைலம். அது என்ன?

7. ஓடிப்போனான்; தொப் என்று விழுந்தான்; வேலிக் சாரன் யாரென்றான் அது என்ன?

8. வானத்தைபார்த்தான்: சிறகு விரித்தான்; மாதம் 100 முட்டை இட்டான். அவன் யார்?


9. ஆயிரம் கண்ணுள்ள தேவி. ஆற்றிலே மூழ்கி வெயிலிலே காய்கிறாள். அவள் யார்?

சர்மிளா — சந்திரன்
(ஆண்டு-7, நாவற்குழி மகாவித்தியாலயம்)

## விடைகள்

## அச்சம் மிகுந்த முயல்


முயலை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா? முயல் அச்சமுடையது. மானைப் போலவே முயலும் மிரள மிரள விழிக்கும். ஆனால் அழகான பிராணி.



முயல் காடுகளில் வசிக்கும் புதர்களில் மறைந்தும், குழி தோண்டியும் வாழும். பெரும்பாலும் முயல்கள் சாம்பல் நிறமுடையனவாகவே இருக்கும். சிறுபான்மை வெள்ளை முயல்களும் உண்டு. இவைகளுக்குக் குழி தோண்டத் தெரியாது. எனவே புதர்களிலேயே வசிக்கும்.



முயலின் முகம் எலியின் முகத்தைப்போலச் சிறிது நீண்டு இருக்கும்; கண்கள் பெரியவை; காதுகள் மாடுகளுக்கு இருப்பதுபோல் நீண்டவை. ஆனால், முயல் சற்று ஏறக்குறையப் பூனையளவே இருக்கும். முயலின் முன் கால்கள் குட்டையானவை. பின்கால்கள் நீண்டவை. அதனால்தான் முயல் குதித்துக்குதித்துவிரைவாகஓடுகின்றது.



### பிராணிகள் உலகம்

முயல்களில் குழிமுயல், வெள்ளை முயல், எலி முயல் எனப் பலவகையுண்டு.

குழி முயல் தரையில் குழி தோண்டி வாழும். எலி முயலின் உருவம் எலியைப்போல இருக்கும். ஆனால், முயல் போன்ற சாயலையுடையது. இதனைச் சீமைப்பெருச்சாளி என்றும்சிலர் சொல்வதுண்டு. இதன் உருவம் சிறியது. இஃது ஆற்றங்கரை சார்ந்த காடுகளில் கூட்டங் கூட்டமாக வாழும். எலி முயல் தண்ணீரில் நீந்தும்; புல்லைத் தின்னும். இரவில்தான் நடமாடும்.


பொதுவாக எல்லா முயல்களுக்கும் புல்லே சிறந்த உணவு. முயல் அறிவுடைய உயிரினம் என்பர். பகைவரிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் அளவுக்கு அறிவுக்கூர்மை உடையது.

முயல் ஓராண்டில் ஐம்பது குட்டிகள் ஈனும்; ஆறு திங்களில் முயல் குட்டிகள் தக்க பருவம் அடையும்.

நமது நாட்டில் பலர் முயலை வீடுகளில் செல்லமாக வளர்க்கின்றார்கள். முயல் வளர்ப்பு ஒருவகை விலங்கு வேளாண்மையாக தற்போது மாறியுள்ளது.

## முயன்று பாருங்கள்

உங்களிடம் ஐந்து ரூபா நாணயக் குற்றிகள் மூன்றும் ஒரு ரூபா நாணயக் குற்றிகள் மூன்றும் இரண்டு ரூபா நாணயக் குற்றிகள் ஒன்பதும் உள்ளன. இந்நாணயக் குற்றிகளை கீழே உள்ள வடிவத்தில் வட்டமிடப்பட்ட நிலைகளில் நீங்கள் வைக்க வேண்டும். ஒரு நிலையில் எத்தனை நாணயமும் வைக்கலாம். ஆனால் எல்லா நாணயக்குற்றிகளை



யும் வைத்தாக வேண்டும்; வேறு நாணயக் குற்றிகளையும் புதிதாகச் சேர்க்கக் கூடாது; எந்த வட்டமும் காலியாக இருக்கக் கூடாது. நீங்கள் நாணயக் குற்றிகளை வைத்த பிறகு கோடிட்ட தடங்களில் உள்ள மூன்று வட்டங்களிலும் வைக்கப்பட்டுள்ள நாணயங்களின் மொத்தப் பெறுமதி ஒன்றாக இருக்க வேண்டும். உங்களால் நாணயக் குற்றிகளை சரியாக வைக்க முடிகின்றதா என முயற்சித்துப் பாருங்கள்.

சு. சுபாஸ் சந்திரபோஸ்
(ஆண்டு 9, கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி)

(விடை XI ஆம் பக்கத்தில்)




## பொன் அந்தி மாலைப் பொழுது

அம்புஜம் வாடித் தளர்ந்து விட
ஆம்பலும் அல்லியும் மலர்ந்து விட
அருணனும் அழகுக் கதிர் அடக்கி
அழகான அந்தியை வரவழைத் தான்

கால் நடைகள் வீட்டை அடைந்துவிட
களனிகள் உழவரை இழந்து விட
புள்ளினம் பகலை மறந்து விட
பகலவன் பகலிடம் விடை பெற்றான்

வண்டினம் பாட மறந்து விட
வானம் இருளால் மறைந்து விட
கங்குலும் புவியைச் சூழ்ந்து விட
கதிரவன் குணதிசை நாடி விட்டான்.

மலையிடை வெண்ணிலா ஒளிர்ந்துவிட
விண்மீன் விண்ணிடை சிதறி விட
காரிருள் முற்றாய்த் தகர்ந்து விட
தண்ணிலா தன்னொளி பரப்பி
விட்டான்.

ஞான ஆதவன்
(ஆண்டு 7 சென். ஜோன்ஸ் கல்லூரி)

## ஆலம் பழமும் கோழிக் குஞ்சும்!

குஞ்சுக் கோழி நானெல்லோ
அஞ்சமாட்டேன் தானெல்லோ
கொஞ்சம் தீனி தேடவே —
சென்றேன் ஆலமரத்தண்டை
(குஞ்சுக்கோழி)

ஐயோ, ஐயோ இடியொன்று
என் தலைமேல் விழுந்ததே
ஆகாதே, நீ போகாதே அந்தோ இடியும்
— விழுந்ததே
(குஞ்சுக்கோழி)

நாராய்! நாராய்! எங்கு நீ நடுங்கி,
நடுங்கி செல்கிறாய்?
ஆகாதே நீ போகாதே அந்தோ இடியும்
விழுந்ததே
(குஞ்சுக்கோழி)

வாத்தே! வாத்தே! எங்கு நீ
தத்தித் தத்திச் செல்கிறாய் ஆகாதே நீ
போகாதே அந்தோ இடியும் விழுந்ததே
(குஞ்சுக்கோழி)

எழுந்து ஓடும் பட்சிகாள்! ஏனோ
புத்தி கெட்டன
விழுந்த ஆலம் பழமொன்று
வீணேகலங்கி வாடாதீர்!
(குஞ்சுக்கோழி)

— படியலிங்கம் தர்மிளா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

## [30 - 05 - 1998 முதல் 05 - 06 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி சனி | வெ | சூ புத செ | |
| கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | | |

மாற்றம்:

அரசியலில் சூடுபிடிக்கும். நான்முந்தி, நீமுந்தி என்ற நிலை இருக்கும். பக்கத்து வீட்டுக்காரன் சண்டைக்காரன். அதனால் என்னை நல்லவன் என நினைக்க வேண்டும் என அரசியலில் ஒரு மனோநிலை இருக்கும். அரசியல் எப்பொழுதும் ஆபத்துகள் நிறைந்தது தானே.

''இந்திய வல்லரசு'' உலகில் நிரந்தர இடம் பிடிக்கும். ''அறிஞனுக்கு பட்ட மெதுச்கடி ஞானப் பெண்ணே''? எனக் கேட்கத் தோன்றும். மேற்கு உலகம்—கிழக்கு உலகை என்ன செய்ய முடியும்? ஏதோ சமாதானம் செய்து சபைக்கு அழைக்கும் நிலை ஏற்படும். கிழக்கில் துணிவு ஏற்படாமல் புதிய திசை மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும் மேற்கு உலகின் வித்தையில் இதுவும் ஒன்று எனக் கிரகநிலை காட்டுகிறது.

மேடம்: எதிர்ப்பாலார் உங்களைக் கொஞ்சம் குழப்பி விடுவார்கள். உலகில் கவர்ச்சிக்கு மயங்காதவர்கள் ஒருசிலர்தான். தொழில் ஸ்தானத்தில் பொருளால் அதிக யோசனைகள் வரத்தான் செய்யும். காணி பூமி சம்பந்தமான வேலை ஒன்று தங்கியபடி இருக்கும். எதற்கும் உத்தரவாதம் கொடுக்காமல், 'பார்க்கலாம்', 'யோசித்துச்சொல்லுகிறேன்' எனத் தப்பப்பாருங்கள். அல்லது வலைவீசிச் சுறாப் பிடிக்கும் ஒரு சிலரால் நீங்கள் தடுமாறவேண்டி வரும். உஷ்ணபீடைகள் சளித் தொல்லை, தோல்வருத்தம், கைகால் பிடிப்புகள், வாய்வு வருத்தங்கள் என மாறி மாறி வருத்தும். ஏழரைச் சனித் தாக்கம் இருந்தாலும் விழுந்து, விழுந்து எழுந்து நடக்கும் குழந்தை நடந்து வருங்காலத்தில் ஓடியாடித் திரியும் என்பதை மறவாதீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

இடபம்: என்ன? பக்கத்து வீட்டுப் பசுமாடு படுத்துக் கிடப்பதைப்போல் இருக்கின்றது உங்கள் பலன். தருணம் பார்த்து யாரை முட்டி மோத யோசிக்கிறீர்கள்? இக்காலத்தில் கொஞ்சம் நிதானமாக உங்கள் செயற்பாடுகள் இருக்கவேண்டும். சகோதரங்களால் நன்மைகள் கிடைத்தாலும் குறைகுற்றங்கள் கேட்க நேரிடும். வீடுமனை, குடும்பநிலை, புத்திரர் பற்றி அதிக யோசனைகளும், செலவுகளும் ஏற்பட்டபடி இருக்கும். கலை, சங்கீதம், நித்திரை எனக் காலத்தைக் கழிப்பீர்கள். கல்வி தொழில் பற்றிச் சிந்தித்துச் செயற்படவேண்டும். இருதயநோய், நரம்பு, சலம், கால்உளைவு, தலையிடி மாறி மாறி வரலாம். கொஞ்சம் ஓய்வு அடிக்கடி எடுத்துக் கொள்ளுங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

மிதுனம்: ஓடி ஓடிக் களைத்துப் போனீர்கள். உலக விஷயங்களில் அடிக்கடி வெளுத்து வாங்குவீர்கள். அரசியலில் நிதானமாகப் பேசுங்கள். ஆத்திரத்தில், அவசரத்தில் தேவையற்ற வேதனையைத் தேடிக்கொள்ளாதீர்கள். கைகால் வீக்கம், தாக்கம் காட்டுகின்றது. சைக்கிளை விடுவதாயினும் பூட்டிவிட்டுச் செல்லுகிறீர்களா என நிதானியுங்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களால் பல உதவிகளைப் பெறுவீர்கள். முதுகு உளைவு, கால் உளைவு, களைப்பு, சலிப்பு, அலைச்சலால் வேதனை என்பன இருக்கும். இருப்பினும் மனம் தளராது உங்கள் காரியங்களில் கவனமாக இருங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

கடகம்: ஆழ்ந்த நிதானமான போக்கும், அரசியலில் ஆழ்ந்த அறிவும், பௌதீக—ஆத்மீக அறிவும் கொண்ட நீங்கள் இக்காலத்தில் வரும் சந்தர்ப்பங்களை செயற்பாட்டில் செயற்படுத்த வேண்டும். பழைமையைப் பேசிப் பேசிப் பெருமை கொள்வதனால் என்ன பலன்? பலனை புதுமையாக அனுபவிக்க வேண்டாமா? தொழில் ஸ்தானத்தில் முயற்சிக்கு தகுந்த நன்மைகள் ஏற்படும். அயலவர்கள் குறைகுற்றம் சொல்லுவார்கள். படீர், படீர் எனப் பிறர் மீது குறை குற்றம் சொல்லாமல் பொறுமையாக இருந்தால் நன்று. உடம்பு எரிவு, நெஞ்சு நோ, சலவருத்தங்கள், சளித்தொல்லை, கைகால் தாக்கங்கள் மாறி மாறித் தொல்லை கொடுக்கலாம். தகுந்த வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

சிங்கம்; தொழில் ஸ்தானத்தில் புதுத் தென்புடன் காணப்படுகிறீர்கள் பட்ட கஷ்டம் நீங்கியதென்று எண்ணவேணடாம். படம் பார்த்த களைப்பு நீங்க 'இன்ரேவல்' மாதிரி மூன்றுமாதம் விலகவரும் சனி இக்காலத்திலிருந்து மெல்ல மெல்ல கஷ்ட நஷ்டங்களை குறைத்துக்காட்டும். புதிய வரவேற்பு — புதிய அலை வீசும் பலன்; எதிர்காலச் சிறப்பிற்கு நல்ல அறிகுறிகள் தென்படும். முதுகு வலி — நெஞ்சுநோ எனவும் அடிக்கடி அதிக வேலைப்பழுவாலும் ஓடியாடித்திரிவதனாலும் களைப்பு ஏற்படும். ஓய்வு எடுக்கவும். புத்திரருக்காக அதிக செலவுகளைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்; சனி, வியாழன்.

கன்னி: விறுவிறுப்பான காலமாகும். ஏதாவது சாதிக்கவேண்டும்? என மனதில் அடிக்கடி உறுத்தியபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருள்தேட என மற்றவர்களுடன் முட்டி மோத முற்படுவீர்கள். நிதானமாகச் செயற்படாவிடில் கண்டபடி மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகுவீர்கள். கைகாலில் வீக்கம் ஏற்படலாம். ஏன் ஏற்படும்? எப்படி ஏற்படும்? சளித் தொல்லை, இடுப்புவலி, மாற்றமொன்று காத்திருக்கும் காலமாகும். கவனமாகச் செயற்படவும். கண்ணில் படவேண்டியது புருவத்தில்பட்ட மாதிரி உங்களை தெய்வ சக்தி காப்பாற்றுகிறது என்ற உண்மை உங்களுக்கே தெரிகிறதா?

★ அதிர்ஷ்ட நாள்; வியாழன், வெள்ளி.

துலாம்: அரைக்கிலோ கத்தரிக்காய்க்குப் போய் ஆறு கிலோ காய்பிஞ்சுகளுடன் வந்தமாதிரி. தேவை ஒன்றிருக்க, பல தேவைகளை உருவாக்கி உள்ளதெல்லாம் செலவழித்து ஏன் இதைச் செய்தோம் எனக் கலங்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புகள் அதிகரிக்கும். எதிர்ப்பாலாருடன் தேவையற்ற வாக்குவாதம். புத்திரரோ — சகோதரமோ அதிக செலவுகளைத் தந்து மனம் சலிக்கச் செய்திடுவார்கள். வயிற்றில் வாய்வு, அடிக்கடி தலையிடி, தோல்வருத்தம், சலவருத்தம் எனவரும். எரிவுகளுக்கு தகுந்த சிகிச்சையைச் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

விருச்சிகம்: உலகத்தை நொந்து என்ன செய்வது? இலாபம் இருந்தால்தானே யாரும் உதவுவார்கள்? ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவுமா? எதிர்ப்பாலாரை அனுசரித்துச் செயற்படுங்கள். தைச் சொல்லி எதிர்ப்பாலாரின் பேச்சு வாங்கும் நேரம் இதுவாகும். வீடுமனைச் செலவு, அதிகரித்தபடி இருக்கும். பழமையில் புதுமை காணத்துடிக்கும் எண்ணங்கள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் அதிகமாற்றங்கள் செய்யச் சிந்திப்பீர்கள். பொருள் ஒன்று மறையப் பலன் உண்டு. உறவினர் நல்லதைச் சொல்லமாட்டார்கள். இடுப்புவலி, சளித்தொல்லை, உள்அவயவ வியாதிகள், கிருமித்தாக்கங்கள் சிலரை வருத்தச் செய்யும். உங்கள் சிந்தனைக் கருத்துக்களால் பிறர் பல நன்மைகளை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

## மகாதேவா ஜோதிடம்

மகரம்: நடப்பது நடக்கட்டும் நமக்கென்ன என நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை அறிந்தும், அறியாதவர் போல இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் பல மாறுதல்கள் செய்யத் திட்டம் உண்டு. ஆயினும் திடீரெனச் செய்ய மாட்டீர்கள். காலம் வரும், காலம்வரும் எனக் காத்திருப்பீர்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் அசுர வேகத்தில் பத்துப் பேரால் செய்ய முடியாத வேலைகளை ஒரு சில மணித்தியாலத்தில் முடித்து விடுவீர்கள். பொருள் இழப்பு உண்டு. வாகனம் யாருடையதாயினும் அதனால் நீங்கள் நன்மை அடைவீர்கள். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடம் உண்டு. வயிற்றுக்குழப்பம்,

## சோதிட சஞ்சீவி

தொழில் ஸ்தானத்தில் நல்லது, கெட்டது கலந்து நடக்கும். அடிக்கடி உடல்களைப்பால் கோபங்கள் வந்தபடி இருக்கும். கண்வலி — வயிற்றில் நோ, கிருமித்தாக்கம், இருதயநோ, கைகால்வலி என மாறி மாறி வரும் காலமிது. உங்களைச் சூழ அந்நிய முகங்கள் தெரியும் காலம் இதுவாகும். ஆலயதரிசனம் நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

தனுசு: மனதில் பட்ட

நரம்புநடுக்கம், தலைவலி, சலமனவியாதிகள், தோல் வியாதிகள் என்பவற்றால் வருந்த இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

கும்பம்: எந்த விஷயத்தையும் மதிநுட்பமாகச்சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்கள்நீங்கள். ஆத்மீகத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். தனிமையில் இனிமையுண்டு. தவித்தவர்களுக்கு உதவியுண்டு. சொன்ன சொல் தவ

(X ஆம் பக்கம் பார்க்க)

# மந்திரக்காளி

## ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

## சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

பகுதி - 3

சூல அடையாளம் இடப்பட்டு அனுப்பட்ட அந்தச் செய்தி... வருடத்தில் ஒரே ஒருநாள் மட்டும் தான் அந்த அறை திறக்கப்பட வேண்டும் என்றும் அசோகனின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் எவராவது ஈடுபட்டால் பெரும் ஆபத்துக்களைச் சந்திக்க நேரிடும் என்றும் கூறியது. வயதால் தளர்ந்த பாட்டி அதற்குக் கட்டுப்பட்டாள். குழந்தைகளை வளர்த்தாள். அவர்கள் மனதில், 'அந்த சக்தி'யை வெல்லும் இலட்சியத்தை வளர்த்தாள். காலச் சக்கரம் உருண்டு ஓடிற்று.

பாடசாலை விடுமுறை ஆரம்பமானது நிலாவும் ஆதித்தனும் திட்டமிட்டபடி கொல்லிமலைக் கிராமத்துக்குப் புறப்பட்டார்கள். பாட்டிக்குப் பிள்ளைகளின் புத்திசாலித்தனத்தில் நம்பிக்கை நிறையவே இருந்தது. பயம் மனதைக் குடைந்தாலும் விடை கொடுத்தாள். வீரக்குழந்தைகள் மர்மங்கள் நிறைந்த தாமிரபுரியை நோக்கிப்புறப்பட்டார்கள். கூடவே அவர்களின் 'றெக்ஸி'யும் புறப்பட்டது. றெக்ஸி அல்ஷேஷன் வகைக்குரிய உயர்சாதிநாய். மிகப் புத்திசாலித்தனம் உடையது.

அழகிய காலைப் பொழுது ஒன்றில் அவர்கள் கிராமத்தில் காலடி பதித்தார்கள். ஆதித்தனின் கையில் சிறுபெட்டி. அதனுள் ஒரு 'வயர்லெஸ்', சிறு ஆயுதங்கள், அணியும் ஆடைகள் அவ்வளவுதான்.

அங்கு ஒரு மயான அமைதி கவிந்திருந்தது. பாட்டி சொன்ன சாமித்தாத்தா வீடு எங்கே? தேடி அலைந்தார்கள் இறுதியில் கண்டார்கள். முற்றத்தில் மல்லிகைப் பந்தல் உடைய அந்த வீட்டின் முன்புறத்தில் முதுமையால் தளர்ந்த அக்கிழவர் நின்றிருந்தார்.

அவர்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். தாத்தா அவர்களை அன்போடு வரவேற்றார். கிராமத்தைச் சுற்றிக் காட்டுவதாகச் சொன்னார். விடுமுறையைச் சந்தோஷமாக அனுபவிக்க உதவுவதாகச் சொன்னார். வழமை போலவே ஊருக்குப் புதிதாக வந்த ஆதித்தனதும் நிலாவினதும் பெயர்கள் எழுதப்பட்டு கொல்லி மலை முன்பாக அமர்ந்திருக்கும் காளி தேவியின் உண்டியலில் இடப்பட்டது.



மதிய உணவின் பின் ஆதித்தன் மெதுவாகக் கேள்விகளை ஆரம்பித்தான்.

''தாத்தா? இந்த இடத்தில் ஏதேதோ அதிசயங்கள் நடக்குமாமே? உண்மையா?''

[illegible] தாத்தாவின் [illegible]யாய் மாறிப்போயிற்று. ''என்ன! அதிசயமா? அப்பிடி ஏதும் இல்லையே?'' அவர் அவசரமாகச் சொன்னார். ''தாத்தா! தாத்தா! கொஞ்சம் சொல்லுங்க தாத்தா'' என்ற நிலாவின் விழிகள் படபடத்தன. ஒரு வண்ணத்துப் பூச்சி சிறகுகளை அடிப்பது போலிருந்தது அது. ''கதை இல்லையம்மா அது! கசப்பான உண்மைகள்! அதெல்லாம் வேண்டாம் உங்களுக்கு'' தாத்தா அறுதியாகச் சொல்லி விட்டார்.

இரவின் வரவில் அக்கிராமத்தின் மர்மவாசல்களில் ஒன்று திறந்து கொண்டது. நள்ளிரவு கடந்து நான்கு நிமிடங்கள் இருக்கும். நாயின் ஊளைச்சத்தம் ஒன்று எழுந்தது. வழக்கத்திற்கு விரோதமாக மிக நீண்டதாகவும், மரண ஓலம் போலவும் இருந்தது அது.

**ச. சாரங்கா**


ஆதித்தன் எழுந்தான். தாத்தாவும் விழித்து விட்டாலும் எழும்பவேண்டாம் எனச் சைகை செய்தார். மீண்டும் பாயில் படுத்துக்கொண்டான். மின் சூளை அவனது விரல்கள் இறுகப் பற்றின. திறந்திருந்த யன்னற் கதவு படபடவென அடித்துக் கொண்டது. புயற்காற்று வீசுகிறதா என்ன? உண்மையிலேயே காளித்தாய் உக்கிரம்கொண்டு விட்டாளா? திடீரென திறந்திருந்த தெற்குப்புற யன்னலை நோக்கி றெக்ஸி பாய்ந்தது. அத்திசையில் மின்சூள் ஒளியைப் பாய்ச்சினான் ஆதித்தன். அங்கே......தீயில் வெந்துபோன முகத்தையுடைய ஒரு ஒற்றை விழி மனிதன் நின்றுகொண்டிருந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 52



சொற்சிலம்பம் இல. 52
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ....................................................
விலாசம்: ....................................................
....................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 05 — 06 — 1998

**இடமிருந்து வலம்**

1. மேயர். 5. தந்தையின் சகோதரி; துணைவியின் தாய். 7. உள்ளே தள்ளு. 8. ஒரு தானியத்தைஅரைத்தால் வருவது; ஆலயத்தில் நெய்விளக்கு ஏற்றப் பயன்படுத்துவர். 10. சுக்கு நூறாக்கு. 12. வயிறு. 13. தோய்ப்பதற்காக துணிகளை இவ்வாறு செய். 14. உணவு தயாரி. 15. கழிவகற்றும் உறுப்பு. 17. தன்மை ஒருமைச் சொல். 18. ஒன்று சேர். 20. மண்டையோடு. 22. இலங்கையின் மத்திய பாகத்தை இப்படி அழைப்பர். 25. நொடி.

**மேலிருந்து கீழ்**

1. ஆறு. 2. இலக்கங்களுடன் தொடர்புடைய பாடம். 3. தந்தை வழி மூதாக்கள். 4. படை. 6. சினேகிதன். 9. சிவனின் மனைவி இவள். 11. பாக்குத் தரும் மரம். 13. நெற்றியில் இடும் திலகம் இது. 14. ஓர் அரிசி வகை. 16. மெல்லிய உலோகப் பொருள். 17. தன்மைப் பன்மைச் சொல். 19. ஒரு பொருளின் பெறுமதியைக் குறிப்பிடுவது. 21. ஒரு பட்சணம். 23. ஐந்துக்கு முந்தியது; மூன்றுக்குப் பிந்தியது. 24. அசோகவனத்தில் சிறையிருந்தவள்.

**சொற்சிலம்பம் 50 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. ஐம்பது. 4. அகதி. 7. குருதி. 9. மரி. 10. வசதி. 12. மிதம். 14. தரி. 15. கூர்மை. 17. சனி. 18. யமுனை. 20. ஆம். 21. மன்னி. 23. பகிடி. 25. வகு. 27. வினாவிடை. 28. நன்றி.

**மேலிருந்து கீழ்**

1. ஐராவதம். 2. பகுதி. 3. துரு. 5. கமம். 6. திரி. 8. திமிர். 11. சரி. 13. தமையன். 15. கூனி. 16. மனை. 17. சம்பவி. 19. முனிவன். 21. மடி. 22. சாவி. 24. கிடை. 26. குறி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** சி. பானுதீபன்,
விக்கினேஸ்வரா கல்லூரி,
கரவெட்டி.

★ **இரண்டாம் பரிசு:** சு. ஸ்ரீசத்யவாணி,
சிவன் கோவிலடி,
சித்தங்கேணி.

★ **மூன்றாம் பரிசு:** ஸ்ரீ. உமாசுதன்,
பொன்னாலை வரதராஜப்
பெருமாள் வித்தியாலயம்,
பொன்னாலை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 51 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

எவ்வளவுக் கெவ்வளவு வசதி வாய்க்கிறதோ—அவ்வளவுக்கவ்வளவு பிள்ளையைச் சொகுசாக வளர்த்துவிட முனைகிறார்கள் பெற்றவர்கள்.

தன் பிள்ளை கஷ்டம் கண்டு வளரக்கூடாது என்ற எண்ணம் ஒருபுறம். அடுத்தவரோடு பிள்ளை வளர்ப்பிலே போட்டி மறுபுறம் விளைவு.....? பிள்ளை உருப்படாது!

கஷ்டத்தைக் காட்டி வளர்க்காவிட்டால் போகிறது. வாழ்க்கை அனுபவத்தை ஊட்டி வளர்த்துவிடல் வேண்டாமா? கண்டித்தும் கல்விக்கண்ணையும் திறந்துவிடல் வேண்டும்.

மனம் போன போக்கிலே பிள்ளை வளரப் பழகிவிட்டால் கவனம் பல திசைக்கும் சிதறிப் போகும். உருப்படியான காரியங்களில் அதன் மனம் ஈடுபடாது.

சொகுசாக வளர்ந்தபிள்ளை — அல்லது கண்காணிப்போ— கண்டிப்போ — இல்லாமல் வளர்ந்தபிள்ளை நாளை ஊர் வம்பு எல்லாம் விலைக்கு வாங்கி வரும். வீட்டு வாசலிலே ஊர்கூடி நின்று நியாயம் கேட்கும் நிலைமை எழும். வீடு நரகமாகிவிடும்.

நிலைமை இப்படி ஆகும் போது சிலர் பிள்ளையைக் கடிகிறார்கள் சிலர் ஊரைப் பகைக்கிறார்கள். சிலர் சரி பிழை தெரியாமல் திணறுகிறார்கள்.

பெத்த மனம் பித்தாக—பிள்ளை மனம் கல்லாக— பழிக்கு அஞ்சாப் பிள்ளை பாவம் தேடிவரும். இந்தப் பிறவியே ஒரு நரக வேதனையாகிவிடும்.


எனவே பிள்ளையைப் பெற்றால் மட்டும் போதுமா? பழிக்கு ஆட்படாத பண்புடைய மக்களைப் பெறின் இப் பிறவியில் மட்டுமா துன்பம் நெருங்காது? ஏழேழு பிறவிகள் வாய்த்தாலும் எல்லாம் இன்பமயம்!

எழுபிறப்பும் தீயவை தீண்டா
பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

—0062

—அம்பிகைபாகன்—

# 27-05-1998 இல் நிகழ்ந்த வியாழ மாற்றப் பலன்கள்




மாற்றம்:

12–9–1998 ல் மீண்டும் வியாழன் கும்பராசிக்கு வக்கிரம் அடைவார்.

வடஐரோப்பிய நாடுகளான நோர்வே, ஸ்கொட்லாந்து, சுவீடன் போன்றவற்றிலும் ஜேர்மனியிலும் அமெரிக்க நாடுகளிலும், மத்திய கிழக்கு, இந்து சமுத்திர நாடுகளான இந்தியா, இலங்கை உட்பட்ட நாடுகளிலும்இந்த வியாழமாற்றத்தால் எதிர்பாராத அரசியல் குழப்ப, தளம்பல் நிலைகள் ஏற்பட இடம் உண்டு. ஐ. நா. இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் சில அழுத்தங்களை நிலை நாட்டலாம். பொருளாதாரப் பிரச்சினை, யுத்த பயம், அழிவுகளால் மக்கள்மத்தியில் குழப்பங்கள் மனக் கலக்கங்கள் ஏற்படும் பலன்கள் காணப்படுகின்றன. இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படும் காலமென கிரக நிலைகள் காட்டுகின்றன.

**மேடம்:** ஏன் இந்த வேலை? நாலு மனிசர் நாலு விதமாகக் கதைக்கிறார்கள். காசு, காசு என்று சாகும் உலகில் காசுக்காக பல வாக்குறுதிகளைச் சொல்லி பின்பு வருந்துவீர்கள். எதிர்ப்பாலாருக்குக்கூட இரங்க வேண்டாம். புத்திரர்களுக்காக அதிக செலவுகள் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் நல்லது கெட்டதைப் பேசுவர். பிரயாணம் ஆலயங்களால் செலவுகள் ஏற்பட இடம் உண்டு.

**இடபம்:** என்னங்க கொஞ்சம் கலகலப்பாக இருக்கின்றீர்கள்? வெளிநாட்டிலிருந்து ஏதாவது லட்சம் கிடைத்ததோ? தொழில் ஸ்தானத்தில் தொட்டதெல்லாம் துலங்கும் காலமாகும். வீடு மனை மாற்றம்—புதிய இடம் தேடி ஓடிவரும். நண்பர்களாலும் மூத்த சகோதரர்களாலும் இலாபம் உண்டு. மனைவியிடம் ... இல் மட்டும் அமைதி இராது.

**மிதுனம்:** ''பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான'' கதைதான். என்றாலும் அடுத்தவன் வாகனம், அடுத்தவன் வீடு. அயலவன் பொருள்கள் தேடி ஓடி வரும். கொஞ்சம் நிதானம் தேவை. இப்பொழுது சிவில் நிர்வாகம் தலையை எட்டிப் பார்க்கும் காலம் அல்லவோ? தொழில் பீடத்தில் புகைச்சல். புத்திரர்களுக்கோ சகோதரர்களுக்கோ நல்லதல்ல.

**கடகம்:** புண்ணிய ஸ்தானத்தில் வியாழன். புனித இடங்களில் நாட்டம். காசு பணம் தேடி ஓடிவரும். சாமிமாரையும், சாத்திரிமாரையும் தேடி ஓடுவீர்கள். புத்திரரின் சிறப்பு — மனதில் ஒரு நிறைவு. தொழில் ஸ்தானத்தில் அகட்டி உறுட்டியவர் உங்களைக்கண்டுதலையாட்டுவார்கள். நிச்சயமாய் பழைய கடன்வரும். கலங்காது செலவு செய்யுங்கள். —வீட்டு விஷயங்களுக்கு மட்டும்

## உங்களுக்கு எப்படி?

என்று குரு சொல்லுகிறார்.

**சிங்கம்:** சங்கம் அமைத்து கூட்டம் கூட்டிக் காசு கேட்காதீர்கள். பல சங்கடங்கள் தேடிவந்துவிடும். கைப்பிடிப்பு, கால்பிடிப்பு, மனதில் ஓயாது அலைவீசும் கவலைகள், பொருள் இழப்பு, கள்வர் பயம், நீங்காத வடுஒன்று காத்திருக்கும் காலமாகும். தொழில் நஷ்டம், பிரயாணக் கஷ்டம், வெளிநாடு வேண்டாம். ஏமாற்றம் தேடி வரும் காலமாகும்.

**கன்னி:** எதிர்ப்பாலாருடன் எதிர்க்காமல் நடப்பது உங்களைப் பொறுத்ததுதானே? அரசியலில் நிதானப்பேச்சு அவசியமாகும். எதிர்பாராத திசைதிருப்பங்கள் நன்மை தீமையாக மாறி மாறி வர இடம் உண்டு. கொஞ்சம் மினுமினுப்பு வரும். ஆலயங்களில் கொஞ்சம் ஆறிவர நேரம்வரும் காலமிது.

**துலாம்:** பொன்னவன் பிணிஸ்தானத்தில் இருந்தால் காசு வருமா? கவலைகள், நோய் நொடிகள் தேடி ஓடிவரும். கலங்காத நீங்கள் கலங்கி விடுவீர்கள். எவரிலும் எதிலும் சந்தேகம் தோன்றச் செய்யும். வெளிநாட்டவர் உதவி செய்யமாட்டார்கள். வயிற்றில்நோ ஒன்று கலக்கத்தைத் தந்தபடி இருக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் நாடிய செல்வம் தேடி ஓடிவரும். காணி, நிலம் வேண்டும் என ஓடிஓடிப் பார்ப்பீர்கள். உருகிய நெஞ்சம் ஒன்று உதவிகள் பல செய்யும். உதவிக்கு நின்ற ஒன்று நன்றியை மறந்து போகும். புத்திரர் சிறப்பு உண்டு. பெரியவர்கள் உதவிகள் தேடித், தேடி வரும்.

**தனுசு:** இந்த உலகத்தில் யாரை நன்மை சொல்லுவார்கள்? ஆடை, ஆபரணங்கள் மட்டும் இருந்தால் போதுமா? மனஆறுதல் வேண்டாமா? தெய்வவழிபாடு முக்கியமாகும், வீட்டுச் செலவுகளைக் கட்டுப் டுத்

## மகாதேவா ஜோதிடம்

துங்கள் தொழில் ஸ்தானத்திலும், சமுதாயத்திலும் ஏற்படும் தாக்கங்களால் நீங்கள் பாதிக்கப்படலாம். உறவினர்கள், நண்பர்களால் ஆறுதல் ஏற்படும்.

**மகரம்:** நீங்கள் வழமையாக இறுக்கமானவர். இருப்பினும் இக்காலங்களில் 'வெளுத்ததெல்லாம் பால்' என எண்ணி எல்லோரிடமும் இரகசியங்களைச் சொல்லுவதனால் வீண்கஷ்டங்கள் ஏற்பட இடம் உண்டு. அயலவர்களுடன் அவதானமாக இருக்கவும். உஷ்ணபீடைகள், மனச்சஞ்சலங்களால் சிலர் வருந்த இடம் உண்டு. தொழில் ஸ்தானங்களில் பொருளில் அவதானமாக இருக்கவும்.

**கும்பம்:** சனி வீட்டிலிருந்து சரித்திரம் பல காட்டிய வியாழன், சனியுடன் மீனத்தில் குடியிருக்கச் செல்லும் காலமிது. பிள்ளைகளால் பல செலவுகளும் வேண்டுமென்று பல தொல்லைகளும் ஏற்படும். கையில் வந்த காசு பையில் போடு முன் மறைந்து விடும். தொழில் ஸ்தானத்தில் பொருளால் வேதனை பல தந்து விடும். மனம் சலித்துவிடும். மருந்திற்கும் விருந்திற்கும் செலவுகள் சென்றபடி இருக்கும். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

**மீனம்:** 'பொருளால் உறவு கெடும்.' உங்களுக்கு தரம் குறைந்தவர்களால் பல தொல்லைகள், வீண்பழி தேடி ஓடிவரும். புத்திரரால் செலவுகளும் — பிறருடன் பகைக்கும் மனோபாவமும் ஏற்படும். அடிக்கடி தடுமாற்றம், இனஜனத்தாருடன் மனக்கருத்து மாறுபடும் நிலை கொடுக்கும். உஷ்ண பீடைகள், தலைச்சுற்று, பித்தரோகம், சளிபீடை என வைத்திய உதவிகள் நாட நேரிடும். சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்யுங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவி தந்த விளக்கம்

ஓர் ஊரில் ஒரு துறவி இருந்தார். அவர் அந்த ஊர் மக்களை எல்லாம் நல்லொழுக்கம் பொருந்தியவர்களாகமாற்ற வேண்டும் என்று விரதம் எடுத்துக் கொண்டு அதற்காகவே வாழ்ந்து வந்தார்.

அவர் எதையும் வெறுமனே போதிப்பதுடன் நின்று விடாமல், சில நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அதன் மூலம் மக்களுக்கு அறிவு புகட்டுவது வழக்கம்.



ஒருநாள் அவர் பொது மக்களிடம் பிக்ஷை எடுத்து சிறிது பணம் திரட்டினார். அந்தப் பணத்தைக் கூலியாக சிலருக்குக் கொடுத்து, ஒரு பெரிய பாறாங்கல்லை ஒரு மலையின் மீது ஏற்றச் செய்தார்.

கூலியாட்கள் கூலியை வாங்கிக் கொண்டு அந்தப் பாறாங்கல்லை மிகவும் கஷ்டப்பட்டு மலையின் மீது ஏற்றி விட்டார்கள்.

துறவி அந்த மலைமேல் ஏறி, கூலியாட்கள் மிகவும் சிரமப்பட்டு மலை மீது ஏற்றிய பாறையை அங்கிருந்து கீழே உருட்டி விட்டார். இது போலவே தினமும் நடந்தது.

'துறவிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது' என்று நினைத்த மக்கள் அவரது செயலுக்கு அவரிடம் விளக்கம் கேட்டார்கள்.

அதற்கு இவர் தந்த விளக்கம் இதுதான்:-

வாழ்க்கையில் மனிதன் நல்லொழுக்கத்தோடு கொஞ்சம் கொஞ்சமாகக் கஷ்டப்பட்டு முன்னேறுவதைக் காட்டுவதற்காகப் பாறாங்கல்லை மலைமேல் ஏற்றச் சொல்கிறேன். அப்படி ஏறியவர்கள் தவறி கீழே விழுவதற்கு அதிக நேரம் ஆகாது என்பதைக் காட்டுவதற்காகத்தான், அதை என் கையால் மீண்டும் கீழே தள்ளிவிடுகிறேன். அப்படி விழுபவர்கள் திரும்பவும் எழுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதைஉணர்த்துவதற்காகத்தான் மறுபடியும் கூலி கொடுத்து சிரமப்பட்டு மலைமேல் பாறையை ஏற்றச் செய்கிறேன்'' என்றார் துறவி.

அவரது செயலில் ஆழ்ந்த ஓர் உண்மை இருப்பதை மக்கள் அப்போது புரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு செயல்கள் மூலம் புரிய வைப்பது எளிதில் மக்கள் மனதில் பதிந்து விடும் என்பதை உணர்ந்து கொண்டவர் அந்தத்துறவி. ★

## குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்

# என்றும் துணையாக நிற்கும் இறைவன்

பக்தனின் முன் தோன்றினார் இறைவன். ''உனக்கு என்னவரம் வேண்டும்கேள்'' என்றார்.

''நீங்கள் எந்தச் சூழலிலும் என்னை விட்டுப் பிரியக் கூடாது. எப்பொழுதும் என்னுடனேயே இருக்கவேண்டும். அதுதான் நான் கேட்கும் வரம்''என்றான் பக்தன்.

''அப்படியே ஆகட்டும். ஆனால் நான் உன்கண்களுக்குத் தெரியமாட்டேன்'' என்று சொல்லி மறைந்தார் இறைவன்.



அன்றையிலிருந்து, 'இறைவன் தன்னுடனே இருப்பது உண்மைதானா?' என்று அறிய விரும்பினான் பக்தன்.

அவன் மகிழ்ச்சியாக இருக்கும் வேளையில் எங்காவது நடந்து சென்றால் தரையில் இரண்டுஜோடி காலடித்தடங்கள் தெரிந்தன. கடவுளும் உடன் வருகிறார் என்று அவன் மகிழ்ச்சி கொள்வான்.

ஆனால் அவன் துன்பமாக, சோர்வாக, சலிப்பாக இருக்கும்போது நடந்தால் தரையில் ஒரு ஜோடிகாலடித்தடங்களே தெரிந்தன. கடவுள் தன்னுடன் வரவில்லை என்று அறிந்துகொண்டான்.

''எப்பொழுதும் இறைவன் தனக்குத்துணையாக இருக்க வேண்டுமோ? அப்பொழுது வரவில்லையே'' என்றுவருந்தினான்.

இப்படியே பல நாள்கள் தொடர்ந்து நடந்தன. இறைவன் தனக்குத்தந்த வரத்தின் படி நடக்கவில்லையே என்றும் நினைத்துக் கொண்டான்.

''இறைவா! என் கண் முன்பு மீண்டும் தோன்ற வேண்டும்'' என்று வேண்டினான்.

கடவுளும் அவன் முன்பு தோன்றினார்.

''நான் மகிழ்ச்சியாக இருக்கும் சூழலில் என்னுடன்வருகிறீர். நான் துன்பப்படும்போது என்னைவிட்டு ஓடி விடுகிறீர். இது நியாயமா?'' என்று கேட்டான் பக்தன்.

''நான் எப்பொழுதும் உன்னுடன்தான் இருக்கிறேன். நீ மகிழ்ச்சியாக இருக்கும் பொழுது உன்னுடன் நானும் மகிழ்ச்சியாக வருகிறேன். அதனால் இரண்டு ஜோடி காலடித் தடங்கள் தெரிகின்றன.. நீ துன்பமாக இருக்கும் பொழுது உன்னை நான் சுமந்துகொண்டுசெல்கிறேன். தரையில் என் காலடித் தடம் மட்டுமே தெரிகிறது'' என்று விளக்கினார் இறைவன். ★

# இராமன் தீண்ட மறுத்த அந்த இருமாதரும் யார்?

திருமணத்துக்குப் பிறகு சாந்தி முகூர்த்தத்துக்கு ஏற்பாடு செய்து, சீதையை அலங்காரம் செய்து அறைக்கு அனுப்பிவைத்தார்கள். ராமர் கட்டிலில் படுத்துத் தூங்குவதுபோலக் கண்ணை மூடிக் கொண்டிருந்தார். அருகே சென்று காலடியில் அமர்ந்தாள் சீதாதேவி ''தேவி! என் பாதங்களைப் பிடித்துவிடேன்!'' என்று புன்முறுவலுடன் சொன்னார் ராமர். ஆனால், சீதாதேவி தலையைக் குனிந்து கொண்டாள். பாதங்களைப் பிடிக்க முயலவில்லை.

''என்ன தேவி? அரசகுமாரியான நாம் பாதங்களைப் பிடிக்கும் பணியைச் செய்வதா? என்ற தயக்கமா? அவ்வாறாயின் வேண்டாம்'' என்று பாதங்களை இழுத்துக்கொண்டார்ராமர்.

''அப்படியல்ல சுவாமி! ஒரு கதை கேள்விப்பட்டேன். தாங்கள் மிதிலை வரும் வழியில் ஒரு கல்லைத் தாங்கள் பாதம் தீண்ட, அழகான பெண்ணொருத்தி வெளி வந்து நின்று வணங்கினாளாம். இன்று எனக்கு அலங்காரம் செய்யும்போது நவரத்தினக்கற்கள் கொண்ட மோதிரத்தைப்பூட்டி இருக்கிறார்கள். தங்கள் பாதம் பட்டவுடன் நவரத்தினக் கற்கள் அழகிய கன்னியாக உருப்பெற்று வந்து நின்று விட்டால் என்ன செய்வது? எனக்குப் போட்டி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறேன்!'' என்று குறும்புடன் சொல்லிச் சிரித்துக் கொண்டான் ஜானகி.

ராமர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். தனது கையில் சீதாதேவியின் அங்கையை எடுத்து வைத்துக்கொண்டு அதன் மீது தன் கையை வைத்துச் சத்தியம் செய்து கொடுத்தார். 'தேவி! உன்னைத் தவிர இருமாதரை மனத்தாலும் தீண்டேன்!' என்று உறுதிமொழி கூறினார். கம்பன் கூறும் இந்த நிகழ்ச்சியில் 'இருமாதரை' என்று வரும் பாடல் வரிக்குப் பொருள் கூறும்போது 'நீ ஒருத்திதான் எனக்கு உரியவள். வேறு மாதரை இரண்டாவதாக மனத்தாலும் தீண்டமாட்டேன்!' என்று சொல்லுவதாகவே எல்லோரும் கூறுவார்கள்.

அதுசரியல்ல. மகாவிஷ்ணுவுக்கு சீதேவி, பூதேவி, நீளா தேவி என்று மூன்று மனைவியர் உண்டு. பூவுலகில் ராமனாக அவதரித்தபோது, சீதேவி சீதையாக அவரை மணந்து கொள்ள வந்துவிட்டாள். ஆனால், பூதேவியும் நீளாதேவியும் வைகுண்டத்திலேயே தங்கிவிட்டார்கள். 'ராமனாக இந்த ஜன்மத்தில் பூமிக்கு வந்துவிட்ட பிறகு, வைகுந்தத்தில் இருக்கும் எனக்குரிய தேவியாரான பூதேவியையும், நீளாதேவியையும் கூட, நான் மனத்தாலும் நினைக்கமாட்டேன்' என்று ராமர் கூறிய தாகத்தான் அதற்குப்பொருள் கூறவேண்டும். திருமணம் மூலம் தன்னை அடைந்திராத வேறு பெண்களைத்தான் மனத்தாலும் நினைக்க மாட்டேன் என்று கூறுவதில் தனியான சிறப்பு ஒன்றும் இல்லை. ஆனால், தன்னை மனைவியாக அடைந்திருந்த—தனது உரிமைப் பொருள்களாக உள்ள—இருதேவியரையும் கூடத் தான் மனத்தாலும் தீண்டமாட்டேன் என்று கூறியதில்தான் பெருமை, சிறப்பு எல்லாம் அடங்கி இருக்கிறது! ★

திருமுருக கிருபானந்தவாரியார்.

# இரண்டு சில்லு.....

(V ஆம் பக்கத்தொடர்)

பூமி இன்னும் அழியாமல் இருப்பதற்கு இவளைப் போன்ற பெண்கள் இப்பவும் எஞ்சி இருப்பதுதான் காரணம் என மனம் எண்ண மனைவியைப் பெருமையோடு பார்த்தான்.

''என்ன மனம் இன்னும் சொல்லுது?'' செல்லமாகக் கேட்க கடந்துபோன நிகழ்வுகள் யாவும் நெஞ்சில் திரைப்படமாய் விரிந்த காட்சி தடைப்பட்டது. ஆனந்தன் சிலையாய் இருந்தான்.

''நல்லாய்விடிஞ்சுபோச்சு; போய் முகத்தைக் கழுவிப் போட்டு வாங்கோவன். தேத்தண்ணி ஆறுது...''

''பலகாரம் கடைக்குக் குடுத்தாச்சே''

''ஓமோம் அது போய் கன நேரமாச்சுது...''

''உன்னைப் பார்க்கப் பாவமாய்இருக்கு மாலினி...''

''இப்ப என்ன நடந்து போச்சுது, பாவத்துக்கு எல்லாம் சரியாய் வரும்''

''என் விதி இப்படியாய் போச்சு, காலம் சரியில்லாததாலை காலும் போச்சு... அதோடை...''

''திரும்பத்திரும்ப அதையேன் நினைக்கிறியள்...''

''இல்லை மாலினி— நீ இப்பிடி...'' வார்த்தைகள் வெளியே வராது தொண்டைக்குள் சிக்கிக் கொண்டன. சிரிப்பொன்றைச் சிந்தி ஓரக்கண்ணால் கணவனைப் பார்த்தாள். சொக்குப் பொடி போட்ட மாதிரி நெத்தியில் தெரிந்த குங்குமப் பொட்டும் அவளின் சிரிப்பும் அவனை மயக்க சாந்தமடைந்தான். மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பது மெய்தான். இவளவு நடந்த பின்பும் சீறிச் சிணுங்கல் ஏதுமின்றி சுமையெல்லாத்தையும் சுத்தமாகச் சுமந்து கொண்டு எதுவும் நடவாத மாதிரி நடந்து கொள்ளும் இவள் எனக்கு மனைவியானது பெரும் பாக்கியம்.

''ஜெய்பூர் காலுக்கு ஏற்பாடு செய்யவேணுமல்ல...''

''அதுக்கிப்ப என்ன அவசரம்...காசுக்கு என்ன செய்யுறது...?''

''உங்கப்பாவின் செத்த வீட்டுச் சிலவுக்கு கொடியைத் தானே வித்தனாங்கள்...''

''......''

''தான் கிடக்குதுதானே ஆத்த...''

''ஏன் மாலினி...?'' அவன் கெஞ்சும் குரலில் கேட்டான்.

''தாலிக்குப் பெருமை தங்கத்திலை இல்லை மஞ்சளிலையும் இருக்கு. மனத்திலையும் இருக்கு...'' மிக மெதுவான தொனியில் வெகு சாதாரணமாகச் சொன்னாள். எதுவும் பேசாமல் ஆனந்தன் அப்படியே அசையாமல் நின்றான்.

''எனக்கு நீங்கதான் வேணும் உங்களுக்குக் கால் வேணும்...'' கண்களில் நீர் திரண்டது.

''நீங்கள் பொல்லூண்டி நடப்பதைப் பார்க்க என்னாலை தாங்க முடியல்ல...'' கேவி அழுதவளை அப்படியே அணைத்துக்கொண்டான். அவள் பேச்சில் ஆனந்தன் உருகிப் போனான்.

''மாலினி வீண் தண்டச் செலவுகளைக் குறைக்க வேண்டும்...''

''அப்பிடி என்ன செய்யுறம்...''

''வீடி, சிகிறட் இது எல்லாம் வீண்தானே... இனிமேல் எதுவும் தேவையில்லை. எல்லாத்துக்கும் நீ என்ன செய்யுறது...''

''செய்ய வேண்டியது நிறைய இருக்கு. கணவன் மனைவி உறவு சமைச்சுச் சாப்பிட்டு கூடிப் பிள்ளைகள் பெறுவதற்கல்ல. ஏலாத காலத்தில் உதவி ஒத்தாசை செய்தும், ஒருவர்க்கொருவர் ஆறுதலாய் இருப்பதும்தான் உண்மையான தாம்பத்தியம். அதுதான் நிறை வாழ்வு...'' அதிகம் படிக்காதவளாய் இருந்தும் வேதாந்தி போல் பேசியவளைப் பார்த்துப் பிரமித்துப்போனான்.

'ஓ... இவள் சாதாரண பெண்ணில்லை.' அவள் கைகளைப்பற்றி கண்களில் ஒத்திக் கொண்டான்.

''எனக்கு இப்ப கால் போனதைப்பற்றிக் கவலை இல்லை. நீயே எனக்கொரு காலாய் இருக்கையுக்கை எனக்கென்ன பயம்...'' சற்று நிறுத்தி மீண்டும் நிதானமாக தெளிவாக ''நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்... என்னைச் சுட்டெரித்த எண்ணத்தை அணைக்க வழி கண்டுட்டன்...'' சொன்னான்.

வியப்போடு கணவனைப் பார்த்தாள். நீண்ட நாளையின் பின் அவன் முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

''பொய் பேசாமல், களவெடாமல், பிறரட்டைக் கையேந்தாமல் கௌரவமாய் வாழ முடியும்...'' ''...''

''எனக்கு சைக்கிள் திருத்திறவேலை கொஞ்சம் தெரியும் தானே? அதனாலை சின்னதாக ஒருகடை போடுவம். அதுக்கு அவளவு காசும் செலவாகாது. ஒரு நாளைக்கு அது பெரிசானால் பெரிசாகட்டும்... இல்லாட்டிப்போனாலும் நாலு ஒட்டு ஒட்டினாலும் காசு வரும்... கவலைஇல்லை... நான் வேலை செய்யுறன் எண்டதென்பு எனக்கிருக்கும்... நீயும் கஷ்டப்படத் தேவையில்லை...''

அவன் பேச்சில் ஆர்வம் இருந்தது. அதனுடன் உறுதியும் இருந்தது. வெகுநாளையின் பின் வாய்விட்டு சிரித்தவனோடு தானும் சேர்ந்து கொண்டாள். ★

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

றக்கூடாது எனப் பல சித்தாந்தங்களை வரம்பிட்டு அதன் நடுவே வாழநினைக்கிறீர்கள். அயலவர்கள், நண்பர்களை நம்பக்கூடாது. தொழில் ஸ்தானத்தில் எல்லோரும் நேர்மையானவர்களா என அடிக்கடி சிந்திப்பீர்கள். உற்றவர், சகோதரர், பெற்றவர் உதவி தாராளம். கால்வலி, நெஞ்சுநோ, எலும்பு வலி என மாறிமாறி இருக்கும். வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

மீனம்: சிலர் பாதை மாறிச் செல்வர். பலர் இலாபம் பார்த்துப் போவார். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?—எனச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். ஏழரைச் சனி அலைக்கழித்தபடி இருக்கும். பக்கத்து வீட்டுக்காரர்கள் உங்கள் படலையைப் பார்த்தபடி இருப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் சீற்றம் இருக்கும். என்னைப் பார்க்க முன், உன்னைப் பாரப்பா எனச் சொல்லவாயெடுக்கும்; சொல்லமாட்டீர்கள். சனி, கைகால் உளைவு, நெஞ்சு, வயிறு, கண்நோ, வலி என மாறிமாறி வருத்தியபடி இருக்கும். ''நான் பார்க்காத டாக்டருமில்லை; குறிப்புக் காட்டாத சாத்திரியுமில்லை, விபூதி வாங்காத சாமியுமில்லை'' எனப்பெருமை பேசுவீர்கள். சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சந்தையில் சோதிடம்

''கடவுள் அமைத்து வைத்த மேடை; இன்னாருக்கு இன்னாரென்று எழுதிவைத்தானே தேவன் அன்று.' எனும் தத்துவ ஞான பொன்முத்துச் சரங்கள், கவிஞனின் அளவிடற்கரிய ஆற்றலை மட்டும் எடுத்தியம்பவில்லை; மானிட ஜென்மத்தின் உண்மைப் பொருளை—விதியின் வலிமையினையும் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

நாம் முற்பிறப்பில் இயற்றிவைத்த நல்வினை—தீவினைகள்தாம் இப்பிறப்பில் எம்மை ஆட்டிப்படைக்கின்றன. இதையே எமது சாதகம் வலியுறுத்திக் கூறுகின்றது. எந்தெந்த ஊரிலே பிறந்த மனிதன், எந்தெந்தோ ஊரிலே போய் திருமணம் செய்து கொள்ளுகின்றான். சில திருமணங்கள் சிறப்பானதாகவும், சில, அவயோகமுள்ளதாகவும் அமைந்து விடுகின்றன. இலக்கினத்தில் இருந்து ஏழாம்பாவம்—களஸ்திர ஸ்தானம், இதன் அதிபதி, இவருடன் கூட்டுச் சேர்ந்த ஏனைய கிரக அமைப்புகள் — கிரகசாரத்தின் தன்மைகள் —இவற்றைப் பொறுத்து எமக்கு வாய்க்கப்போகும் மனைவியின் தன்மைகள்—குணவியல்புகளைக் கண்டறியலாம். எங்கள் நாட்டுப் பழமொழிக்கிணங்க இவை ''சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டவைவாகவே'' கருத இடமுண்டு.

அன்றைய நாள்களில் திருமணப் பொருத்தங்கள், பழைய சம்பிரதாய சட்டதிட்டங்களுக்கமைய்வ நடைபெற்றன. இதனால் அளவுகடந்த நன்மைப் பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. போட்டி, பொறாமை, வழக்கு, நோய்கள் இடம்பெறாது, ஒருவருக்கொருவர், பரஸ்பர நல்லெண்ண அடிப்படையில் வாழ்க்கைப் பாதை சென்ற காரணத்தால் இளந்தலைமுறையினரும், ஒரு பிள்ளைக்கும், அடுத்த சகோதரத்துக்கும் சில வருட இடைவெளி இருந்தமையால் நல்ல உடல், உரமான—நோய் இல்லா—தன்மையும், கமம், தோட்டம், உடல் பயிற்சி நெறி இவைகளில் முன்னேற்றமும் இருந்தமை கண்கூடு.

இன்றைய நாள்களில், மனம்போன போக்கில் திருமணம் நடத்தப்பட்டு வருவதால், அன்பு இல்லாமை, சந்ததியின்மை, கருவழிதல், துர்ப்பல சந்ததி, கர்ப்ப சம்பந்தமான ரோகங்கள், பிறந்து இறத்தல், அற்ப ஆயுள்போன்ற துர்ப்பலன்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை யாவரும் நன்கறிவர்.

தற்கால நவநாகரிக யுகத்தில், பெண்வீட்டாரோ. அல்லது மாப்பிள்ளை வீட்டாரோ, பணம், பகட்டு, உத்தியோக அதிகாரம், அழகு, வெளிநாட்டுத் தேட்டங்கள் இவைகளையே கணக்குப் போட்டுப் பார்க்கின்றனர். ''அவர் வெளியிலையோ? அப்ப பெண்ணை அனுப்புவம்'' — என்று ஓடித்திரிகிறார்கள். பழைய சம்பிரதாயங்களை — திருமணப் பொருத்த விதிகளை — மறந்து போய் விடுகின்றனர்.

இப்படி எழுதுவதையிட்டு, வெளிநாட்டுக்காரர்கள்—கொடுக்கை இழுத்து மல்லுக்கு வரவேண்டாம். தற்பொழுதுள்ள நடைமுறையையே இது. எது எப்படி இருப்பினும், எமது பண்டைக்கால சம்பிரதாயங்களை — ஒழுங்கு விதிகளை — மதித்து நடக்க வேண்டும். இன்றும் இதை அனுசரித்து நடப்போரும் உளர். இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

### செவ்வாய் தோஷம்

திருமணச் சந்தையில் காலடி எடுத்து வைக்கும், பெண் அல்லது மாப்பிள்ளை வீட்டோரையும், தரகர் மாரையும் உலுப்பிக்கொண்டிருக்கும், இக்குற்றம் மிகக் கவனமான முறையில் பல கோணங்களில் இருந்தும் ஆராய்ச்சிசெய்து முடிவெடுக்க வேண்டிய ஒன்றாகும்.

பாவில் நெய் இருப்பது போல் எத்தனையோ விடயங்கள் இதில் பொதிந்துள்ளன. தார் றோட்டில் நல்லெண்ணெயின் மேல் நடப்பது போன்று, மிக அவதானமின்றேல் வழுக்கி விழ நேரிடும்.

சோதிடர்கள், திருமணப் பொருத்தம் பார்க்கும் பொழுது, சதிபதிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய மார்க்கங்களைக் கண்டு அறிந்து நன்மை செய்யக் கடமைப்பட்டவராவார்.

இனிச் சோதிடக் கலையில் அதிக ஆர்வமற்ற வாசக நேயர்களும், இச் செவ்வாய்க் குற்றத்தினை ஓரளவாவது தெரிந்து வைத்து தப்பித்துக் கொள்வதற்கு ஏதுவான, சிறு விளக்கம் கீழே தரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
| கும்பம் | கிரகநிலை | | கடகம் |
| மகரம் | | | சிங்கம் |
| தனு | விருட்சிகம் | துலாம் | கன்னி |

மேற்காட்டப்பட்டுள்ள, கிரக நிலைச் சக்கரத்தில் பன்னிரு (12) இராசிகளும் எழுதப்பட்டுள்ளன.

இனி, லக்கினத்தில் இருந்து கடுமையான தோஷமுள்ள இடங்கள்:- லக்கினம் (உதயச் செவ்வாய்) 7இல், 8இல் செவ்வாய் நிற்பது.

குறைந்த தோஷமுள்ள இடங்கள்:- 2, 4, 12ஆம் இடங்கள். மேற்கொண்டு செவ்வாய் தோஷத்தைப் பற்றி, வரைவிலக்கணம் கூறப்படின், இக்கட்டுரை, தொடர் கதையாக மாறும். ஆகவே விரிவு அஞ்சி இரத்தினச் சுருக்கமாகச் சில விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

செவ்வாய் தோஷம் சில இராசிகளில், கிரக தோஷ பரிகாரம் ஏற்படுகின்றது. சதிபதிகளுக்கு இப்பரிகாரம் ஏற்படின் திருமணம் செய்யலாமென, தேவ கேரளம் எனும் சோதிட நூல், உத்தரவாதம் கொடுக்கிறது. சுக்கிர நாடி எனும் நூலில், இக்குற்றம் விவாகத்தடையை ஏற்படுத்தும்; பாதிப்பு இல்லை எனச் சிலர்(?) கூறுகின்றது. சுபக்கிரக சேர்க்கை — நோக்கு பரிகாரம் தரும் எனச் சில நூல்கள் கூறுகின்றன. செவ்வாய் தோஷம் இவைகளால் சிறிது குறையுமேயொழிய நீங்காது எனச் சில சோதிட நூல் அறிஞர்கள் கருதுகின்றார்கள். செவ்வாய் தோஷ பரிகாரத்துக்கு இன்னும் பல விதிகள் இருக்கின்றன. ஒருவரின் சாதகத்தில் செவ்வாய் தோஷம் இருக்குமேயானால் கண்ணுற்றால், தகுந்த சோதிடரை நாடி அதற்குரிய விளக்கம் — சரியான பொருத்தம் — இருக்கின்றதா எனத் தீர்மானித்து விவாகம் செய்து இன்புற்று இருக்கக் கடவர்.

இலக்கினம் — 7ஆம் இடம் இவைகளில் சில [illegible] மான தீய கோள்கள் (பாபிகள்) இருப்பின், 2 ஆம் இடமான, குடும்பஸ்தானம். 8 ஆம் இடமான மாங்கல்யம் (தாலி) இவைகளில் கடுமையான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு பல கோணங்களிலும் இருந்து சீர்தூக்கிப் பார்த்து முடிவு எடுக்க வேண்டும். செவ்வாய் தோஷத்தைவிட இது அதிக அளவு பாதகமானது எனச் சில நூல்களில் அறியக் கிடக்கின்றது.

திருமணப் பொருத்த விஷயத்தில், நட்சத்திரப் பொருத்தங்களைக் கொண்டு அறிதலிலும் பார்க்க, பெண் — மாப்பிள்ளையின் கிரக நிலைகளைக் கொண்டு அறியும் பொருத்தமே மிக முக்கியமானது. இதை ஆராய்ந்தே திருமண நிச்சயம் செய்ய வேண்டுமெனப் பஞ்சாங்கங்களைக் கணித்த அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இதற்கு, பல சோதிட நூல்களின் அறிவும், அனுபவமும் இன்றியமையாதது. கிரக பாபக் கணிப்பிலும், லக்கினம் — சந்திரன் — சுக்கிரன் மூவரினதும் நிலைகளையும், ஆராய்ந்து புள்ளிகளை வழங்க வேண்டும்.

### எண்சோதிடத்தில் திருமணப் பந்தல்

ஒவ்வொரு திருமணப் பெண்ணும் தனக்குவரப்போகும் கணவன் மன்மதனைப் போல் கட்டழகு—உடல்வாகு—பொருந்தியவனாக வரவேண்டும் என ஆசைப்படுகின்றாள். தாயோ தனது மருமகன் குடிவெறிப்பழக்கம் இல்லாதவனாக, ஒழுக்கசாலியாக—பணம்—பொருள்—பண்டம்—காணி—பூமி வசதிகள் படைத்தவனாக இருக்க வேண்டுமென விரும்புவாள். தகப்பனோ, தனது மருமகன் கல்வியறிவுள்ளவனாக, மதிப்பான உத்தியோகம் கைவரப் பெற்றவனாக அமைய வேண்டுமென விரும்புவார். இதில் ஒன்றும் தவறில்லை. உலக வழக்கமே இதுதான்.

சங்கானையூர் **கனக. குமாரசாமி**

இனி, இத்திருமணப்பந்தல். சதிபதிகளின் பிறப்பு + கூட்டு எண்களுக்கு அதிர்ஷ்டம் தருவதாக இருக்கவேண்டுமல்லவா? பண்டிட் ஸேதுராமன் விதிகளுக்கமைய விவாகம் புரிந்துகொண்டு சுகப்பட விரும்புவோர் திருமணம் செய்து கொள்ள வேண்டிய தினங்கள்:—

| பிறந்த தேதி அல்லது கூட்டு எண் | விவாகம் புரிந்து கொள்ளும் தினத்தின் கூட்டு எண் |
|---|---|
| 1 | 1 |
| 2 | 1 அல்லது 7. |
| 3 | 3 அல்லது 9. |
| 4 | 1 |
| 5 | மற்ற எண்ணுக்கு பொருத்தமான எண் அல்லது மற்றவரது எண்ணுக்கு பொருத்தமான எண் |
| 6 | 6 அல்லது 9. |
| 7 | 1 அல்லது 2. |
| 8 | 1 |
| 9 | 9 3 அல்லது 6. |

கூட்டு எண் 4, 5, அல்லது 8 வரும் தினங்கள் மணம் புரிதல் எந்த எண்ணில் பிறந்தவருக்கும் நன்மை தராது. அத் திகதி 4—எனின், பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டு உபத்திரவம் தரும். 5—எனின் எதிர்பாராதபடி நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விவாக வாழ்க்கை பயனற்ற நிலைக்கு கொண்டு செல்லும். 8 எனின் துர்அதிர்ஷ்டங்கள் தொடரும். இவற்றை அனுசரித்து நடந்து இல்லறம் எனும் நல்லறத்தில் இனிமை காண எல்லாம் வல்ல எம்பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன். ★

## விடைகள்

Vii ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு;-


### இயலுமா?

| | | | |
|---|---|---|---|
| 18 | 99 | 86 | 61 |
| 66 | 81 | 98 | 19 |
| 91 | 16 | 69 | 88 |
| 89 | 68 | 11 | 96 |

### முயலுங்கள் பார்க்கலாம்

(1) இருபத்திரண்டு கனிகள்.
(2) 12 கிலோ.
(3) 8, 12, 5, 20.

### முயன்று பாருங்கள்




## வடக்கு...

(II ஆம் பக்கத் தொடர்)

துரதிர்ஷ்டவசமானது என்று தாமே கவலை தெரிவித்தார்.

★ போரினால் சின்னாபின்னப்பட்டுள்ள வடபகுதியில் சிவில் நிர்வாகம் நன்றாக நடைபெறுகிறது. அத்துடன் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் உள்ளூராட்சி தேர்தல்கள்நடத்தப்பட்டன. இப்பகுதியில் 52 சதவீதமானோர் வாக்களித்தனர்.

★ யாழ்ப்பாணத்து மக்களுக்கு மின்சாரம், தொலைபேசி, தண்ணீர், கல்விவசதி போன்ற அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ குடா நாட்டில் மக்களுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையில் சமநிலைபேணும் நடவடிக்கையில் அரசு வெற்றி கண்டுள்ளது. [illegible] கும் ஒவ்வொரு அடியும் நிதி உதவி பெறும் நோக்கத்துடன் திட்டத்துடன் தான் என்பதை பீரிஸின் விளக்கம் புலனாக்குகிறது அல்லவா? சபாஷ்!

கடந்த சில வருடங்களைப் போலவே அரசின் தீர்வு முயற்சியில் உதவி வழங்கும் நாடுகள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

ஆனால் பதினைந்து வருடங்களாக தொடரும் போரை முடிவுக்குக்கொண்டு வரவேண்டும் என்று எல்லாத் தரப்பினருக்கும் புத்திமதி கூறியுள்ளனர்.

இந்தப் புத்திமதியை முதலில் கவனத்தில் எடுக்க வேண்டிய பொறுப்பு அரசினுடையதே. உதவி வழங்கும் நாடுகளின் பண உதவி போருக்குப் பயன் படுத்தப்பட மாட்டாது என்று கூறுவதற்குப் பதிலாக போரைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பீரிஸ் கூறியிருந்தால் அவரது திறமை மேலும் மெச்சப்பட்டிருக்கும்!

## குடாநாட்டில்...

(VI ஆம் பக்கத் தொடர்)

களால் ஓர் அசாதாரண முதிர்ச்சிமாணவர்களிடையே அவதானிக்கப்பட்டுள்ளது. அறிவுசாராத — ஆரோக்கிய மற்ற — இந்த மனோவியல் முதிர்ச்சி பாலியல் பக்குவம் அடையும் பருவ வயதை வெகுவாகக் குறைத்து வருகிறது. எனவே பாலியல் ரீதியான சந்தேகங்கள், குழப்பங்கள், தேடுதல்கள் மாணவர் சமூகத்தின் மத்தியில் அதிகரித்து வருவதாக அவர் கூறுகிறார். எனவே அவர்களுக்கு பாலியல் ரீதியான வழிகாட்டல்கள் அளிக்கப்பட வேண்டிய அவசியம் என்ற கருத்தும்உருவாகி வருகிறது.

பாலியல் தொடர்பான விழிப்புணர்வை, கல்வித் திட்டத்தை நேரடியாக மாணவர் மத்தியில் எடுத்துச் செல்லும் திட்டங்கள் ஆலோசனை மட்டத்திலேயே இன்னமும் இருந்து வருகின்றன. அவற்றை எவ்வாறு கையாள்வது என்பதில் சமூக மருத்துவர்களிடையே தயக்கம் நீடிப்பது தெரிகிறது.

பாலியலைப் பற்றி, எய்ட்ஸைப்பற்றி பிள்ளைகளுடன் பெற்றோரும், மாணவர்களுடன் ஆசிரியர்களும் மெல்ல மெல்லப் பேசவேண்டிய தேவை தவிர்க்கமுடியாததாகி வருவதை ஒருசாரார் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் எய்ட்ஸ் போன்ற நோய்கள் எமது சமூகத்துக்குள் பாரதூரமாக உருவெடுக்காத நிலையில் அவசரப்பட்டு இத்தகைய முயற்சிகளில் இறங்குவது எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என மற்றொரு சாரார் அஞ்சுகின்றனர்.

ஒரு நோய் சமூகத்தில் தீவிரமாகப் பரவவுள்ளது என்ற எச்சரிக்கையை விடுப்பதற்கு முன் அந்நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு குறித்த எண்ணிக்கையினர் முதலில் இனங் காணப்பட்டிருக்க வேண்டும் என்பது மருத்துவவிதி. குடாநாட்டில் 'எய்டஸ்' தொற்றியோரின் எண்ணிக்கை அது குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு இல்லை என்று கூறப்படுவதை யாழ். பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை டாக்டர்கள் மறுக்கின்றனர். இதுஒரு நீண்டகால ஆபத்து, பதுங்கி இருக்கும் ஆபத்து என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ★

(வளரும்)

## இந்தோனேசி...

(XII ஆம் பக்கத்தொடர்)

எனினும் இவை எல்லாம் மக்களை திருப்திப்படுத்துமா என்பது சந்தேகமே.

ஹபீபியினால் ஆட்சியை நடத்த முடியாத நிலை உருவானால் இராணுவமே அதிகாரத்தை பொறுப்பேற்கும் ஆபத்து இந்தோனேசியாவில் உருவாகி வருகிறது.

இந்தோனேசிய அரசியலில் ஆயுதப் படையினரின் செல்வாக்கு கூடுதலாக இருந்து வருகிறது.

இந்தோனேசிய ஆயுதப் படைகளின் தளபதி ஜெனரல் விரான்ரோ பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்து வருகிறார்.

இந்தோனேசியாவில் முழு அளவிலான ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படவேண்டுமானால் அது ஈரானிய புரட்சி பாணியிலேயே சாத்தியம். 1979 புரட்சி, ஈரானிய மன்னர் ஷாவினது—அரச குடும்பத்தினது—எந்த ஒரு நலனையும் விட்டுவைக்கவில்லை.

ஆகவே இந்தோனேசியாவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் நாட்டு மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்கப்போவதில்லை.

சுஹார்ட்டோ பதவி துறந்தாலும் சுஹார்ட்டோவின் சகாக்களும் சுஹார்ட்டோவின் குடும்பமும் நாட்டின் அதிகாரத்தில் பெரும் பங்கு வகிக்கும் வரை இந்தோனேசியாவில் அமைதி ஏற்படாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம்

## பிரச்சினைக்கு தீர்வாகுமா?

## சுஹார்ட்டோவின் ஆதிக்கம் முற்றாக ஒழிந்தாலேயே அமைதி திரும்பும்

சுஹார்ட்டோ பதவி துறந்த பின்னர் இந்தோனேசியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் சில அரசியல் சீர்திருத்தங்களை அறிவித்துள்ள போதிலும் புதிய அரசு பதவியில் தொடர்ந்து நீடிக்குமா என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

அரசியல், பொருளாதார சீர் திருத்தங்களைக் கோரியும் —

சுஹாட்டோவைப் பதவி விலகக்கோரியும் —

இம்மாதம் முற்பகுதியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள், வன்முறைகளை அடுத்து சுஹார்ட்டோ பதவி விலகியது தெரிந்ததே.

எனினும் தனது இ த்துக்கு தனது அமைச்சர்களில் ஒருவரும் தனது நெருங்கிய சகாவுமான பச்ஷருதீன் யூசுப் ஹபீபி (Bacharuddin Jusuf Habibie) என்பவரை சுஹார்ட்டோ நியமித்துள்ளார். —

நாட்டின் சொத்தில் பெரும் ஏகபோகம் வகித்துவரும் சுஹார்ட்டோவின் குடும்பத்துடனும் — சுஹ ர்ட்டோவுடனும் —

மிகவும் நெருங்கிய தொடர்புடைவர் புதிய ஜனாதிபதி ஹபீபி

அவரினால் இந்தோனேசிய மக்களின் அபிலாசைகளை முழு அளவில் பூர்த்தி செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

ஹபீபி 31 பேர் கொண்ட புதிய அமைச்சரவையை அமைத்துள்ளார்.

அதில் சுஹார்ட்டோவின் மகள் உட்பட சுஹார்ட்டோவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் பலர் இன்னும் அங்கம் வகிக்கிறார்கள்.

ஆகவே இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம், இந்தோனேசிய மக்கள் அரசியல், பொருளாதாரக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய போராட்டத்தை சிறிது பின்தள்ளி வைத்திருக்கிறது என்றே கூறவேண்டும்.

ஹபீபி புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடன் அவரைப் பதவி துறக்கக் கோரியும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

எனினும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் இயக்கங்களும், மற்றும் ஜனநாயக ஆதரவுச் சக்திகளும் தற்பொழுது சிறிது பொறுத்திருந்து பார்க்க முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தோனேசியாவில் தற்பொழுது ஓரளவு அமைதி நிலவுகிறது.

சுஹார்ட்டோ கடந்த மார்ச் மாதம் மேலும் 5வருட காலம் ஆட்சி செய்வதற்கு— அதாவது மற்றொரு 'தவணைக் காலத்துக்கு —பதவி ஏற்றிருந்தார்.

அவர் பதவி ஏற்ற சமயம், அவர் பதவி துறக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் இந்தோனேசியாவில் வலுப்பெற்றிருந்தன.

அவர் அப்பொழுதே ஆட்சியை ஒப்படைத்திருந்தால் இந்தோனேசியாவில் இரத்தக்களரியைத் தவிர்த்திருக்கலாம்.

### புதிய அரசின் நடவடிக்கைகள்

புதிய அரசாங்கம் மக்களை அமைதிப்படுத்தும் முயற்சியாக சில நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

எனினும் அவை மக்களைத் திருத்திப்படுத்தும் என்று கூறுவதற்கில்லை.

இந்தோனேசியாவில் விரைவில் தேர்தல் நடத்தப் போவதாக புதிய அரசாங்கம் அறிவித்துள்ளது. அத்துடன் தேர்தல் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வரப் போவதாகவும் கூறப்படுகிறது.

சுஹார்ட்டோவுக்கு முன்னர் பதவி வகித்த சுகார்னோவின் ஆட்சிக் காலத்திலும் இந்தோனேசிய மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை.

### கைதிகள் விடுவிப்பு

தற்போது சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளில் 200 பேரை முதல் கட்டமாக விடுதலை செய்வதற்கும் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிரபல அதிருப்தியாளர்களான மச்ரார் பக்பாஹன் என்பவரையும் சிறீபின்ராங் பமுங்காஸ் என்பவரையும் விடுதலை செய்வதாக அரசு அறிவித்துள்ளது.


இந்தோனேசியாவின் முன்னணி தொழிற்சங்கம் ஒன்றின் தலைவர் பக்பாஹன்.

அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் 1994 ஆம் ஆண்டு இவருக்கு 34 மாத காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை காலம் முடிந்தும் அவர் விடுவிக்கப்படவில்லை.

இந்தோனேசியாவில் தொழிற் சங்கங்கள் இயங்குகின்றன. ஆனால் அரசின் அங்கீகாரம் இல்லை.

முன்னாள் சட்டசபை உறுப்பினர் பமுங்காஸ்.

சுஹார்ட்டோவை அவதூறு செய்தது, கேலி செய்தது போன்ற குற்றங்களுக்காக அதே அளவு கால சிறைத்தண்டனை இவருக்கும் விதிக்கப்பட்டுள்ளது.



இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி ஹபீபி பதவிப் பிரமாணம் செய்யும் காட்சி அருகில் முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவும் காணப்படுகிறார்.

1966 ஆம் ஆண்டு சுஹார்ட்டோ பதவி ஏற்ற பின்னர் உருவாக்கிய அரசமைப்புப்படி இந்தோனேசிய நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை ஆயிரம்.

இதில் 500 பேர் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

ஏனைய 500 பேரும் ராணுவம், மற்றும் கல்விமான்கள் மத்தியில் இருந்து ஜனாதிபதியால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர்.

ஆகவே தற்போதைய தேர்தல் சட்டத்தில் மாற்றம் கொண்டு வராவிடில் ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலம் தொடர்ந்து இருக்கும்.

அத்துடன் தேர்தலில் ஆளும் கோல்கார் கட்சி உட்பட மூன்று கட்சிகள் மட்டுமே போட்டியிட இந்தோனேசிய தேர்தல் சட்டம் தற்போது இடம் அளிக்கிறது. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தேர்தல் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னரே மட்டுப்படுத்தப்படுகின்றன.

தமது அரசியல் எதிரிகளை மிகவும் கடுமையாக அடக்குவதில் சுஹார்ட்டோ தீவிர கவனம் செலுத்தி வந்தார்.

மூன்று தசாப்தங்களுக்கு மேல் கொங்கோவில் ஆட்சியில் இருந்த மொபுட்டுவும் இதே வழிகளையே பின்பற்றி வந்தார். ஆனால் உள்நாட்டு யுத்தம் மொபுட்டுவின் ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்டது. வெளிநாடு ஒன்றில் அஞ்ஞாதவாசம் செய்து வந்த மொபுட்டு தற்பொழுது இறந்துவிட்டார்.

### சுஹார்ட்டோ குடும்பத்தின் சொத்து

சுஹார்ட்டோவின் குடும்பத்தவர்களின் சொத்தில் ஒரு பகுதியை அரசுடைமை ஆக்கவும்—

சமீபத்திய ஆர்ப்பாட்டங்களின்போது பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழக்கக் காரணமாக இருந்த 14 இராணுவத்தினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும்—

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச நிர்ப்பந்தத்தை எதிர்நோக்கும் இஸ்ரேல்

## ஒஸ்லோ ஒப்பந்தம் ஆட்டம் காண்கிறது

1948 மே 15 ஆம் திகதி இஸ்ரேல் சுதந்திர பிரகடனம் செய்தது. தற்பொழுது 50 ஆண்டுகள் கடந்து விட்டன.

யுத்தம், நெருக்கடி, வன்செயல்கள், பயங்கரவாதம் யுத்த நிறுத்தம், ஒப்பந்தம், பதற்றநிலை என்று கடந்த 50 வருட காலத்திலும் எத்தனையோ கட்டங்களை மத்திய கிழக்கு க ந்து வந்து விட்டது.

ஆனால் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு இன்னும் நிரந்தர தீர்வு காணும் வாய்ப்பு அதி தூரத்திலேயே உள்ளது.

1993 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தம் இஸ்ரேல் பிரதமர் நத்தன்யாகுவின் பிடிவாத போக்குக் காரணமாக தோல்வி அடையும் நிலையில் இருந்து வருகிறது.

இந்த ஒப்பந்தத்தைச் செய்த இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் யிட்சாக் ரபீன் தீவிரவாத யூத குடியேற்றக்காரர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்.

அதன்பின் பதவிக்கு வந்த மதவாத விக்குட் கட்சித் தலைவர் நத்தன்யாகு ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு மறுக்கிறார்.

இஸ்ரேல் — பலஸ்தீன தலைவர்கள் மீண்டும் சமாதானப்பேச்சு நடத்துவதற்கு அமெரிக்கா தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு பார்த்து விட்டது. ஆனால் காரியம் கைகூடவில்லை.

தற்பொழுது சமாதான முயற்சியில் இருந்து அமெரிக்கா பின்வாங்கும் நிலை உருவாகி வருகிறது. மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பாக சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டி இஸ்ரேல் மீது சர்வதேச நிர்ப்பந்தம் ஒன்றைத் திணித்து அதனை பணிய வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச நிர்ப்பந்தம் என்று சொல்லும்போது பொருளாதாரத் தடைகளும் அடங்கும். ஏற்கனவே ஐரோப்பிய யூனியன் யூத குடியிருப்புப் பகுதிகளில் உற்பத்தியாகும் பொருள்களை கொள்வனவு செய்யப்போவதில்லை என்று எச்சரித்துள்ளது

### படை வாபஸுக்கு மறுப்பு

தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முக்கிய காரணம் மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெறுவதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையே.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பிரகாரம் பலஸ்தீன சுயாட்சிக்கு உட்பட்ட மேற்குக் கரையில் இருந்து மூன்று கட்டங்களாக மேலும் 13 சதவீதமான பகுதியில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் என்று அமெரிக்கா கோருகிறது. இஸ்ரேல் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

ஆகக்கூடியது 9 சதவீத பகுதியில் இருந்து மட்டுமே படைகளை வாபஸ் பெற முடியும் என்று இஸ்ரேல் கூறுகிறது. பேச்சுவார்த்தை முறிந்து போனதுக்கு இதுவே காரணம்.

### சர்வதேச மாநாடு

முட்டுக்கட்டையை அகற்றுவதற்கு சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டும் யோசனையை எகிப்திய ஜனாதிபதி முபாரக் பிரேஞ்சு ஜனாதிபதி சிராக் ஆகியோர் முன் வைத்துள்ளனர். ஆனால் சர்வதேச மாநாடு கூட்டும் யோசனையை இஸ்ரேல் நிராகரித்து விட்டது.

தனது எல்லையில் தனக்கு அச்சுறுத்தல் தரக்கூடிய ஈராக், ஈரான் போன்ற ஒரு நாடு உருவாவதை இஸ்ரேல் ஏற்க மாட்டாது என்று நத்தன்யாகு கூறுகிறார்.

பலஸ்தீன சுயாட்சிக்கு உட்பட்ட மேற்குக் கரையில் இருந்தும் காஸாவில் இருந்தும் இஸ்ரேல் தனது படைகளை முற்றாக வாபஸ் பெற்று விட்டால் அது இஸ்ரேலுக்கே ஆபத்தாக முடியும் என்று கருதப்படுகிறது.

பல யுத்தங்கள், ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத நிலையில் 1987 ஆம் ஆண்டு மேற்குக் கரையிலும் காஸாவிலும் உள்ள பலஸதீனர்கள் ''Intifeda'' என்னும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு ஒப்பந்தம் ஒன்று அவசியம் என்ற உணர்வை இந்த எழுச்சிப் போராட்டமே உணர்த்தியது. ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கும் இதுவே வழிவகுத்தது.

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படாவிடின் மீண்டும் மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக பலஸ்தீன தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

மத்திய கிழக்கு சமாதானம் மீண்டும் பின்னோக்கிச் செல்வதற்கு ஒஸ்லோவில் ஏற்படுத்தப்பட்ட [illegible] தமே காரணம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org